IATA SKY WINGS TRAVEL & TOURS LTD
"WHERE THE SUN NEVER SETS"
Cheapest Worldwide Fares with the Best Service
We are authorised main agents for Srilankan, Jet Airways, Qatar, Kuwait, Oman...
Reservation: Mob: 07850876921
02086729111
We accept all major credit cards
Colombo £170 + Taxes
Visa Service to Srilanka, Australia, India & USA
119,Tooting High street, London, SW17 0SY

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 10 ♦ ISSUE - 219 ♦ FRIDAY 06 JUNE 2014

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• Personal injury (Neck,Back & Shoulder Pain)
• Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




• புதிதாக அகதி அந்தஸ்த்து கோருபவர்கள், விசா காலவதியாகி மற்றும் சட்டவிரோதமாக தங்கி இருப்போர்.
• ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி Legacy (லெகசி) திட்டத்தின் கீழ் எவ்வித முடிவின்றி நீண்ட காலமாக காத்திருப்போர்.
• கைது செய்தல், தடுத்து வைத்தல், நாட்டுக்குத் திருப்பி அனுப்புதலை எதிர்கொள்வோர்
• அனுபவமுள்ள சட்டத்தரணிகள் குழுவினரால் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்.
இலவச ஆலோசனைக்கு தொடர்பு கொள்ளவும்
வின்சென்ட் சொலிசிட்டர்
07870 763 570 / 020 8574 0666
11-13, South Road, Southall UB1 1SU
(ஹிமாலயா தியேட்டருக்கு எதிராக)

FM Carpets
Special Offers for Landlord & Estate Agents
Huge Stock Variety of Colours Fast Fitting
வீட்டிற்கும் தொழில் நிலையங்களுக்கும் ஏற்றவை
MANY OFFERS IN STORE www.fmcarpets.com
Tel : 020 8252 6433 / 07946 566 885
120 Aldborough Road South, Seven Kings, Illford, IG3 8EZ

Money Save Solution
பணக் கவலையா? கடன் பிரச்சினையா?
உங்களின் மாதாந்த கட்டுத்தொகையைச் செலுத்தப் போராடுகிறீர்களா? கவலையை விடுங்கள்.
கடன்காரர்கள் வீட்டிலும் வேலையிலும் துரத்துகிறார்களா?
மாதத்தின் பாதியில் எதுவுமே கையில் மிஞ்சவில்லையா?
இந்த அழுத்தம் உங்களை சோர்வடையச் செய்கிறதா?
எமது அனுபவம் உங்களுக்கு உதவும். மேலும் கடன் எதுவும் வாங்காமல் உங்களால் செலுத்தக்கூடிய ஒரு சிறிய தொகையை மாதாந்தக் கட்டணமாக கட்ட ஒழுங்கு செய்து தரப்படும்.
Debit Management (DMP)
Individual Voluntary Arrangement (IVA)
Bankruptucy Assistance
Payment Protection Insurance (PPI)
Life Insurance & Critical Insurance
08001218193 or 07949455366

SURREY PAWNBROKERS LTD
நகை அடைவு சேவை
Interest Rate Start from
£1000 → 2.5 %
We pay maximum gold price for your Jewellery for 1 grams around £21.00
Money transfer service from sri lanka to UK
WE BUY GOLD - BEST PRICE PAID
WE BUY EURO --- BEST RATE PAID
94 Tolworth Broadway, Surbiton, KT6 7HT
P : 020 8399 9176 M: 09847 579 682

We may have herbal solutions for your problems !!
உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா?
காலத்தை விணடிக்காமல் தொடர்பு கொள்ளுங்கள்.
ஆண்மைக் குறைவுக்கான சிகிச்சைகளும் எம்மிடம் உண்டு
சகலவிதமான மருத்துவ ஆலோசனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்
Herbal Aid Health Centre
10 Park Avenue, Southall, Middx, UB1 3AQ
Tel: 020 8843 0330
www.herbalaidhealthcentre.co.uk | herbalaid@hotmail.co.uk

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

சென்னையிலிருந்து UK விசா
தொழிலாளர் விசா
தங்கியிருக்கும் விசா
மாணவர் விசா
சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

# Part qualified Accountant

## on 6 month contract

**Key Responsibilities:**

- Must be able to prepare up to Trial Balance in Sage without supervision.
- Good knowledge in closing the books and preparing the Statutory Accounts
- Prepare VAT Returns and dealing with HMRC
- Managing and supporting junior staff
- Meeting with clients
- Undertake ad-hoc specialist tasks if required.

**Attributes:**

- Part qualification of CIMA/ACCA
- Minimum of 3 Years experience in a reputable practice is vital for this role
- Working under pressure and long hours to meet tight deadlines.
- Excellent communication skill is a MUST.
- Advance Excel skill is important.

**AIKON ACCOUNTANTS LTD**

Please forward the CV to accounts@a-accountants.com

**United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்**



C1, B1 & B2 Test

**Our services:**

- ESOL with citizenship (B 1)
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம். சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

£ 150 .00 மட்டுமே
* Including Everything

Certificate only in six days

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

Head Office - Croydon Tel: 0208 1509 953 | 0753 8933 261
14, Lombard Business Park, 2 Purley Way, Croydon CR0 3JP.

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

# UK COOL

AND SHOPFITTING Ltd.



168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

MERLYN KUDOS hansgrohe Hudson Reed

# JSN HEAT SUPPLIES LTD

KUDOS GROHE GRUNDFOS

**WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS**

SINGLE LEVER BATH MIXER
LIMITED OFFER
£12.90
inc. VAT

NEPTUNE SINGLE LEVER SINK MIXER
LIMITED OFFER
£18.90
inc. VAT

SINGLE LEVER BATH/SHOWER
LIMITED OFFER
£28.00
inc. VAT

LED LAMP BULB WITH FITTING FIRE-RATE DOWN LIGHT
Starts from
£14
inc. VAT

XCLUSIVE FULL SUITE
1500/1600/1700 x 700mm single ended bath, 1700mm front panel, wc inc. standard seat, 550mm basin & ped, basin mixer, bath mixer
LIMITED OFFER
£230
inc. VAT



KITCHEN AND BATHROOM FREE DESIGN AND QUOTATION. FITTING SERVICE AVAILALBLE.

1200mm 6MM SAFETY GLASS CLEAR SEALED LIFETIME GUARANTEE SLIDING DOOR
£210 inc. VAT

FAST FIT 8.5KW ELECTRIC SHOWER
Starts from
£65
inc. VAT

ALL KINDS OF BOILER CONTROLS AND PARTS AVAILABLE AT SPECIAL PRICES

COMPACT FURNITURE PACK
550x300mm basin unit, 500 x 300mm WC unit, Siamp Tru-Flow concealed Cistern, Rak compact pan & standard seat.
£290
inc. VAT

GERMAN STEEL EUROWA BATH 170 X 70MM
£90
inc. VAT

JSN HEAT SUPPLIES LTD
• PLUMBING • ELECTRICALS
• BOILERS • RADIATORS
ALL AT DISCOUNT PRICES

AQUALISA Roca Armitage Shanks MAIN GROHE Hudson Reed Vaillant AQUALUX mira Glow-worm ARISTON Ideal Standard KESTON saneux

TEL: 020 8427 0553

• BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: 020 8427 0553

# தூயவம்




## ஐரோப்பாவிலும் பரவவேண்டும்..

அன்புள்ள ஆசிரியருக்கு...

கனடாவில் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ள ஒரு பேப்பரை கனேடிய தமிழ் மக்கள் நிச்சயம் வரவேற்பார்கள். ஏனெனில் முன்னர் **ஒரு பேப்பர்** கனடாவில் வெளிவந்த போது அதற்கான மவுசு நிறையவே இருந்ததை அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. ஐரோப்பாவிலும் படிப்படியாக **ஒரு பேப்பர்** பரவ நல்ல உள்ளங்கள் உதவுவார்கள் என நம்புகிறோம்.

*- அன்புடன் உமா மகாலிங்கம்*

## தமிழர் கடலும்.. புலிகளும்...

வரலாற்று காலத்தில் இருந்து கடலோடிகளாக சிறந்து விளங்கிய தமிழர்களின் ஆதிக்கம் தமிழர் கடலில் நிலைத்து நின்ற காரணிகளை ஆராய்ந்து பார்த்தால் அவர்களின் கடல் சார்ந்த அறிதல் வியக்க வைப்பவை.

தற்கால வரலாற்று காவியங்களான புலிகள் தமிழர் கடலில் தங்களை சரியாக நிலை நிறுத்திக் கொண்டார்கள். ஆம் அவர்கள் தமிழர் கடலை நன்கு புரிந்துவைத்தவர்கள்.

புலிகளின் எழுச்சி மிகு காலத்தில் தமிழக, ஈழ மீனவர்கள் கடும் போர் ஏற்பட்ட காலத்தில் கூட அச்சமின்றி தமிழர் கடலில் ஓடி திளைத்தார்கள். அவர்களுக்கு அரணாக கடற்புலிகள், கடற் கரும்புலிகள் நின்றார்கள்.

*- உமர்கயான்*

## தேசியக்கொடி

பிரித்தானிய தமிழர் பேரவை தமிழீழ தேசியக்கொடி பற்றிய விளக்கத்தை 23.05.2014 ஒருபேப்பரில் பிரசுரித்ததை நான் முற்றாக ஆமோதிக்கின்றேன். இவ்விடயம் பற்றி 08.06.2012ல் ஒரு பேப்பருக்கு அந்தக்கொடியை தற்காலிகமாக, அதாவது சர்வதேச அங்கிகாரம் கிடைக்கும் வரை தாயக மக்களைக் கருத்தில் கொண்டு, அடிப்பெட்டிக்குள் வையுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். எனது கருத்தை எனது நண்பர்கள் வரவேற்றார்கள். ஆனால் **ஒரு பேப்பர்** , முக்கியமாக தங்கை சுகி அவர்கள் 'மழை என்றால் விரித்துப் பிடிக்கிறதுக்கும் வெயில் என்றால் கமக்கட்டுக்குள் வைப்பதுக்கும் இது குடை இல்லை' என்று காரசாரமாக, சசிதர் மகேஸ்வரன் எழுதியது போன்று புலிக்கொடி வேறு, தேசியக் கொடி வேறு என்று குதக்கல் நியாயத்தை எழுதியிருந்தார்.

இது ஒரு சில பொலிஸ்காரன்கள் கவனத்தில் எடுக்காவிட்டாலும் இந் நாட்டு சட்டத்துக்கு முரணாணதே. ஒரு வேளை இக்கொடி பிடிக்கும் இங்குள்ள தமிழ் அமைப்புக்களும் தடை செய்யப்படவும் வாய்ப்பு உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பி.த.பே குறிப்பிட்டது போன்று எமது உறவுகளைக் காப்பாற்ற வேண்டுமாயின் எமக்கு சர்வதேச ஆதரவு அவசியமானது. அதற்காக நாம் எமது உணர்வுகளை அடக்கி சில அர்ப்பணிப்ணிப்புகளைச் செய்து எமது அறிவை ஆயுதமாகச் செய்யப் பழக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

முடியுமானால் புலம்பெயர்ந்த நாடுகளில் ஜனநாயகரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நாடுகடந்த அரசாங்கக் கொடியைப் பிடிக்கலாம் என்று எண்ணுகின்றேன்.

*த. செல்வரத்தினம்*

## பொருமுகிறார் கம்பவாரிதி

வடமாகாணசபை முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு ஆதரவு கொடுத்தவர்களில் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களும் ஒருவர். முதலமைச்சர் பதவி ஏற்றதை பெருவிழாவாக எடுக்க ஜெயராஜ் கோலாகலமாக கொண்டாட முனைந்த போது விக்கினேஸ்வரன் தடுத்துவிட்டார். ஆனால் இப்போது விக்கினேஸ்வரனினால் எதுவும் சாதிக்க முடியவில்லை என வித்தியாதரனின் இணையதளத்தில் குற்றப் பத்திரிகையை பிரசுரித்திருக்கிறார். மக்கள்களே, ஒன்றுக்கும் உதவாத மாகாண சபையை வைத்துக் கொண்டு அந்தாள் என்னத்தைத்தான் சாதிக்கிறது ?

*- அழகானந்தன்*

## விருது கொடுத்துச் சாதிப்பவர்கள்

உங்களால் சாதிக்க முடியுதோ இல்லையோ கவலைப்பட வேண்டாம் நீங்களே மற்றவர்களுக்கு விருது கொடுத்து உங்களை பிரபலப்படுத்திக் கொள்ளலாம். இப்பிடித்தான் இஞ்ச கொஞ்சப்பேர் 'சாதனைத் தமிழர்கள்' என்று விருது கொடுக்கும் விழா எடுக்கப் போகிறார்களாம். அது சரி தம்பியவை விருது கொடுக்கிறது உங்களுக்கு ஒரு தகுதி வேண்டாமோ என்று கேட்டால், இதுக்கென்ன அண்ணை தகுதி வேணும் பாத்து எங்களுக்கு தெரிஞ்ச ஆக்களுக்கு விருதை குடுத்திட்டம் எண்டால் அவையளும் எங்களை கவனிப்பினம் கைக்கு நட்டமில்லை என்கிறார்கள்.

*- சிறிவத்சன்*

## கடுப்பில் இருக்கிறாராம் மகிந்த

மோடியின் அழைப்பு வந்ததுதான் தாமதம் இந்தியாவிற்கு, யோகேஸ்வரி பற்குணம் போன்ற குடிமைகளுடன் போய்ச் சேர்ந்த மகிந்தவிற்கு அங்கு சரியான மரியாதை கிடைக்கவில்லையாம். போதக் குறைக்கு பதின்மூன்றாம் திருத்தத்தை அமுல்படுத்துமாறும் மோடி கேட்டுவிட்டாரம். கடுப்பில் திரிகிறாராம் மகிந்த. இனி அடிக்கடி திருப்பதிக்கு போகிறேன், சாஞ்சிக்கு போகிறேன் என்று தலயாத்திரைக்கு போக முடியாது என்பது அவர் கடுப்படைந்ததிற்கு இன்னொரு காரணமாம்.

*- இணுவை சி. ரங்கன்*

## சசிதரின் தெளிவான விளக்கம்

கடந்த **ஒரு பேப்பர்** ல் சசிதர் மகேஸ்வரன் எழுதிய 'அடையாளமற்ற அரசியல்' கட்டுரையில் தேசியக் கொடி தொடர்பான சர்ச்சைகளுக்கு தெளிவான விளக்கமளிக்கப்பட்டுள்ளது. எமது தேசிய அடையாளங்களை பாதுகாப்பதில் இளைய தலைமுறையினர் காட்டும் அக்கறை எனக்கு மகிழ்வைத் தருகிறது.

முன்னைய தலைமுறையினர் இன்னமும் அடிமை மனப்பாங்குடன் வாழ்வதனால் அவர்களுக்கு இளைவர்களை புரிந்துகொள்ள முடியவில்லை என நம்புகிறேன்.

*- கயல்விழி*

## எம்மவர்களுக்கு வாக்களிப்போம்!

ஐந்துலட்சத்திற்குமேல் கனடாவில் வாழ்கின்றோம் ஆனால் அரசியல் மட்டத்தில் எமது பிரதிநிதித்துவம் இல்லை குறைந்தது 4 கவுன்சிலர்கள் தமிழர்கள் இருக்கவேண்டும்.

2 மாகாணசபை உறுப்பினர்கள் ஆவது இருக்கவேண்டும். ஆனால் இதுரை காலமும் தமிழர்களின் பிரதிநிதிகள் என தங்களை அடையாளப் படுத்தியவர்கள் இதனை மறந்து விட்டனர் அல்லது அக்கறைப்படுத்தவில்லை. இன்று நிலமை மாறி தாங்களாகவே தாங்கள் அந்த கடமையினை தங்கள் கைகளில் எடுத்து ஒரு சில தமிழ் சகோதரர்கள் களமிறங்கியுள்ளனர். இவர்களுக்கு நாம் ஆதரவளிக்க வேண்டும்.

*- பாலன் அழகரத்தினம்*

*உங்கள் கருத்துக்களுக்கு.....*
*Tel : 020 7043 4314*

# செய்தியாளரைக் கட்டுப்படுத்தும் விக்னேஸ்வரனின் முடிவிற்கு சர்வதேச தமிழ் ஊடகவியலாளர்கள் சங்கம் கண்டனம்

ஊடகவியலாளர்கள் செய்திகளை சேகரிப்பதற்காக தனது அலுவலகத்திற்கு வருவதற்கு இனி அனுமதிக்கப்படமாட்டாது என வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்அறிவித்திருப்பது ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கை என்றும் பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையை மீறும் ஒரு செயல் என்றும் லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர்கள் சங்கம் கண்டித்திருக்கிறது.

வட மாகாண சபை தொடர்பிலான பொதுமக்களின் அக்கறைக்குரிய விடயங்கள் பற்றி நேரடியாக சென்று சரியான முறையில் உள்ளதை உள்ளபடி அறிக்கையிடுவதற்கு ஊடகவியலாளர்கள் முதலமைச்சரின் அலுவலகத்திற்கு நேரடியாக சென்று தகவல்களை உறுதிப்படுதித்திக் கொள்வது அவர்களது முக்கியமான தொழில்சார் கடமைகளில் ஒன்று என்றும் தெரிவித்திருக்கும் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர்கள் சங்கம், ஆதலால் முதலமைச்சர் தனது தீர்மானத்தினை மறுபரிசீலனை செய்து ஊடகவியலாளர்கள் வழமை போல நேரடியாக அங்கு சென்று சுயாதீனமாக தகவல் சேகரிக்க அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது.

இது தொடர்பில் சர்வதேச ஊடகவியலாளர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்ச்சைக்குரிய வட மாகாண சபை அமைக்கப்பட்ட காலம் முதல், வட மாகாண ஊடகவியலாளர்கள் தமது சுயாதீன செய்தி அறிக்கைகையிடல்கள் மூலம், எந்த நிலையில்இந்த மாகாண சபை செயற்படுகிறது, எந்தளவிற்கு மக்களின் தேவைகளை இந்த சபையினால் பூர்த்தி செய்ய முடிந்திருக்கிறது, அதன் அதிகார வரையறைகள், குறைபாடுகள், சவால்கள் மற்றும் அதன் பொருத்தப்பாடு என்பவை என்ன என்ற யதார்த்த்த நிலையினை சிறந்த முறையில் வெளிப்படுதித்தி வந்துள்ளனர்.

ஆனால், இந்த சுயாதீன தகவல் சேகரிப்பிற்கு தடை ஏற்படுத்தி தகவல் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வகையில், செய்திகள் இனிமேல் செய்தி ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்திருப்பதானது, வடிகட்டிய தகவல்களை மட்டும் வழங்கி உண்மை நிலைமையினை மூடிமறைத்து ஒரு போலியான அரசியல் கருத்து வினைப்பாட்டை உருவாக்கும் ஆபத்தினை கொண்டிருக்கிறது.

மாகாணசபையின் செயற்பாடுகள் மட்டுமல்லாது அதன் போதாமைகள், அதிகாரம் மறுக்கப்பட்டுள்ளமை போன்ற விடயங்களை சர்வதேச சமூகம் அறிந்து கொள்ள வேண்டிய நிலையில் செய்தியாளர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு மாகாணசபை பற்றிய தவறான கருத்துருவாக்கத்தை உருவாக்கவே பயன்படும் என சர்வதேச ஊடகவியலாளர் சங்கம் கருதுகிறது.

ஆகையால், முதலமைச்சர் தனது முடிவை மறுபரிசீலனை செய்து ஊடகவியலாளர்களின் சுயாதீனமான செய்தி சேகரிப்பிற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400




Head Office: 694-712, London Road, Hounslow, TW3 1PG (SATNV TW31PX)
0207 099 2400

➡ Life in the UK Preparation Course
B1 Speaking and Listening
- All Applicants after 28th October 2013
- Indefinite Leave to Remain (ILR)
- British Passport / Naturalisation

➡ IESOL Diploma (A1, A2, B1, B2, C1)
- Spouse Visa English Test
- Student Visa English Test
- Work Permit English Test

OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE & WE TRAIN YOU UNTIL YOU PASS

New rules applicable from October 28th

for British Citizenship and Indefinite Leave to Remain (ILR)

FREE INITIAL ASSESSMENT

Other Centres: Hounslow High Street, Wembley, Holloway Road, Whitechapel

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JUNE 06, 2014, ISSUE 219

## தமிழக மக்களின் நிலைத்த கொள்கையின் வெளிப்பாடு

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் அரசியற் செயற்பாடுகள் குறித்து, குறிப்பாக ஈழத்தமிழரின் அரசியல் விடயங்கள் தொடர்பாக அவர் முன்னர் நடந்து கொண்ட முறை, வெளியிட்ட கருத்துகள் பற்றி பல்வேறு விமர்சனங்கள் வெளிவந்திருந்தன. இதுவிடயத்தில் ஈழத்தமிழ் மக்களும் அவர் மீது விசனப்பட்டதுண்டு. இருப்பினும், இம்முறை அவர் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்ட நாளிலிருந்து, ஈழப்பிரச்சனை விடயத்தில் அவரது செயற்பாடுகள் பெரும்பான்மையான தமிழ்நாட்டு மக்களின் நிலைப்பாட்டை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன.

தமிழ் நாடு சட்டசபையில், ஈழத்தமிழர் மீதான இனப்படுகொலை பற்றி அவர் கொண்டு வந்த தீர்மானம் அனைத்துக் கட்சிகளினாலும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. இராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு தமிழர்களின் விடுதலை விடயத்திலும் அவர் காலமறிந்து விரைந்து செயற்பட்டார். அவர் நிலைத்த கொள்கையை கொண்டிருக்கிறார் என்பது அவரது தொடர் நடவடிக்கைகளின் மூலம் உறுதியாகியுள்ளது.

முழு இந்தியாவிலும் பலம்பொருந்திய ஒரு மாநிலக்கட்சியின் தலைவராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ள முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மோடியின் பதவியேற்பு நிகழ்விற்கு இராஜபக்ச அழைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அந்நிகழ்வை புறக்கணித்தமை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நகர்வாக அமைந்தது. பின்னர் மோடியுடனான சந்திப்பின் போது, பிரதமர் என்ற வகையில் அவருக்கு வழங்கிய எழுத்து மூலமான விண்ணப்பத்தில் தமிழீழக் கோரிக்கை தொடர்பாக ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடாத்த வேண்டும் என்ற தனது கோரிக்கையை வலியுறுத்தியிருந்தார்.

மறுபுறத்தில், செல்வி. ஜெயலலிதாவுடன் சந்திப்பினை வேண்டிநிற்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தாம் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வினை வேண்டிநிற்பதாகத் அறிக்கை மூலம் தெரிவித்திருப்பது, தமிழக அரசியல்கடசிகள், அமைப்புகள், மாணவரமைப்புகளின் நிலைப்பாட்டை கேலிக்குரியதாக்குவது போல் அமைந்துள்ளது. இதுவரை காலமும் தமிழகத் தலைவர்களையும், தமிழக கட்சிகளையும் ஒதுக்கி விட்டு புதுடில்லியின் நெறிப்படுத்தலுக்கேற்ப இயங்கி வந்த கூட்டமைப்பினர் தமிழக முதல்வருடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்வது வரவேற்கத்தக்கது. ஆனால் அவர்களது செயற்பாடுகள் தமிழக மக்களின் உணர்வுகளை மதிப்பதாக இருக்க வேண்டியது அவசியமானது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*கடைசியாய் வந்த பேப்பரை* ***ஒரு பேப்பர்*** *ன் இணையதளத்தில் தரவேற்றம் செய்யவில்லை என சில முறைப்பாடுகள் வந்தன. உண்மைதான் தொழில்நுட்ப குறைபாடுகள் எண்டு ஒண்டுமில்லை. எல்லாம் நல்லாத்தான் இருக்குது. விசயத்தோடைதான் போடேல்லை. ஏனெண்டால் இன்னமும் கனடா பதிப்பினை லண்டனில் வெளியிடும் அதே நேரம் வெளியிட முடியாமல் இருக்கு. இது தற்காலிகமான பிரச்சனைதான், கூடிய சீக்கிரம் இதை சரிசெய்து விடுவோம்.*

*தெற்கு லண்டன் மிச்சம் பகுதியில் பேப்பர் வைக்கிறதில்லை எண்டும் ஒரு முறைப்பாடு வந்தது. மிச்சத்திலை இருக்கிற யாழ் ஹவுஸ், சித்தப்பா உணவகம் ஆகியவற்றில் வைக்கிறனாங்கள் அங்கை எடுக்கலாம். இல்லை வேறை எங்கையாவது வைக்க வேண்டும் எண்டால் அதையும் எங்களுக்கு சொல்லுங்கோ. சோலி கூடின கடையளிலை வைக்கேலாது . அவையளும் பேப்பர் வைக்கிற இடத்திலை கத்தரிக்காயோ, முருங்கைக்காயோ வேறென்னவோ வைக்கத்தான் விரும்புவினம்.*

***ஒரு பேப்பர்*** *க்கு ஆக்கம் அனுப்பும் போது சொல்லுக் கணக்கில் அறுநூற்றம்பது சொற்களுக்கு அதிகம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேணும். அதுக்கு மிஞ்சினால் ஆசிரியர் குழுவிற்கு வெட்ட வேண்டிய தேவை வரும். பிறகு வெட்டிப்போட்டாங்கள், நான் இந்தக் கருத்தை எழுதினதாலைதான் வெட்டினாங்கள் எண்டு உங்களுக்கிள்ளையே ஒரு கணக்கப்போட்டு எங்களோடை அடிபட வராதேங்கோ. கட்டுரைகளில் வரும் கருத்துகள் எழுதிறவரின்ரை எண்டபடியாலை அதை நாங்கள் தணிக்கை செய்யிறதில்லை. எங்கடை சொந்த விருப்பு வெறுப்புகளை கட்டுரையை எடிற் பண்ணுறதிலை காட்டுறதில்லை. இப்பிடி நாங்கள் சொன்னால் நீங்கள் நம்போணும். அதை விட்டுட்டு எழுதியிருக்கிறன் நீங்கள் வெட்டிவியளோ தெரியாது எண்டால் என்ன எண்டு எங்களுக்கு விளங்கேல்லை.*

*கட்டுரையளை நேரத்துக்கு அனுப்புங்கோ எண்டால் அதை கேட்காமல் கடைசி நிமிசத்திலை அனுப்பினால் எங்களுக்கு இரண்டு தெரிவுதான் இருக்குது. ஒண்டு பிரசுரிக்காமல் விடுகிறது மற்றது எழுத்துப்பிழை திருத்தாமல் அப்பிடியே பிரசுரிக்கிறது. இதிலை ஒண்டைத்தான் எங்களாலை செய்யமுடியும்.*

*ஒரு பேப்பரின் ஆசிரியர் குழுவில் இணைந்து பணியாற்ற விரும்புவர்கள் எங்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். எங்களுடன் இணைஞ்சு வேலை செய்யிறதுக்கு நீங்கள் லண்டனிலோ, ரொறன்ரோவிலோ இருக்க வேண்டும் என்றில்லை ரிம்பக்குவிலோ, ஆர்ட்டிக் துருவத்திலையே இருக்கலாம். இணைய வழித் தொடர்பு மாத்திரம் போதுமானது. சொன்னால் நம்ப மாட்டியள் இப்ப ஆசிரியர் குழுவிலை இருக்கிற ஆட்களிலை சிலபேர் எங்கடை பணிமனைக்கு வந்ததே கிடையாது.*

*வெயில் காலம் தொடங்கீட்டுது நீங்களும் பல சோலியளோடை இருப்பியள்.*

*அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# Lord Naseby has misled the Lords over Sri Lanka. He must withdraw his allegations





By Peter Oborne

Veteran political correspondents like me recall Michael Morris, Deputy Speaker of the Commons from 1992-97, with a great deal of affection.

He carried off the role with plenty of brio and style. Michael Morris has since been deservedly elevated to the House of Lords, where he has taken the name of Lord Naseby.

As sometimes happens, he has gone sharply downhill since entering the upper house. Most troublingly he has become an apologist for the Sri Lankan government.

There is nothing wrong with standing up for unpopular or controversial causes: indeed it is admirable.

However, it is essential to adhere scrupulously to the facts when it comes to an event as grave and sensitive as the massacre of the Tamils in the final stages of the Sri Lankan civil war.

Unfortunately Lord Naseby has failed to be accurate in his recent attack on Channel 4's harrowing documentaries: Sri Lanka's Killing Fields, War Crimes Unpunished, and No Fire Zone.

In a parliamentary question on February 26th, Lord Naseby told peers that there is now "conclusive evidence that that film from Channel 4 features two key independent witnesses, so alleged, who were in fact fully paid-up members of the Tamil Tigers". This statement is misleading.

One of the witnesses he refers to is a woman called Isaipriya. She was definitely a "fully paid-up" Tiger; she was in fact one of their TV personalities. Channel 4 never denied this in their documentaries: in War Crimes Unpunished, for instance, they refer to her as "the LTTE TV presenter Isaipriya."

In a parliamentary question on February 26th, Lord Naseby told peers that there is now "conclusive evidence that that film from Channel 4 features two key independent witnesses, so alleged, who were in fact fully paid-up members of the Tamil Tigers". This statement is misleading.

Lord Naseby's suggestion that Isaipriya's political affiliations are of any importance at all is troubling. Channel 4's footage shows her dead, naked, with a single head wound and her hands tied behind her back – a clear victim of sexual abuse and summary execution. To treat a captive in such a way is a hideous breach of the Geneva Convention and her human rights; her political status is completely irrelevant.

The second witness Lord Naseby refers to is a British-Tamil health worker who gave terrible evidence of human rights abuses committed by government forces. She is still alive and I am not going to name her because I do not want to jeopardise her safety more than Lord Naseby has done already.

In her case there is absolutely no credible evidence of any kind that she is or ever has been a Tamil Tiger. Naseby's statement relies on arguments from a propaganda book, Corrupted Journalism, published by a mysterious group called "Engage Sri Lanka".

Corrupted Journalism scarcely deals with her evidence, but attempts to discredit it by smearing her with unsubstantiated claims. For instance, it accuses her of operating under "at least four other names", but three are just different spelling variations of the same name and the fourth from a random YouTube video; it accuses her of calling her "cousin" her "brother", despite the fact that this is conventional in Tamil culture.

Most strikingly, Corrupted Journalism brands her a "blatant apologist for terror and murder" and yet, in her only interview from the war zone with a foreign paper, she called for both sides to "stop fighting and start thinking about the civilians living here." The position of Corrupted Journalism (and Lord Naseby) is absurd.

Lord Naseby can be commended for honestly declaring his interests as chairman of the All-Party British-Sri Lanka Group and a receiver of Sri Lankan government hospitality. I too should declare an interest, having in the past presented a number of documentaries for Channel 4. I have always been impressed by the professionalism and integrity of the people I have worked with.

The rules are clear. Those who make misleading statements to Parliament must correct the record at the first opportunity.

Lord Naseby has given misleading testimony to the House of Lords, and his remarks have been picked up in Sri Lanka and are being used in defence of the regime.

The rules are clear. Those who make misleading statements to Parliament must correct the record at the first opportunity. Lord Naseby has misled parliament, and thus given comfort to perpetrators of state-sponsored terror. He must return to Parliament and withdraw his allegations.

*Courtesy: Daily Telegraph*

# Sri Lanka: War remembrance, reconciliation and non-violent resistance



By Nirmanusan Balasundaram

May 2014 marked the 5th year of the brutal end of the armed conflict in the island of Sri Lanka. The foremost stakeholders of the final phase of the war, the Tamil nation, the Sinhala nation and the international community seem to have different interpretations of the disturbing developments, unfolding since the last phase of the war.

In its narrative, the Government of Sri Lanka (GoSL) keeps obstinately insisting that they liberated the Tamil people from the grip of terror. Though, this year marks the 5th year of the cruel end of war, what it actually means for the Tamil people and the reality on the ground totally contradicts the GoSL narrative. While understanding the GoSL's empty promises and false hopes, a section of the international community keep persistently pushing for national reconciliation. It is a serious question how and when this would be feasible considering the reality where the war against a populace is still continued by other means.

The means of war, strategies and fronts have changed for each actor, but not the conflict. The GoSL has waged Psychological Operations (PSY-OPS) mainly through Information Warfare (IW) against the Tamil Diaspora, and equally if not more dangerous, severe military and intelligence activities in the Tamil homeland.

## Grievances and Aspirations

The Tamil peoples' right to remember their kith and kin slaughtered in the final phase of the war was decisively denied by the Sri Lankan government forces, while the triumphalism of the GoSL continued into the fifth year.

A report of the Secretary-General's internal review panel on UN action in Sri Lanka, also known as the Petrie report, was released in November 2012, nineteen months after the UN Panel of Experts Report's release. It stated therein that "[b]ased on an internal review panel report, over 70,000 people are unaccounted for".

Prior to the UN Internal Review Panel report, a Panel of Experts was appointed by UN Secretary General Ban Ki Moon to advise him on the issue of accountability with regard to any alleged violations of international human rights and humanitarian laws during the final stages of the war in Sri Lanka. According to the UN Panel of Experts Report (published in April 2011) "[t]wo years after the end of the war, there is still no reliable figure for civilian deaths, but multiple sources of information indicate that a range of up to 40,000 civilian deaths cannot be ruled out at this stage. Only a proper investigation can lead to the identification of all of the victims and to the formulation of an accurate figure for the total number of civilian deaths."

In his submission to the Lessons Learnt and Reconciliation Commission, the Bishop of Mannar, Catholic Diocese Rt. Rev. Dr. Rayappu Joseph pointed out that according to Government figures the population in the Vanni region was 429,059 in early October 2008. The total number of people, however, who emerged from the Vanni into government-controlled areas since then according to UN OCHA 2009 statistics is estimated to be 282,380. Hence, over 146,679 people in the Vanni have been unaccounted for in post-war Sri Lanka."

However, the GoSL has categorically denied all of those claims, vigorously opposing any independent international investigation into alleged mass atrocities and have continued to host a Victory Day parade with pride, whereas Tamils are systematically denied the opportunity to engage in collective mourning on the same day to remember their lost loved ones. On that day, the North part of Sri Lanka was highly militarized, in order to prevent any commemoration ceremony. In this process, major religious shrines in the North were surrounded by military and military intelligence officers, major regional Tamil news papers offices were besieged, access to major Tamil political party offices were denied, prayers for the dead stopped, blood donation events blocked, there was a ban on even ringing the bells at the Saiva temples, the Northern Provincial Council office ceased it daily activities and the Jaffna University was compelled into being closed.

## Reckoning and Reconciliation

Mourning is a major part of healing and healing is vital for genuine reconciliation. The GoSL's denial to the Tamils of the right to collectively remember their loved ones shows the true face of the GoSL and its lack of willingness and commitment towards genuine reconciliation. This lesson was learnt by the Tamils decades ago. It is now time for the actors pushing the reconciliation agenda to learn this lesson, and respond proactively for their deaf silence during this denial of collective remembrance.

It is worthy to note here that Canada's recent bold and strong moves have the ability to lead to lasting peace in the island when considered from a long term perspective, despite the Sri Lankan regime's present antagonism towards Canada.

## Containment Strategy

To handle its internal challenges and divert international pressure, the GoSL urgently needed to establish its own 'LTTE'. This is the strategy behind the story of the revival of the LTTE. Through, the 'LTTE revival' story, the GoSL has escalated its militarization process, which is under severe international pressure, in order to extend its demography change project. This containment strategy has multiple faces, such as disintegrating the bond between the Tamil Diaspora and their kith and kin in the ground as most of the published evidence of the mass atrocities that took place during the final stage of the war were gathered and collected with the support of the people onthe ground. Through preventing the flow of information between the ground and the Diaspora, the GoSL is attempting to destabilize any sort of Tamil Diaspora engagement with the international community.

As part of this wider containment strategy and as a knee-jerk reaction to the UN resolution on Sri Lanka, the GoSL banned 16 Diaspora organizations and 424 individuals accusing them as financiers of terrorism. Most of the organizations are fighting Sri Lanka's injustice against the Tamils through nonviolent and democratic means. Concerned actors feel that this is a sinister move and will prove a serious obstacle for genuine reconciliation.

By thus trying to create a dis-engagement between the Tamil Diaspora community and the international community, the GoSL is working to prevent Sri Lanka being kept on the international agenda. Particularly, the GoSL seems afraid that, if there is to be any constructive engagement between the Office of the High Commissioner for Human Rights (OHCHR) and the Tamil Diaspora, it would bring the Sri Lankan regime a step closer towards facing international justice. This seems why, the GoSL is making critical efforts to portray that the Tamil Diaspora is connected to terrorism.

## Strategic Nonviolence

Even though the Tamil Diaspora is struggling to unify based on a single goal amidst its diversity, since there is no strong opposition to the government within Sri Lanka, a core segment of the diaspora remains a formidable challenge to the GoSL. This is particularly due to their messenger role between their brethren at home and the international community.

While the GoSL aims to shoot the messenger, the Diaspora is building up on nonviolence strategies slowly, but surely. In pursuance of such strategies the diaspora has engaged in formal statements, communication with a wider audience, group representations, symbolic public acts, symbolic strikes, pressures on individuals – that could eventually lead to travel bans on alleged Sri Lankan war criminals, drama and music, processions, public assemblies, ostracism of persons, non-cooperation with Sri Lanka's social events, customs and institutions, boycott campaigns, rejection of authority and honoring the dead.

By thus trying to create a dis-engagement between the Tamil Diaspora community and the international community, the GoSL is working to prevent Sri Lanka being kept on the international agenda.

These methods of strategic non-violence take place through a mix of psychological intervention, physical intervention, social intervention, economic intervention, cultural inter vention and political intervention.

The Tamil peoples' right to remember their kith and kin slaughtered in the final phase of the war was decisively denied by the Sri Lankan government forces, while the triumphalism of the GoSL continued into the fifth year.

The emergence of the Diaspora's nonviolent strategies has become a stern challenge to the GoSL's discrediting strategies because it has taken the form of naming and shaming. Therefore, the GoSL has become more vigorous in its attempts to curtail the Diaspora's moves, but this has only served to make committed activists in the Diaspora more confident in facing the challenges thrown towards them by the GoSL through further nonviolent strategies. This is the utmost pledge that they have taken on the day of commemoration of their beloved ones.

*Courtesy: JDS (jdslanka.org)*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate................ 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூ - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
அஜந்தா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# மாநிலங்களைப் பிளவு படுத்தலின் பின்னாலுள்ள அரசியல்

எதிர்காலத்தில் உடைந்து போகக்கூடுமெனக் கருதுகோள் நிலவும் இந்திய யூனியனுக்கு மொழி வாரித் தேசிய இனங்கள் அதிக மக்கள் தொகையுடன் பலமான மாநிலமாக இருப்பது ஆபத்தெனக்கருதியே இந்திய அரச இயந்திரம் இந்தியாவிலிருந்து ஒருகாலத்தில் பிரிந்து செல்ல கோரிக்கை எழுப்பக்கூடுமெனக் கருதும் மாநிலங்களை இரெண்டாக உடைக்கிறது, இது புரியாமல் தெலுங்கானாவுக்கு தமிழ்த் தேசியவாதிகள் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவே தமக்கும் நடக்கக் கூடுமென்பதை அவர்கள் உணரவில்லை.

**எம்மை விட சனத்தொகையில் குறைவாக உள்ள பிரான்ஸ், ஸ்பனிஷ் எல்லாம் தனிநாடுகள் இரண்டாம் வல்லரசுகளும் கூட, ஆனால் 10 கோடி இருந்தும் ஏனின்னும் தமிழர்கள் நாடற்ற அடிமைகளாக இருக்கிறோம் ?**

தமிழ்நாட்டில் உடனே இது நடக்கப் போவதில்லை, சிலபல ஆண்டுகளின் பின் நடக்கலாம், சில காலமாகவே மருத்துவர் ராமதாஸ் வன்னியர்கள் அதிகம் செறிந்து வாழும் 'தொண்டை நாட்டை' தமிழ்நாட்டிலிருந்து தனியே பிரித்து தரச் சொல்லிக் கேட்பது தன்னுடைய சுயநலனுக்காக அவர் கேட்பது மாத்திரமன்று, இந்திய அரச இயந்திரத்தின் சமிக்ஞையின் பின்னணியிலும் தான் இதனைக் கேட்கிறார். தெலுங்கானாவாக மக்கள் எதற்காக பிரிய வைக்கப்பட்டார்களோ அதன் ஒரு வடிவத்தைக் காரணம் காட்டியேராமதாசும் கேட்கிறார். குறிப்பாக பி.ஜே.பி ஒருமொழி, ஒருதேசமென்ற கொள்கையை உடையது, இவரது வேண்டுகோள் நடைமுறையில் உள்ள மத்திய அரசுக்கும் பிடித்தமானதே, கூட்டணியிலும் வேறு இருக்கிறாரென்பதால் இதற்கு அவர்களது ஆசீர்வாதமும், ஆலோசனையும் இவருக்கு கிட்டலாம்.

ஏலவே கொங்கு நாட்டை தனியே பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் பேச்சளவில் இருக்கின்ற வேளையில் தமிழ் நாட்டை மூன்றாக உடைக்கவே இந்திய அரச இயந்திரம் விரும்பும், மாநில அரசு ஆசனங்களின் எண்ணிக்கையிலும், மக்கள் தொகையிலும், வரி தீர்மானித்தலிலும் பலமானதாக இருந்தால் மைய அரசு பலமுள்ளதாக தீர்மானிக்கும் சக்தியாக இருப்பது கடினம். மாநிலங்கள் உடைக்கப்பட்டு தேசிய இனங்கள் பிரிக்கப்பட்டால் இந்தியாவின் சமஸ்டி அமைப்பு போன்ற நிலமை தவிர்க்கப்பட்டு மத்தியில் ஆளும் அரசு பலமானதாகி ஒற்றை ஆட்சி உருவாகும். மைய அரசு பலமடையும். மகாராஸ்ராவில் விதர்பா, கர்நாடகாவின் வட பகுதி என்பன எதிர்காலத்தில் தனி மாநிலங்களாக உருவாகப்பட இருப்பதற்கான பின்னணியும் இது தான், இன்னும் 40 ஆண்டுகளின் பின் இந்தியாவில் 50 மாநிலங்கள் கூட உருவாக்கப்படலாம், அதுதான் இந்தியா உடையாமல் இருப்பதற்கும், ஒற்றையாட்சி நடப்பதற்கும் இருக்கும் மென்போக்கு வழியும் கூட.

மும்மொழிக் கொள்கையை (தமிழ்,ஹிந்தி, ஆங்கிலம்) இன்னும் நடைமுறைப்படுத்தாத ஒரே மாநிலம் தமிழ்நாடு என அறிகிறேன். இப்படி மாநிலங்கள் உடைக்கப்பட்டு தேசிய இனங்கள் பலவீனப்படுத்தப்படுகின்ற போது மும்மொழிக் கொள்கை அமுல்ப்படுத்தப்பட்டு ஒரே மொழி, ஒரே தேசமென்ற ஹிந்தியர்களின் இலக்கு எய்தப்படும். ஹிந்தி தேசிய மொழியாகும், மொழிவாரித் தேசிய இனங்களின் மொழிகள் படிப்படியாக தம் தேவையை இழக்கும்.

மோடியின் பதவியேற்பு விழாவில் தன் தாய் மொழியில் பேசாமல் அனைவரும் ஹிந்தியில் பேசியதன் அர்த்தமும் இது தான்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன மாவட்டசபைகள் உருவாக்க முனைந்ததும் இதற்குத்தான், வடிவம் வேறெனினும் எண்ணம் ஒன்று தான். இலங்கையில் தமிழர்கள் பூர்வீகமாகச் செறிந்து வாழ்ந்த வடக்கும், கிழக்கும் வடகிழக்கு மாகாணமாக இருந்தபோது தான் பலமாக இருந்தது, அது வடக்கு, கிழக்கு எனத் தனித்தனியே உடைக்கப்பட்டு பலவீனமாக்கப்பட்டது. கிழக்கில் மிகத் தாராளமான சிங்களக் குடியேற்றங்கள் வந்ததைத் தொடர்ந்து வடக்கிலும் அது மிக வேகமாக முன்னெடுக்கப்படுகிறது, தமிழ்ப் பள்ளிகளில் ஆங்கிலக் கல்வியும், சிங்கள பாடமும் கற்பிக்கப்படுகின்றன, பலமுன்னணிப் பாடசாலைகளில் மாணவர்கள் ஆங்கிலமொழி மூலம் தான் பரீட்சை எழுதுகின்றார்கள். இது நாளடைவில் வேலை வாய்ப்புக்கு தமிழ் மொழி உதவாதெனும் நிலையில் தமிழ்மொழி தேவையற்றதாக்கப்படும். ஆளும் மொழியான சிங்களமும், தொழில் மொழியான ஆங்கிலமுமே முன்னணி வகிக்கும்.

**இப்படி மாநிலங்கள் உடைக்கப்பட்டு தேசிய இனங்கள் பலவீனப் படுத்தப்படுகின்ற போது மும்மொழிக் கொள்கை அமுல்ப்படுத்தப்பட்டு ஒரே மொழி, ஒரே தேசமென்ற ஹிந்தியர்களின் இலக்கு எய்தப்படும். ஹிந்தி தேசிய மொழியாகும், மொழிவாரித் தேசிய இனங்களின் மொழிகள் படிப்படியாக தம் தேவையை இழக்கும்.**

எம்மை விட சனத்தொகையில் குறைவாக உள்ள பிரான்ஸ், ஸ்பனிஷ் எல்லாம் தனிநாடுகள் இரண்டாம் வல்லரசுகளும் கூட, ஆனால் 10 கோடி இருந்தும் ஏனின்னும் தமிழர்கள் நாடற்ற அடிமைகளாக இருக்கிறோம்?

யானை தன் பலத்தை தான் அறியாதென்பது போலத்தான் நாமும் எம் பலத்தை அறியாதிருக்கிறோமா ?

*- திருக்குமரன்*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## மணல் கோட்டையும் மனித கோட்டையும்!

ஒரு சிறுவன் கடற்கரை மணலில் ஒரு மணல் கோட்டையைக் கட்டிக் கொண்டு இருந்தான். அவன் கொண்டு வந்திருந்த வாளி மற்றும் சில உபகரணங்கள் கொண்டு ஆலோசித்து ஆலோசித்து அவன் அந்தக் கோட்டையைக் கட்ட ஆரம்பித்து நிறைய நேரம் ஆகியிருந்தது. கோட்டை, வாயில், மதில் சுவர்கள் என ஒவ்வொன்றையும் பேரழகுடன் உருவாக்கிக் கொண்டு இருந்தான். அந்தக் கோட்டை கட்டும் ஆர்வத்தில் அவன் தன் சுற்றுப்புறத்தையே மறந்து விட்டிருந்தான். தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் சிரிப்புச் சத்தம், கடலை, பட்டாணி சுண்டல் விற்றுக் கொண்டிருந்தவர்களின் விற்பனை சத்தம், அங்கு வந்து போய்க் கொண்டிருந்தவர்களின் பேச்சுச் சத்தம் எதுவுமே அவன் கவனத்தைத் திருப்பவில்லை. அந்தக் கோட்டை அழகுருவம் பெறப் பெற அவன் மனதில் எல்லையில்லாத சந்தோஷம். 'இந்த அழகுக் கோட்டை நான் உருவாக்கியது.....'

நகரத்தின் இன்னொரு பகுதியில் பரபரப்பான சூழ்நிலையில் ஒரு மனிதன் தொலைபேசியில் பேசிக் கொண்டும், கம்ப்யூட்டரின் கீ போர்டை அழுத்திக் கொண்டும் இன்னொரு விதமான கோட்டையை அமைத்துக் கொண்டிருக்கிறான். அது அவனுடைய வியாபாரக் கோட்டை. அவன் வாய் வார்த்தைகளில் வியாபார அஸ்திவாரங்கள் போடப்படுகின்றன. அவன் விரல்நுனிகளில் பெரிய பெரிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிக் கொண்டிருக்கின்றன. அவனும் தான் உருவாக்கிக் கொண்டிருந்த கோட்டையில் உலகையே மறந்து விட்டுருந்தான். ஒன்றுமில்லாமல் ஆரம்பித்து அவனுடைய தீவிர முயற்சிகளால் நன்றாக வளர்ந்திருந்த அதன் வளர்ச்சியைப் பார்க்கையில் அவனுக்கும் பேரானந்தம். 'இது நான் உருவாக்கியது...'

இந்த இரண்டு கோட்டைகளும் அவரவர் கடும் உழைப்பால் உருவானவை. அவர்கள் திட்டமிட்டு உருவாக்கியவை. அவர்களில்லா விட்டால் அந்தக் கோட்டைகள் இல்லை. அவர்களுடைய முழுக் கவனத்தையும் பெற்று அவர்கள் எண்ணப்படி உருவானவை. கடலலையும், விதியலையும் எந்த நேரத்திலும் வந்து அழித்து விடக்கூடிய கோட்டைகள் அவை. இதோடு இருவருக்குமுள்ள ஒற்றுமைகள் முடிந்து விடுகின்றன. இனி வரும் வேற்றுமைகள் தான் நம்மை சிந்திக்கத் தூண்டுபவை.

மாலை நேரம் நெருங்க நெருங்க கடலலைகள் கரையில் அதிக தூரம் வர ஆரம்பிக்கின்றன. அவனது கோட்டையை அலைகள் நெருங்க நெருங்க சிறுவன் துள்ளிக் குதித்து ஆர்ப்பரிக்கிறான். தான் கட்டிய கோட்டை அலைகளால் அழியப்போகிறதே என்ற வருத்தம் அவனிடம் இல்லை. பயம் இல்லை. ஏனென்றால் அவன் ஆரம்பத்திலிருந்தே இதை அறிவான். சிறிது சிறிதாக அவனது கோட்டையை கடலலைகள் கபளீகரம் செய்ய சில நிமிடங்களில் அவன் கட்டிய கோட்டை இருக்கும் இடம் தெரியாமல் காணாமல் போகிறது. வாளியில் தன் மற்ற உபகரணங்களைப் போட்டுக் கொண்டு அந்த வாளியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, மறு கையால் தந்தையின் விரல்களைப் பிடித்துக் கொண்டு வீடு திரும்பும் அந்தச் சிறுவன் மனதில் துளியும் துக்கம் இல்லை. எல்லாம் விளையாட்டு. அன்றைய பொழுது ஆனந்தமாய் கழிந்ததில் ஒரு நிறைவு.

ஆனால் இன்னொரு கோட்டை கட்டியிருந்த மனிதனின் மனோபாவமோ வேறு விதமாக இருக்கிறது. அவனுடைய கோட்டைகள் விதியலைகளால் தீண்டப்படும் போது அவனுள் பீதி கிளம்புகிறது. இது நான் கஷ்டப்பட்டுக் கட்டிய கோட்டை, இதற்காக நான் நிறைய நேரம் செலவழித்திருக்கிறேன், தியாகம் செய்திருக்கிறேன் என்றெல்லாம் புலம்புகிறான். விதியலைகளில் இருந்து அந்தக் கோட்டை அழியாமல் காக்க முடிந்த மட்டும் போராடுகிறான். ஒவ்வொரு பகுதியாய் கோட்டை அழியும் போதும் கண்ணீர் வடிக்கிறான். இயற்கை அவன் புலம்பலையும், கண்ணீரையும் பொருட்படுத்தவில்லை. கடைசியில் அந்தக் கோட்டை இருந்த இடம் தெரியாமல் தகர்ந்து போகும் போது சொல்லொணா துக்கம் மட்டுமே மிஞ்சுகிறது. எல்லா ஆரம்பங்களுக்கும் ஒரு முடிவு உண்டு என்பதை அவன் அறிய முடியாதவன் அல்ல. ஆனாலும் தன் சொந்த விஷயங்களில் அந்த உண்மையை உணர்ந்து தெளியும் பக்குவம் அவனுக்கு இல்லை. தினமும் மரணங்களைப் பார்த்து வாழ்ந்தும், தான் சாசுவதமானவன் என்பது போல் நடந்து கொள்ளும் சராசரி மனிதர் கூட்டத்தைச் சார்ந்தவன் அவன்.

தன்னுடைய கோட்டை மட்டும் இந்த இயற்கை விதிகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்று பொய்யான நம்பிக்கையில் இருந்து வந்ததால் தான் அவனால் நடந்ததை ஜீரணிக்க முடியவில்லை.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய இருக்கின்றன. அந்தச் சிறுவனைப் போல் இயற்கையை அறிந்து, புரிந்து, உணர்ந்து வாழ்ந்தால் வாழ்க்கை ஆனந்தமயமானதாக இருக்கலாம். அந்த மனிதனைப் போல் பொய்யான மாயையில் வாழ்ந்தால் வாழ்க்கை துக்ககரமானதாகவே முடியும்.

வெறும் கையுடன் வந்தோம். வெறும் கையோடு போகப்போகிறோம். இந்த உண்மையை இடைப்பட்ட வாழ்க்கையில் நினைவு வைத்து வாழ்ந்தால் உண்மையில் இங்கு இழக்க நமக்கு ஒன்றுமில்லை என்பதை தெளிவாக நாம் உணர முடியும். கோட்டைகளைக் கட்டுவதில் தவறில்லை. அதில் ஆனந்தமடைவதும் தவறில்லை.

உண்மையில் அந்த செயல்களில் தான் ஜீவத்துவமே இருக்கிறது. ஆனால் எல்லாம் முடிந்து இறுதியில் கோட்டைகளை விதியலைகள் வீழ்த்தும் போதும் இதுவும் இயற்கையே என்று அந்த சிறுவனின் பக்குவத்துடன் வருத்தமில்லாமல் விடைபெற முடிந்தால் அந்த வாழ்க்கையின் நிறைவுக்கு ஈடு இணை எதுவுமில்லை.

*- என்.கணேசன்*

# 'புலி நீக்க அரசியல்' எனப்படுவது யாதெனில்...



**கோபி**
*ஒரு பேப்பர்*

தமிழ் மிதவாதிகளின், குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமையின் தற்போதைய அரசியல் அணுகுமுறையினைப் பற்றி கருத்து வெளியிடும் சில (தமிழ்) அரசியல் விமர்சகர்கள் அல்லது பத்தி எழுத்தாளர்கள், அவர்கள் 'புலி நீக்கம் செய்யப்பட்ட' அரசியலை முன்னெடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆயுதரீதியான போராட்டத்தை முன்னெடுக்கிற வீரியமோ, அதற்கான விருப்போ கொண்டிராத அமைப்புகளால் புலி நீக்கம் செய்யப்பட்ட அரசியலைத்தான் கடைப்பிடிக்க முடியும் எனச் சிலர் வாதிடலாம். ஆனால் இங்கு புலிநீக்க அரசியல் எனக்குறிப்பிடப்படுவது என்ன என்பதனையிட்டு நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

கூட்டமைப்பினதும் அதன் புலம்பெயர் ஆதரவு அமைப்புகளினதும் தற்போதைய அணுகுமுறையை ஏற்றுக் கொள்பவர்கள், "விடுதலைப்புலிகளின் அணுகுமுறையினை அல்லது செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ளாத சர்வதேசம் போரில் சிறிலங்கா அரசாங்கத்தினை ஆதரித்தது. பாரிய மனித அவலத்தின் பின்னர், இப்போது அவர்கள் தமிழ் மக்களை அனுதாபத்துடன் அணுகுகிறார்கள். இந்நிலையில் தொடர்ந்தும் விடுதலைப்புலிகளை முன்வைத்து அரசியல் நடாத்தினால் அது அவர்களின் வெறுப்பை சம்பாதிப்பதாக அமையும்" என ஒரு விவரணத்தைச் சொல்லி முடிப்பார்கள் இவ்வாறு கூறுபவர்களில்களில் இரண்டு தரப்பினர் இருக்கிறார்கள். ஒரு தரப்பினர் விடுதலைப்புலிகள் அதிகாரத்தில் இருந்தபோது அவர்களை ஏற்றுக் கொள்ளவதாகப்பாசாங்குசெய்துகொண்டு, சமயம் கிடைக்கும்போதெல்லாம் விடுதலைப்புலிகளிற்கு எதிராகச் செயற்பட்டவர்கள்.

மற்றைய தரப்பினர் விடுதலைப் புலிகளையும் அவரது தியாகங்களையும் ஏற்றுக் கொண்டவர்கள், ஆனால் இன்றைய சூழலில் தந்திரோபாயமாக நடந்து கொள்வேண்டும் எனக் கருதுபவர்கள். இந்த இரண்டாவது தரப்பினர், தாம் தற்போதைக்கு விடுதலைப்புலிகளை எதிர்ப்பதாக அல்லது ஆதரிக்காதிருப்பதாக காட்டிக் கொள்கிறோம் எனக் கூறுகிறார்கள். தமது நடவடிக்கையினை 'இராஜதந்திரம்' என்று வேறு அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். இந்த இரண்டு தரப்பினரின் மத்தியில் கூட்டமைப்பின் தலைமைக்கு வரவேற்பும் ஆதரவும் உள்ளது. இன்னொருவிதத்தில் கூறுவதானால் இவர்களே கூட்டமைப்பின் ஆதரவுத்தளமாக உள்ளனர் எனலாம்.

இங்கு 'புலி நீக்க' அரசியல் என்பது வெறுமனே விடுதலைப்புலிகளைப் பிரதிபலிக்கும் அடையாள அரசியலை துறப்பதா, அல்லது அவர்களது அரசியல் இலக்கினை மறுப்பதா என்ற குழப்ப நிலையிலிருந்துதான் இவ்விடயத்தினை அணுக வேண்டும். விடுதலைப்புலிகள் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தை மறுதலிப்பது, அல்லது மேற்குநாடுகள் ஏற்றுக்கொள்கிற ஜனநாயக முறைப்படி நடக்க முற்படுவது என்பது வேறு, விடுதலைப்புலிகள் உறுதியாக இருந்த அவர்களது



அரசியல் இலக்கிலிருந்து வழுவுவது என்பது வேறு. உண்மையில் 'புலிநீக்க அரசியல்' என்பது தமிழ் மக்களின் அரசியல் இலக்கினை மழுங்கடிப்புச் செய்வதனை நோக்காகக் கொண்டிருக்கிறது. இதனை சில தமிழ் அமைப்புகளின் நடவடிக்கைகள் உறுதி செய்கின்றன. ஆனால் இந் நிலைப்பாட்டை வெளிப்படையாகச் சொல்லி தமது அரசியல் எதிர்காலத்தை பாழடிக்க விரும்பாத காரணத்தால், இத்தரப்பினர் தமிழ் மக்கள் மத்தியில் ஒன்றையும், வெளித்தரப்பினர் முன் இன்னொன்றையும் பேசும் இரட்டை அணுகு முறையினை கடைப்பிடிக்கின்றனர்.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, இந்தியா மற்றும் பிரித்தானியா உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தின் இருபத்தியெட்டு நாடுகளில் விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடை இன்னமுமிருக்கிறது. அது தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு வருகிறது. 'பயங்கரவாதத்தைக் கொண்டாடுதல்' (glorification terrorism) என்ற அடிப்படையில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களுக்கு தார்மீக ஆதரவை வழங்குவதனைக் கூடத் தடைசெய்யும் இறுக்கமான சட்டங்கள் இந்த நாடுகளில் அமுலில் உள்ளன. தடைப்பட்டியலில் சேர்க்கப்பட்டமைக்கு இவ்வியக்கங்களின் செயற்பாடுகளே காரணமாக இருந்தன எனக் கூறப்பட்டாலும், உண்மையில் அவர்களது அரசியல் இலக்குகளை இந்நாடுகள் ஏற்றுக்கொள்ளாமையே தடைக்கான காரணமாக இருக்கிறது. விடுதலைப்புலிகள் மீதான தடையினை சற்று உன்னிப்பாக அவதானித்தால் இதனை விளங்கிக் கொள்ள முடியும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு பயங்கரவாத அமைப்பாக தடைசெய்யப்பட்டமைக்கு வெளிப்படையாகச் சொல்லப்படுகிற காரணங்களாக சிறிவர்களை படையில் சேர்த்தமை, தற்கொலைப் போராளிகள், (ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட) அரசியல் தலைவர்களை கொலை செய்தமை, பொதுமக்கள் உட்பட ஆயுத மோதலில் ஈடுபடாவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை போன்ற விடயங்கள் கூறப்பட்டன. பொதுவில் சர்வதேச மனிதவுரிமை, மனிதாபிமானச் சட்டங்களை மீறும் எந்த அமைப்பையும் நாகரீக சமூகம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. ஒடுக்கப்பட்ட சமூகங்களிற்கும் அரச பயங்கரவாதத்தினை எதிர்கொள்வதில் ஆயுதவன்முறையேபாதுகாப்பை வழங்குகிறது என்பதனை தாராண்மைவாத ஜனநாயக வாதிகள் மட்டுமல்ல கியூபா போன்ற இடதுசாரி நாடுகளும் ஏற்றுக்கொள்வதில்லை. இவ்வாறு ஏற்றுக்கொள்ளவதும் ஏற்க மறுப்பதும், அரசியல் சித்தாந்தங்களின் அடிப்படையில் அல்லாமல் அவரவர் நலன் சார்ந்து அமைகிறது என்பதனையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

2010ம் ஆண்டு பெப்பிரவரியில் சர்வதேச முரண்பாடுகளுக்கான குழு (International Crisis Grou) விடுத்த 'The Sri Lankan Tamil Diaspora after the LTTE' என்ற தலைப்பிலான அறிக்கையில், இலங்கைத் தீவில் போரின் முடிவிற்குப்பின்னர், தமிழ் அலைந்துழல்வுச் சமூகம் விடுதலைப்புலிகளின் கொள்கைகளை வரித்துக் கொண்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது. பயங்கரவாதப் பட்டியலில் விடுதலைப்புலிகளை இடுவதற்கு காரணமாக முன்னர் குறிப்பிட்ட எந்தவொரு நடவடிக்கையையும் புலம் பெயர் தமிழர்கள் மேற்கொள்ளுவதாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. மாறாக வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீதான மீள்வாக்கெடுப்பு, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்கியமை என

தமிழீழக் கோட்பாட்டை முன்னிறுத்திய செயற்பாடுகளைக் காரணங்காட்டியே தமிழ் டயஸ்போறா விடுதலைப்புலிகள் போல் செயற்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்கத்தைய அரசுகளை தமிழீழக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்காக தமிழ் அலைந்துழல்வுச் சமூகத்தினர் மத்தியில் ஜனநாயகத்தையும் வெளிப்படைத்தன்மையையும் பேணும் வகையிலான புதிய அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகத் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில் தமிழீழக் கோரிக்கையை முன்வைப்பது ஜனநாயகரீதியானது என்றபோதிலும், இலங்கைத் தீவிலும் வெளியிலும் இதற்கு ஆதரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தமது நலன்களுக்கு புறம்பான வகையிலான அரசியல் இலக்குகளை வைத்து செயற்படும் அமைப்புகளையும் அவற்றின் ஆதரவாளர்களையும் சட்டரீதியாக தடை செய்ய முடியாத நிலையில், வேறுவிதமாக அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பயங்கராவத தடைப்பட்டியல் உபயோகிக்கப்படுகிறது. மேற்கத்தைய மக்கள் மற்றும் அவர்களது பொருளாதார நிலைகள் மீது விடுதலைப்புலிகள் எவ்விதமான தாக்குதலை நடாத்தவோ, அல்லது அவற்றுக்கு அச்சுறுத்தலான வகையில் செயற்படவோ முயலவில்லை என இந்நாடுகளின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளமை இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது.

**இங்கு 'புலி நீக்க' அரசியல் என்பது வெறுமனே விடுதலைப்புலிகளைப் பிரதிபலிக்கும் அடையாள அரசியலை துறப்பதா, அல்லது அவர்களது அரசியல் இலக்கினை மறுப்பதா என்ற குழப்ப நிலையிலிருந்துதான் இவ்விடயத்தினை அணுகவேண்டும்.**

மேற்கத்தைய அரசுகளின் கருத்தினை பிரதிபலிக்கும் வகையில் அமைந்த மேற்படி அறிக்கையினைப் போன்று, விடுதலைப்புலிகளின் வழியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நடக்க முயல்வதாக சிறிலங்கா அரசாங்கமும் குற்றம்சாட்டி வருகிறது. அவ்வப்போது, இந்திய அரசியல் விமர்சர்களிடமிருந்தும் இவ்வாறான கருத்துகள் வெளிவருவதுண்டு. சுருக்கமாகச் சொல்வதானால், தமிழ் மக்களிள் அடிப்படை அரசியல் அபிலாசைகள் பற்றி பேசும் எவரையும் விடுதலைப்புலிகளின் வழியில் செல்வதாக குறிப்பிடுவதில் மேற்கத்தைய தரப்பினருக்கும், இந்திய, சிறிலங்கா அதிகார மையங்களுக்குமிடையில் வேறுபாடுகளைக் காண முடியாது. இதனடிப்படையில்தான் 'புலி நீக்க' அரசியலையிட்டு தமிழ் மக்கள் எச்சரிக்கை கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர்.

விடுதலை பெறும் வரை தமிழ்த் தேசிய அடையாளங்களை மறைத்து வைக்க வேண்டும் என்று கோரிக்கைகள் சில தரப்பினரால் முன்வைக்கப்படும்போது, அதனை வெகு அப்பாவித்தனமான வேண்டுகோள் எனக் கருத முடியாதுள்ளது. மாறாக, இது ஈழத்தமிழர்களை தேசிய இனம் என்ற நிலையிலிருந்து சிறிலங்காவின் சிறுபான்மை மக்கள் என்ற நிலைக்கு தரமிறக்கும் உள்நோக்கம் கொண்ட அரசியல் நடவடிக்கையே தவிர வேறொன்றுமில்லை.


ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............... 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ....... 020 8672 3200
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............ 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam ............. 020 8694 8810
AJ Video ............... 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ....................... 020 8297 9432
Best Food ............. 020 8692 9811

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan.................. 020 8514 1744
Angels ................. 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans ............. 020 7609 1912
Prabas ................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................ 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods............... 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434

Aarti tv

# உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!



OVER 500 Tamil Movies Available Instanly

FREE CRICKET CHANNELS

- 30ற்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரேதளத்தில்
- Local Time Broadcast: Indian Time / UK Time / European Time
- பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும பார்வையிட வசதியானது.
- சற்றலைற்றுகளை பொருத்த தேவை இல்லை.

Roku | Windows | Available on the App Store | Google play

FREE CHANNELS

MultiRoom Viewing

எமது வாடிக்கையாளர்கள் தங்களது வீடுகளில் இருக்கும் அறைகளில் ஒரே நேரத்தில் பல அலைவரிசைகளை பார்வையிடுவதற்கான வசதியை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன்மூலம் ஒரே வீட்டில் பல தொலைக்காட்சிகளை வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் விரும்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் பார்க்கமுடியும்.

SPECIAL OFFER

12 Months Subscription + Set Top Box £ 99

24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

100% LEGAL

United Kingdom
0203 318 2004 / 0783 276 9522

Web
WWW.AARTITV.TV

15 Days Money Back GUARANTEE

# தென்னிலங்கை அரசியலில் தமிழ்த் தரப்பு பங்கெடுக்க வேண்டுமா ?



பூரணன்

வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் ஒரு வேட்பாளராக வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனை தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்மொழிந்திருக்கிறார். மனோகணேசன் அதனை வழிமொழிந்திருக்கிறார். ஒரு ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இந்த முன்மொழிவும் வழிமொழிவும் இடம்பெற்றிருக்கின்றது. முன்மொழிந்த சுமந்திரன் இது தொடர்பாக தென்னிலங்கைக் கட்சிகள் உடனடியாக பதில் அளிக்கவேண்டும் என்றும் கேட்டிருந்தார். பதில் அளித்த அனைத்து கட்சிகளும் இனவாத கண்ணோட்டத்திலேயே பதில் அளித்திருக்கின்றன. பெரும்பான்மை இனத்தை சேராத ஒருவர் வேட்பாளராக நிற்கமுடியாது என்பதே அனைத்து கட்சிகளினதும் கருத்தாக இருந்தது. கருத்துக்களை வழங்கிய மொழியில் சில வேறுபாடுகள் இருந்தாலும் கருத்தின் உள்ளார்ந்த அர்த்தம் சிங்கள பௌத்தரல்லாத ஒருவர் வேட்பாளராக நிற்க முடியாதென்பதே.

தென்னிலங்கை அரசியற் கட்சிகளின் கருத்துக்கள் எதிர்பார்த்தவைதான். இது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளத்தேவையில்லை. ஆனால் சுமந்திரன் என்ன நோக்கத்தின் அடிப்படையில் இந்த முன்மொழிவை முன்வைத்தார் என்பது தான் இங்கு கவனிப்புக்குரியது. தன்னை ஓர் வலுவான இராஜதந்திரிபோல காண்பிக்க முயன்றுவந்த சுமந்திரன் இன்று ஒரு கோமாளியாக நடந்து கொள்கின்றார் எனச் சிலர் கூறுகின்றனர்.

ஆனால் சுமந்திரன் அனைத்தையும் தெரிந்து கொண்டு திட்டமிட்ட நோக்கத்தின் அடிப்படையில் தான் செயற்பட்டிருக்கின்றார். அதாவது தமிழ்த் தேசியவாதத்தை கரைத்து சிறீலங்கா தேசியத்தை தமிழர்கள் அறியாமலே அவர்களை ஏற்றுக்கொள்ளவைத்தல். அது மட்டுமன்றி ராஜபக்சேயை மீண்டும் வெல்லவைக்க முயல்கின்றாரா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த 2010ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத்பொன்சேகாவை ஆதரிப்பது என்ற கூட்டமைப்பின் முடிவானது சிங்கள மக்களை பொன்சேகாவுக்கு எதிரான மனநிலைக்குள் தள்ளியது. அதன் விளைவு சரத் பொன்சேகா பல லட்சம் வாக்குகளால் தோற்கும் நிலையை உருவாக்கியது. அந்த நிகழ்விலிருந்து பாடங்களை கற்றிருந்தும் மீண்டும் எதிர்க்கட்சிக்கு ஒரு தமிழனை பொதுவேட்பாளராக்கவேண்டும் என்று கோருவது மீண்டும் ராஜபக்சேயை பெரும்பான்மை வாக்குகளால் வெல்லவைப்பதற்கே வழிவகுக்கும்.

தமிழ் அரசியலில் இருந்து தமிழ்த் தேசியவாதத்தை நீக்குதல் மற்றும், தமிழ்த் தேசியத்தை சிங்கள தேசியத்தினுள் கரைத்து அழித்தல் ஆகிய செயற்திட்டங்களை சுமந்திரன் தற்போது தான் நகர்த்துகின்றார் என கூறமுடியாது. அவர் நீண்ட காலமாகவே அவற்றை நகர்த்தி வருகின்றார். மகிந்தருடன் இணைந்து கிரிக்கட் விளையாடியமை, தமிழ் நாட்டிற்குச் சென்று ஈழத்தமிழர்களுக்காக குரல்கொடுக்கும் தமிழ்நாட்டு அரசியல் சக்திகளை வாயைப் பொத்திக் கொண்டு இருங்கள் எனக் கூறியமை, ஜெனிவாவில் அனந்தியை பேசவிடாது தடுத்தமை, 13ம் திருத்தத்தை தீர்வாக ஏற்றுக் கொண்டுள்ளமை, ஜெனீவா சென்று அங்குள்ள சிறீலங்கா தூதரகத்தில் உறவு கொண்டாடியது போன்ற செயற்பாடுகளையே அவர் மேற்கொண்டுவருகின்றார். இவை எல்லாம் தமிழ்த் தேசியத்தை கரைப்பதற்கும், மகிந்தரைக் காப்பாற்றுவதற்கான செயற்திட்டங்களே!

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது மகிந்தரைச் தோற்கச்செய்வதில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் மிகவும் தீவிரமாக உள்ளது. அதற்காக பல்வேறு காய் நகர்த்தல்கள் மேற்கொண்டு வருகின்றது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியினை உடைப்பதற்காக சந்திரிகாவை முன்னிலைக்கு கொண்டுவர முயற்சிக்கின்றது. சந்திரிகாவின் தாராண்மைவாத முகம் தமிழ், முஸ்லிம், மலையக மக்களை இணைக்க உதவும் என்றும் பண்டாரநாயக்கா குடும்ப வாரிசு என்பது சிறீலங்கா சுதந்திரக்கட்சியை உடைக்க உதவும் என்றும் அது கருதுகின்றது.

இந்நிலையில் விக்னேஸ்வரனை பொதுவேட்பாளராக்க வேண்டும் என்ற சுமந்திரனின் முன்னெடுப்புக்கள் தமிழ், முஸ்லிம், மலையக மக்களிடமிருந்து எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளரை அந்நியப்படுத்தும். மகிந்தர் இலகுவாகவே தேர்தலில் வென்றுவிடுவார். இங்கு எதிர்க்கட்சி வேட்பாளர் தேர்தலில் வெல்லாவிட்டாலும் சற்று வலிமையான எதிர்க்கட்சி இருப்பதைக்கூட சுமந்திரனின் முன்னெடுப்புக்கள் இல்லாமல் செய்துவிடும்.

தற்போது சுமந்திரனின் முன்னெடுப்புகளுக்கு பல விமர்சனங்கள் வந்துள்ளதால் தனது பிரசாரத்தை தலைகீழாக மாற்றிப் போட்டிருக்கின்றார். தென் இலங்கையானது தமிழர்களை ஏற்கத் தயாரில்லை என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதற்காகவே அக் கருத்தினை முன்வைத்ததாக கதைவிடுகின்றார். சுமந்திரனின் கடந்த ஐந்தாண்டுகால தொடர் நடவடிக்கைகளை அவதானித்தவர்களுக்கு இது சுத்த பம்மாத்து என விளங்கும். சுமந்திரன் அரசியலுக்கு வந்த நாட்களில் ஒரு நாளாவது தமிழ்த் தேசிய சிந்தனைகளுக்கு விசுவாசமாக இருந்ததில்லை.

இங்கு தமிழ்த் தரப்பு முக்கியமாக ஆய்வுக்கெடுக்க வேண்டிய விடயம். தென்னிலங்கை அரசியல் தொடர்பாக என்ன நிலை எடுப்பது என்பதே! இலங்கைத் தீவில் இலங்கைத் தேசியம் என ஒன்று இல்லை. இருப்பதெல்லாம் சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம், மலையகத் தேசியம், முஸ்லிம் தேசியம் என்பவையே. இவ் நான்கு வகை தேசியங்களையும் சமத்துவமாக அங்கீகரிப்பதன் மூலம் மட்டுமே எதிர்காலத்தில் இலங்கைத் தேசியம் என்ற ஒன்றை புதிதாக கட்டியெழுப்புவது பற்றிச் சிந்திக்க முடியும். ஆனால் அதற்கு சிங்களத் தரப்பு தயாராக இல்லை. ஏனைய அனைத்து தேசியங்களும் தமது அடையாளங்களைத் துறந்து சிங்களத் தேசியத்திற்குள் கரைந்து விட வேண்டும் என்றே அது எதிர்பார்க்கின்றது. தமிழ் மக்கள் அதற்கு தயாராக இல்லாதபடியால் தான் தமிழ் மக்களின் நீண்டகால இரத்தம் சிந்திய போராட்டம் இடம்பெற்றது.

இன்றுள்ள அரச கட்டமைப்பு சிங்களத் தேசத்திற்கு மட்டும் உரிய கட்டமைப்பே ஏனைய தேசிய இனங்களுக்கு இங்கு எந்த இடமும் இல்லை. தமிழ் மக்கள் இந்த அரச கட்டமைப்பிற்கு வெளியே தள்ளப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தங்களை சமத்துவமாக இணைத்தால் தான் அரச கட்டமைப்பை ஏற்கத் தயார் எனக்கூறி வருகின்றனர். நீண்ட பெரும் அழிவுகளின் பின்னரும் கூட தமிழ் மக்கள் இந்த நிலைப்பாட்டிலிருந்து விடுபடத் தயாராக இல்லை. ஒவ்வொரு தேர்தலிலும் தெளிவாக அதனை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே சிங்கள அரச அதிகார கட்டமைப்பை யார் கைப்பற்றுவது என தென்னிலங்கையில் இடம் பெறும் அரசியல் போட்டியில் தமிழ் மக்கள் பங்குபெறுவதனால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. மறுபக்கத்தில் தமிழ் மக்கள் பங்குபற்றினால் இந்த அரச கட்டமைப்பை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்ற ஆபத்தான தோற்றத்தை அது கொடுப்பதுடன், அது தமிழ்த் தேசிய அரசியலை வெகுவாகப் பலவீனப்படுத்தும்.

இராஜதந்திர அவசியம் ஒன்று ஏற்பட்டால் மட்டும், தமிழ்த் தேசிய அரசியலை பாதிக்காத வகையில் எவ்வாறு பங்கு பற்றுவது பற்றி யோசிக்கலாம். அது கூட மறைமுகமான பங்கு பற்றலாக இருக்க வேண்டுமே தவிர முன் கூட்டியே பகிரங்கப்படுத்திய பங்குபற்றலாக இருக்கக்கூடாது.

கடந்த 2010ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத்பொன்சேகாவை ஆதரிப்பது என்ற கூட்டமைப்பின் முடிவானது சிங்கள மக்களை பொன்சேகாவுக்கு எதிரான மனநிலைக்குள் தள்ளியது. அதன் விளைவு சரத் பொன்சேகா பல லட்சம் வாக்குகளால் தோற்கும் நிலையை உருவாக்கியது. அந்த நிகழ்விலிருந்து பாடங்களை கற்றிருந்தும் மீண்டும்எதிர்க்கட்சிக்கு ஒரு தமிழனை பொதுவேட்பாளராக்க வேண்டும் என்று கோருவது மீண்டும் ராஜபக்சேயை பெரும்பான்மை வாக்குகளால் வெல்லவைப்பதற்கே வழிவகுக்கும்.

பங்குபற்றுதல் மூலம்தான் இந்த நோக்கத்தை அடையவேண்டும் என்ற கட்டாயமில்லை. சில சந்தர்ப்-பங்களில் பகிஸ்கரிப்பதன் மூலமும் அந்த நோக்கத்தை அடையமுடியும். அது இரு வெற்றிகளைத் தரும். ஒரு பக்கத்தில் இராஜதந்திர வெற்றியைத் தரும். மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய அரசியலை உயிர்ப்புடன் வைத்திருக்கவும், தமிழ்த் தேசத்தின் இருப்பை பலப்படுத்தவும் உதவும். விடுதலைப் புலிகள் இந்த அணுகுமுறையினையே பின்பற்றினர். 2005ம் ஆண்டு புவிசார் அரசியலை தமிழ் மக்களுக்கு சார்பாக திருப்புவதற்காகவே தேர்தலில் யாரையும் ஆதரிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்திருந்தனர். பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் புவிசார் அரசியலை தமிழ் மக்களுக்கு சார்பாக மாற்றி தமிழ்த் தேசிய அரசியலுக்கு இன்று சர்வதேச பெறுமதியைக் கொடுத்திருப்பது புலிகள் எடுத்த முடிவுதான்.

பூகோள அரசியல் போட்டியூடாக தமிழ்த் தேசிய அரசியலை வெற்றி கொள்ள வைக்கும் சூழலை நோக்கி நகர்த்துவதற்காக அந்த முடிவை எடுத்தனர். புலிகளை பகிரங்கமாக வசைபாடும் சம்பந்தன் தலைமை கூட புலிகள் உருவாக்கிய முதலீட்டில் மேல் நின்று தான் தமது அரசியலை நடாத்துகின்றது.

*- நன்றி : இது நம் தேசம்*



# தேசியம்



*Florida man wanted to remind everyone that 'this is America.' So he painted a giant American flag on his house*
*- (Washington post 5th June 14)*

**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

நாம் தேசியம், தேசப்பற்று, தேசியத்தோடு இணைந்தவர்கள் என்று மூச்சுக்கு முப்பது தரம் சொன்னாலும், எழுதினாலும் இந்தத் தேசியம் என்பதின் சரியான பதத்தையும், அதனால் சாதிக்கப்பட்ட, சாதிக்கப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன, என்பது தெரியாமலே அச்சொல் பதத்தைப் பாவித்து வருகின்றோம். இன்னும் சிலர் அதன் தாற்பரியம் புரியாமலே, அதை ஒரு தீண்டத்தகாத சொல் போலவும், தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்டிருப்பவர்களை ஏதோ வில்லண்டத்திற்கு பிரிவினையை வேண்டி நிற்கும் மக்கள் போலவும் பார்கின்றார்கள். **கண்ணை விற்று சித்திரம் வேண்டுவது போல,** தேசியத்தை விட்டுக்கொடுத்து எல்லாத் தமிழர்களையும் ஒன்று சேர்க்கப்போவதாகவும் சிலர் கூறுகின்றார்கள்.

இன்னும் சிலர் முற்றும் துறந்த முனிவர்கள் போன்ற பாவனையில் இருப்பதும், **நமக்கு வேண்டிய விடயங்களுக்கு மட்டும்** அப்பப்ப மேல் சட்டையை அணிவது போல தேசியம் பேசுகிறார்கள். தேசியம் என்பது, 'யாதும் ஊரே யாவரும் கேளீர் (உறவினர்)!' என்பதற்கு எதிரானது அல்ல. நாம் எமது தேசியத்தை மதிப்பது போல, மற்றவர்கள் அவர்களின் தேசியத்தை மதித்து உறவாடலாம். எமது தேசியத்தையும் அதன் அடையாளங்களையும் அடிப்பெட்டியில் வைத்துவிட்டுத்தான் அடுத்த தேசியத்தைசேர்ந்தவனோடு உறவாட வேண்டும் என்றால், அங்கு எமது தேசியத்திற்கு பிரச்சனை உள்ளது. அதை அழிக்கும் உள்நோக்கம் உள்ளது.

இன்னும் சிலர் நாம் இந்த நாட்டுக்கு வந்து விட்டோம், இந்நாட்டு பிரஜை ஆகிவிட்டோம், எமக்கு அங்கு யார் ஆண்டால்தான் என்ன என்ற தொனியில் கதைப்பார்கள் இதில் 'இங்கை கைப்பற்றி ஆயுதங்கள், எடுத்த கையோடு, அதைப் பாவித்து அடுத்ததையும் பிடித்திருக்கலாம் தானே' என்று சினிமா படம் பார்ப்பவர்கள் போல சொன்னவர்களும் உண்டு. இவர்கள் யாரின் ஆட்சி உச்சத்தில் உள்ளதோ அவர்களின் பக்கம், தேசியமா? கிலோ என்ன விலை? என்று கேட்பவர்கள்.

தேசியத்தை கட்டி எழுப்புவதில் மேற்கத்தையவர்கள் கைதேர்ந்தவர்கள். அவர்களின் தேசியம் சம்பந்தமான நடைவடிக்கைகளை கூர்ந்து அவதானித்தால், இந்த 500 வருடங்களில் United States (ஐக்கிய அமெரிக்கா) எப்படி அவர்களுடைய national flag ஐயும், Great Seal ஐயும் பாவித்து, 50 states ஐயும் ஒரு கொடியின் கீழ் நிற்க வைத்தார்கள் என்பது ஒவ்வொரு ஈழத்தமிழனும் நுணுக்கமாக அவதானித்து கற்றுக் கொள்ளவேண்டிய பாடம்.

அத்தோடு அமெரிக்காவின் பழங்குடி மக்கள் ஐரோப்பியருடன் உயிரைக் கொடுத்து சண்டை பிடிக்க, ஒருசில குழுக்கள் தங்களின் சொந்த லாபங்களுக்கும், சில பவுண் காசுகளுக்கும் காட்டிக்கொடுப்பை மேற்கொண்டு ஐரோப்பியரின் சலுகை பெற்று தமது இனம் அடியோடு அழிவதற்கு காரணமாக இருந்தார்கள். வியாபாரப் பாதை இலகுவானது, விடுதலைப் பாதை கரடுமுரடானது, தொலை நோக்குடன், தேசியத்தின் பால் சிந்தித்து செயற்பட வேண்டிய கட்டத்தின் நாம் உள்ளோம்.

இதற்கு மற்றவர்கள் எப்படி ஒரு இனத்தை அல்ல, பல இனங்களை ஒற்றுமையாக, ஒரு குடையின் கீழ் வைத்திருப்பதற்கு, அங்கு முன்பு இல்லா தேசிய உணர்வைக் கட்டி எழுப்பி 'நாம் அமெரிக்கர்கள்' 'நாம் இந்தியர்கள்' 'நாம் பிரித்தானியர்கள்' என்று ஒரு குறியீட்டின் கீழ் அதாவது தேசியக்கொடியின் கீழ் எப்படி ஒன்று சேர்த்தார்கள் என்பதை அறிய வேண்டும்.

அமெரிக்கா, பிரித்தானியா எல்லாமே பல இனமக்கள், பல நூற்றாண்டுக்கு முன்பிருந்தே வாழுகின்ற நாடு. அவர்கள் ஒரு மொழி, ஒரு சமயத்தை பின்பற்றுவர்கள் அல்ல. அவர்கள் எல்லோரையும், தடைகளை தாண்டி, எப்படி ஒரு குறியீட்டின் கீழ் இணைத்து, ஒரே குரலில், ஒரு கொடியின் கீழ் எழுந்து நிற்க வைத்தார்கள் என்பதும், தேசிய உணர்வுடன் வளர்ந்தார்கள் என்பதும் மிக சுவாரசியமான, ஆனால் அறிவு பூர்வமாக தொலை நோக்குடன் ஒவ்வொரு அடக்கு முறைக்குள் வாழும் இனமும் அறிந்து கொள்ளவேண்டிய விடயம். இப்பவும் இந்த நாட்டுக்கும், அரசிற்கும் விசுவாசமாக சத்தியப்பிரமானம் எடுத்துத்தான் நாம் இன் நாட்டு பிரஜையானோம், 'ஓ கனடா' என்ற தேசிய கீதம் எல்லோருக்கும் தெரிந்ததொன்று.

எங்கள் தேசியக்குறியீடுகள் அடிப்பெட்டிக்குள் வைத்துவிட்டு, ஒரு இனமாக இருந்தால் கூட தேசியத்தை வளர்க்க முடியாது, அதை நன்கு அறிந்து, எமது தேசிய அடையாளத்தை அழிப்பதற்கும் அதை வன்முறையோடு முடிச்சு போடுவதற்கும், அது பற்றிய பயத்தை வயது போனவர்களிடமும், அன்னிய ஆட்சியாளர்களை அண்ணாந்து பார்ப்பவர்களுக்கும் ஊட்டுகிறார்கள். இதற்கு ஒரே வழி எமது அடையாளங்களை நாம் எல்லா சாதாரண பொது நிகழ்வுகளிலும், அழகாக, விரும்பி மக்கள் போடக் கூடிய வகையில் ரீசேட், கைப்பைகள், தொப்பிகள் என்று அதை பொதுமையாக்கவேண்டும்.

**தெரிந்த சிங்கள மேலாண்மை, தெரியாதமேற்கைத்திய திட்டம், அறியாமையால் தெரிந்தோ தெரியாமலோ தேசியத்தை சிதைக்கும் எம்மக்கள்! இவைஎல்லாவற்றுக்குள்ளாலும் மீண்டு, தேசிய இனமாக தொடர்ந்தும் பேணப்படுவது எம்கைகளில் தான் உள்ளது.**

முன்பு ஒரு நாடு ஆக இல்லா 'இந்தியா'வை வெள்ளையர்கள் தமது ஆட்சிலாபம் கருதி கட்டி எழுப்புவதற்கு 'பாரதேசம்' 'இந்தியக் கொடி' 'பாரதமாதா' என்று பல வழிகளில் இந்தியாவை ஒரு நாடாக மக்களை உள்வாங்க வைத்தார்கள். தெரிந்த சிங்கள மேலாண்மை, தெரியாத மேற்கைத்திய திட்டம், அறியாமையால் தெரிந்தோ தெரியாமலோ தேசியத்தை சிதைக்கும் எம்மக்கள்! இவை எல்லாவற்றுக்குள்ளாலும் மீண்டு, தேசிய இனமாக தொடர்ந்தும் பேணப்படுவது எம்கைகளில் தான் உள்ளது. பொதுமையாக்கல் என்ற விதத்தில் எமது தேசியக்கொடியையே நமது கொடியாகவும் வைத்திருக்கும் நாடு கடந்த அரசு ஒரு உதாரணம்.


MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!
உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.
Special rates for Containers and Machinery
4 Collection Points : Harrow, Watford, Knightsbridege, Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00 FREIGHT AND BOX £15.00 (Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions



SCAN ELECTRONICS LTD
4 Camera CCTV System £ 499 + VAT
* 4 N/V Cameras (800 TVL)
* 4 CHANNEL DVR (1 Month Rec + Mob View + 1 TB HD)
8 Camera CCTV System £ 749 + VAT
* 8 N/V Cameras (800 TVL)
* 8 CHANNEL DVR (1 Month Rec + Mob View + 1 TB HD)
16 Camera CCTV System £ 1249 + VAT
* 16 N/V Cameras (600 TVL)
* 16 CHANNEL DVR (1 Month Rec + Mob View + 1 TB HD)
EPOS System £ 1250 + VAT
Wire Free Alarm £ 350 + VAT
2 Remote Key, 2 PIR Sensor Mobile Link, 1 Control Panel
இனம்தெரியாத நபர்கள் வீட்டுக்கு வந்தால் உங்கள் கைத்தொலைபேசிக்கு எஸ்.எம்.எஸ். மூலம் எச்சரிக்கை அனுப்பப்படும்.
All the Prices Including Fitting and Transport
* All Prices within M25 Miles, Terms & Condiotions Apply
EPOS - Access Control System - Remote Management - CCTV - Alarm - Biomatrics System
SCAN ELECTRONICS LTD
UNIT - 06, Zeal House, 8, Deer Park Road, London, SW19 3UU. Mob 07956263068
Email - info@scanelectronics.com
Web - www.scanelectronics.com

# (வஞ்சக)வாக்குமூலங்கள் அல்லது வாக்குமூலங்களின் பின்னால் உள்ள வஞ்சம்

**ச.ச.முத்து**

83ம்ஆண்டு, பெப்ரவரி மாதத்தின் இறுதி வாரம், சிங்களத்தின் வெலிக்கட சிறையில் இருந்த தமிழீழவிடுதலைப்போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான தங்கத்துரையை தமிழர்விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமும், பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவருமான அமிர்தலிங்கம் சந்திக்கின்றார். கைது செய்யப்பட்டு இவ்வளவு காலமும் ஏனென்று திரும்பி பார்க்காமல் எதிர்க்கட்சிதலைவர் என்ற தேர் ஓட்டத்தில் இருந்தவர் இப்படி சந்தித்தது ஒரு வாக்குமூலத்தை பெறுவதற்காகவே "தமிழீழவிடுதலைப்புலிகள் செய்துவரும் ஆயுதப் போராட்டத்தை விமர்சித்து,கண்டித்து ஒரு வாக்குமூலம்" இதுவே நோக்கம். அதற்கு சில நாட்களுக்கு(22.02.83) முன்னர் யாழ் பல நோக்குகூட்டுறவுச் சங்கத்தில் மோசடியில் ஈடுபட்டமை உறுதியாக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளால் எச்சரிக்கைக்காக சுட்டு காயப்படுத்தப்பட்ட ஆலாலசுந்தரத்துக்கு ஆதரவாக என்று சொல்லப்பட்டாலும் இதன் பின்னே இருப்பதோ விடுதலையின் வீரியத்தை குறைத்து அழிப்பதற்கான சிங்களப் பேரினவாத சதியே.

**2009 மே மாதத்துக்கு பின்னர் எழுதி வெளியிடப்படும் வரலாறு என்ற பெயரிலான விசக்கருத்துகளும், ரத்தசாட்சியம் என்று எடுக்கப்பட்ட வாந்திகளும், போராட்டத்தில் தமது பதிவுகள் என்ற பெயருக்குள் விதைக்கப்பட்ட கோழைத்தனமான குத்தல்களும் ஒரே நோக்கத்தையே கொண்டிருக்கின்றன. அல்லது எதிரியின் நோக்கத்தை ஈடுகட்ட உதவுகின்றன.**

இது காலகாலமாக நடந்துகொண்டிருப்பது தான். விடுதலைப்போராட்டத்தை,புரட்சியை ஒடுக்குவதற்காக, கருவறுப்பதற்காக செய்யப்படும் வேலைகளில் மிகமுக்கியமானது. காந்தியுடன் இருந்தவர்களே எழுதும் 'இன்சைட் ஸ்டோரி' தொடக்கம் சேகுவேராவின் தோழனாக இருந்தவன் சொல்லும் சுயவாக்குமூலம் வரைக்கும் இதுவே சொல்லும் சேதி.

ஜோசப் ஸ்டாலினின் மகள் எழுதிய Twenty letters to a Friend என்ற தனது தந்தையின் மறுபக்கமும் இத்தகையதே. இவை வெறும் இலக்கியங்கள்,அல்லது வரலாற்று வாக்குமூலங்கள் என்பதற்கும் அப்பால் அவர்கள் கட்டிவளர்த்த புரட்சிகர கருத்துக்களை கூர்மழுங்க செய்பவை ஆகவும், அவர்களுடைய கருத்துகளுக்கு பின்னால் அணிதிரளும் மக்கள்கூட்டத்தை குழப்புவதுமே நோக்கமாக கொண்டவை.

எமது தமிழீழவிடுதலைப்போராட்டத்திலும் இத்தகைய வாக்குமூலங்களுக்கு குறைச்சல் இல்லை. "விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனே ராஜீவ்காந்தியை கொல்ல உத்தரவிட்டார்" என்று ஒருநாள் கே.பியின் வாக்குமூலம் வெளிவரும்... இன்னொரு நாள் திடீரென "நோர்வேயில் வைத்து பேச்சுவார்த்தை மேசையில் விடுதலைப்புலிகள் தரப்பால் ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்வை வன்னியில் வைத்து தலைவர் என் கண்முன்னாலேயே கிழித்தெறிந்தார்" என கருணா கூறியதாக சேதி வெளிவரும். சரி, இவர்கள்தான் அறியப்பட்ட சிங்கள கையாட்கள் என்றால், 2009 மே மாதத்துக்கு பின்னர் இத்தகைய வாக்குமூலங்கள் பல திசைகளில் இருந்தும் பாயத்தொடங்கின. கடைசியாக வட்டுவாகல்வரை நின்றவர்கள் என்ற அடைமொழியுடன் வெளியிடப்படும் இத்தகைய வாக்குமூலங்கள் எல்லாமே மீண்டும் ஒரு முறை தேசியவிடுதலைப் போராட்டம் எழுந்துவிடக்கூடாது, அப்படி எங்காவது சின்னதாக முளைவிட்டாலும்கூட அது மக்களின் ஆதரவை பெற்றுவிடக்கூடாது என்பதே நோக்கமாக கொண்டவை.

இரண்டாவதாக, இந்த வாக்குமூலங்களை வழங்குபவர்கள் அல்லது வாக்குமூலங்களை வாங்கி பகிரங்கப்படுத்துபவர்கள் சிங்கள பேரினவாதம் இப்போதும் தொடரும் இனப்படுகொலைகளின் தொடர்ச்சியை, ராணுவ முற்றுகைக்குள்ளான தமிழர்களின் அன்றாட வாழ்வை, பெண்கள் மீது சிங்களம் நடாத்தும் தொடர்ச்சியானபாலியல்படுபாதங்களைவெளிப்படுத்துவதை விரும்புவதே இல்லை என்பதை கவனித்து இருப்பீர்கள்.அதனை மிகமிக கவனமாக தவிர்க்கிறார்கள். அத்துடன் இத்தகைய வாக்குமூலங்களை பரபரப்பாக வழங்குவோர் அதன் அடுத்தகட்டமாக இந்த தேசிய விடுதலைக்கு வேறு என்ன மார்க்கம் அல்லது ஈழத்தமிழினம் தனது சுயநிர்ணய ஊரிமையை வென்றெடுக்க என்ன செய்யலாம் என்பதை கூறுவதே இல்லை.

வெறுமனே வன்மம், காழ்ப்பு என்ற வரையறைக்குள்ளேயே இந்த வாக்குமூலங்களை வைத்தாக வேண்டும்.வேறு என்ன இருக்கிறது அதில். தமிழீழவிடுதலைப் போராட்டம் தனது நீண்ட பல பத்துஆண்டுகளில் இத்தகைய பல வாக்குமூலங்களை அறிக்கைகள் வடிவிலும், சுயசாட்சி வடிவிலும் கண்டுவருவதை ஒரு முறை சுருக்கமாகத்தன்னும் பார்த்தால்தான் இதன் பரிணாமம் (எவலூசன்) தெரியும்.

1981ல் மாவட்டசபைதேர்தலுடன் நடந்த மிலேச்சத்தகமான யாழ்நூலக எரிப்பு மற்றும் சிங்களபேரினவாதத்தின் பேயாட்டம் என்பனவற்றுடன் அதற்கு எதிரான எதிர்வினைகள் ஆயுதரீதியாக வேகமெடுத்த போது 'ஆயுதங்களினால் ஒருபோதும் உரிமைகளை வென்றுவிடமுடியாது' என்ற கருத்தில் ஒரு அறிக்கையை சிங்களதேசத்தின் பிரதமரான ரணசிங்க பிரேமதாசாவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் முருகேசு சிவசிதம்பரமும் விடுத்திருந்தார்கள்.அப்போதுமேற்குநாடுகளில் சுற்றுபிரயாணம் செய்துகொண்டிருந்த கூட்டணி செயலதிபரும் சிங்கள பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவருமான அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் யோசனையின்பேரிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டதாக பின்னர் சொல்லப்பட்டது.

அதிகரித்துக்கொண்டே சென்றுவிட்ட சிங்கள பேரினவாத வெறிச்செயல்களால் மக்கள் ஆயுதப்போராட்டஅமைப்புகளுக்கு ஆதரவு தந்துவிடுவார்கள் என்ற அச்சமே இந்த அறிக்கை வடிவிலான வாக்குமூலத்தின் நோக்கம். மிக மேலோட்டமாக பார்த்தால் ஒரு பகிரங்கமாக விடப்படும் ஒரு அரசியல்கருத்து போன்று தோற்றமளிப்பதாக இருந்தாலும் சிங்கள பேரினவாதத்தின் சூழ்ச்சியின் ஒரு வடிவமே இது.

தமிழ்மக்களின் மேலான அரசியல் மேலாண்மை தங்களின் கைகளில் இருந்து பறிக்கப்பட்டு பரந்துபட்ட மக்களிடம் விடுதலைப் புலிகளால் கொண்டு செல்லப்படுகின்றது.. இதனால் அரசியல் அனாதைகளாக மேடைப் பேச்சு அரசியல் ஆகிவிடும் என்ற காழ்ப்பு கொண்டிருந்த கூட்டணிதலைமையை கொம்பு சீவி விடுதலைக்கு எதிராக கருத்தியல் யுத்தம் செய்ய சிங்களம் இறக்கி விட்டதன் உச்சமே சிங்களதேச பிரதமருடன் கூட்டுச் சேர்ந்து தமிழர் விடுதலைக்கூட்டணி விடுத்த அறிக்கை...

இதனையே 'விடுதலைப்புலிகளின் உறுதியான போராட்டமும் தமிழ்மக்கள்மத்தியில் விடுதலைப்புலிகளுக்கு இருந்த பேராதரவும், அபிமானமும் பிற்போக்குவாத தமிழ் பாராளுமன்ற வாதிகளுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ்மக்களின் அரசியல்கிளர்ச்சியானது ஆயுதப்போராட்ட பரிணாமத்தை அடைந்து விட்டது என்பதனையும் தமது கட்சி அரசியல் ரீதியாக செல்லாக்காசாக மாறி விட்டது என்பதனையும் உணர்ந்த கூடடணித் தலைப்பீடம் எமது ஆயுதப்போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களை தீவிரமாக ஆரம்பித்துள்ளது' என தமிழீழவிடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ வரலாற்று ஆவணமான 'விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாறு 1975-1984' என்பதில் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு காலகட்டத்தில் தமிழ்மக்களின் பிரச்சனைக்கு தனித்தமிழீழமே ஒரேதீர்வு என பிரகடனப்படுத்தி அதை தேர்தலிலும் முன்வைத்து வென்ற அரசியல்வாதிகளை வைத்தே இந்த தமிழீழம் என்ற இலட்சியத்தை பலவீனப்படுத்தும் வேலையையே சிங்களம் செய்தது.

சிங்களசனாதிபதி தேர்தலை பகிஸ்கரிப்பதாக தமிழர்விடுதலைக்கூட்டணி வெறுமனே அறிக்கை மட்டும் விட்டுவிட்டு மக்கள்மத்தியில் தேர்தலை பகிஸ்கரிக்கும்படி பெரிதாக வேலை ஏதும் செய்யாமல் ஓரளவுக்கு ஜேஆருக்கு ஆதரவு நிலை எடுத்தபோதே 1982 செப்டம்பர் 29ம்திகதி ஜே.ஆர் பிரச்சாரத்துக்கு யாழ் வந்த போது சீலன் தலைமையிலான விடுதலைப் புலிகள் அணி ஒன்று பொன்னாலையில் கடற்படை தொடர்வாகன அணிமீது பாரியதாக்குதல் ஒன்றை நடாத்தியது.

உடனேயே கூடடணித் தலைப்பீடம் வரிந்து கட்டிக்கொண்டு 'இது ஒரு பயங்கரவாத செயல்' என அறிக்கைவிட்டு ஜேஆரை தேற்றியது முதல் 1983 யூலையின் பின் கூட்டணி நாட்டைவிட்டு வெளியேறும்வரைக்கும் இத்தகைய குழிபறிப்பு வாக்குமூலங்களை விட்டபடியே இருந்தது.

இவர்கள் இந்தியா சென்ற பின்னர் அங்கும் இந்தியவல்லாதிக்க நலன்பேணும் புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து தமிழகமக்கள் தமிழீழ விடுதலைப்போராட்டம் மீது ஒருங்கு திரண்ட கரிசனையை, ஆதரவை தந்துவிடுவதை தடுக்கும் வாக்குமூலங்களை வழங்கியபடியே இருந்தனர்.

**ஒரு காலகட்டத்தில் தமிழ்மக்களின் பிரச்சனைக்கு தனித்தமிழீழமே ஒரே தீர்வு என பிரகடனப்படுத்தி அதை தேர்தலிலும் முன்வைத்து வென்ற அரசியல்வாதிகளை வைத்தே இந்த தமிழீழம் என்ற இலட்சியத்தை பலவீனப்படுத்தும் வேலையையே சிங்களம் செய்தது.**

தமிழ்மண் எங்கும் விமானக்குண்டுவீச்சுகள் நிகழ்ந்த காலத்தில, கடற்படைகலங்களில் இருந்து தமிழ்மண்மீது செறிவான எறிகளை கண் வீசப்பட்ட பொழுதில் அதைகண்டு தமிழகம் எழுந்துவிடக்கூடாது என்பதற்காக அந்நேரம் அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் சென்னை அரசினர் விடுதியில் இருந்தபடியே ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் "இங்கே நாங்கள் நுளம்புகளுடன் வாழப்பழகிக் கொண்டதைப்போலவே அங்கு எம் மக்களும் ராணுவத்துடன் வாழ பழகி கொண்டுள்ளனர்" என்ற மிகமோசமான கருத்தை கூறினார்.

இதில் மோசமான இன்னொரு பக்கம் என்ன வென்றால் இலக்கியம் என்ற பெயரிலும் இத்தகைய வாக்குமூலங்கள் தமிழீழ இலட்சியத்தை, அதனை முன்னெடுக்க உறுதியுடன் போராடிய அமைப்பை குறிவைத்து வெளியிடப்படுவதுதான்.

சென்ற வருடத்தில்கூட இங்கிருந்துசோனியாவின் வளர்ப்பு சு.நாச்சியப்பன் கூட்டிய கூடடத்துக்கு சென்ற முக்கியமான தூண் ஒன்று தமிழ் நாட்டில் பெரும் மாணவர்எழுச்சியை நிகழ்த்திய மாணவர் தலைவர்களுடன் நடாத்திய சந்திப்பில் "இதெல்லாம் சரிப்படாது" என்ற வாக்குமூலத்தை வழங்கி அவர்களிடம் மூக்குடைபட்டதும் இத்தகைய வாக்குமூலங்கள் வெளிப்படையாக மட்டும் இன்றி மூடிய கதவுகளின் பின்பாகவும் விதைக்கப்படுகின்றன என்பதையே காட்டுகின்றது.

இப்படியே நிறைய எழுதலாம்.ஆனால் இன்றைக்கு 2009 மே மாதத்துக்கு பின்னர் எழுதி வெளியிடப்படும் வரலாறு என்ற பெயரிலான விசக்கருத்துகளும், ரத்தசாட்சியம் என்று எடுக்கப்பட்ட வாந்திகளும், போராட்டத்தில் தமது பதிவுகள் என்ற பெயருக்குள் விதைக்கப்பட்ட கோழைத்தனமான குத்தல்களும் ஒரே நோக்கத்தையே கொண்டிருக்கின்றன. அல்லது எதிரியின் நோக்கத்தை ஈடுகட்ட உதவுகின்றன.

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
THE LAW SOCIETY ACCREDITED Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

# மோடியின் அமைச்சரவையும் ஆட்சிப் பிரச்சனையும்




**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

படையப்பா திரைப்படத்தில் செந்தில் தன் நண்பர்கள் புடை சூழ பெண்பார்க்கப் போகும் போது வழியில் உள்ளவர்கள் இதில் யார் மாப்பிள்ளை எனக் கேட்க அதற்குப் பதில் கூறிய ரஜனிகாந்த் செந்திலைச் சுட்டிக் காட்டி இவர் தான் மாப்பிள்ளை ஆனால் அவர் போட்டிருக்கும் ஆடை தன்னுடையது என்பார். இந்தியாவின் தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்ற நரேந்திர மோடியின் நிலை அதிலும் மோசமானது. இவர் தான நரேந்திர மோடி ஆனால் அவரது தலைமை அமைச்சர் பதவி என்னுடையது எனச் சொல்லப் பல பேர் உரிமை கொண்டாடப் போகிறார்கள். மோடியின் பல்லாயிரம் கோடி தேர்தல் செலவிற்குப் பணம் கொடுத்தவர்கள், சங்பரிவார் என அழைக்கப்படும் ராஸ்ட்ரிய ஸ்வயம்சேவா சங்கத்தினதும் அதனது இணை அமைப்புக்களினதும் கூட்டமைப்பு, வெளிநாடுகளில் வாழும் குஜராத்திரியர்கள், மோடியின் பின்னால் நின்று செயற்பட்ட இளைஞர்கள் என மோடியின் வெற்றிக்கும் அதன் கனிக்கும் உரிமை கொண்டாடப் பல உள்ளனர்.

### ◆ தமிழன் அழுத கண்ணீர் மோடியை வெல்ல வைத்ததா?

அல்லல் பட்டு ஆற்றாது தமிழன் அழுத கண்ணீர் திராவிட முன்னேற்றக் கழகத்தை நாற்பது இடங்களிலும் தோல்வியடைய வைத்தது, காங்கிரசை தமிழ் நாட்டில் போட்டியிட்ட 39 தொகுதிகளில்38 இடங்களில் கட்டுப் பணத்தை இழந்தது, மொத்த இந்தியாவிலும் 44 தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றதால் அதிகார பூர்வ எதிர்க்கட்சிக்குத் தேவையான குறைந்த அளவு 55 தொகுதிகள் இல்லாமையினால் காங்கிரசு பரிதவிக்கிறது, இந்திய அமைச்சரவையில் ஒரு மலையாளி கூட இடம் பெறவில்லை. இப்படியும் மோடியின் வெற்றிக்கு உரிமை கொண்டாடப்படுகின்றது.

மோடியின் தலைமையில் 24 அமைச்சர்களும் (Cabinet Ministers), 10 இணை அமைச்சர்களும் (Independent Minister of State) 12 துணை அமைச்சர்களும் (Minister of State) இடம் பெற்றுள்ளனர். இந்தியாவில் அமைச்சரவையில் (Cabinet) அதிகப்பேர் இடம் பெறக் கூடாது என்பதற்காக இணை அமைச்சுப் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இணை அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்கள் தாமாகவே அந்த அமைச்சுப் பதவியை மற்றவர்களின் மேற்பார்வை இன்றி வகிப்பார்கள். துணை அமைச்சர்கள் அமைச்சரவை அமைச்சர்களுக்கு உதவியாக இருப்பார்கள். இணை அமைச்சர்களும் துணை அமைச்சர்களும் அமைச்சரவையில் இடம்பெற மாட்டார்கள். கடந்த காங்கிரசு அரசில் 34 அமைச்சர்கள் இருந்தனர்.

சிறிய அமைச்சரவை சிறந்த ஆட்சி என்ற உறுதி மொழியுடன் மோடி தன் அமைச்சர்களைத் தெரிவு செய்தார். பல்வேறு அரச திணைக்களங்களை சிறந்த முறையில் ஒருங்கிணைப்புச் செய்து செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படும் என்றார் மோடி. அத்துடன் உயர் நிலை அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைத்து கீழ்நிலை அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றார். இந்திய அரசின் இருநூறு பில்லியன் (இரண்டாயிரம் கோடி) அமெரிக்க டொலர்கள் பெறுமதியான திட்டங்கள்நிறைவேற்றுப்படாமல்நிலுவையில்உள்ளன. சிவ சேனா அதிக அமைச்சுப் பதவிகளைக் கேட்கிறது. இந்தியாவில் அமைச்சரவையும் சாதிகளிடை சமநிலை பேணப்பட வேண்டிய ஒன்று. உத்தரப் பிரதேசம், மஹராஸ்ட்ரா, பிஹார் ஆகிய மாநிலங்களில் ஆட்சியைக் கைப்பற்றும் வகையில் இந்த மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் புதிய அமைச்சரவையில் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வரலாற்றில் அதிக அளவு ஆட்கள் கலந்து கொண்ட தலைமை அமைச்சர் பதவி ஏற்பு வைபவமாக மோடியின் பதவி ஏற்பு அமைந்தது. பதவி ஏற்பு வைபவத்தின் பின்னர் மோடிக்கு வாழ்த்துத் தெரிவிக்கப் பெரும் தள்ளுமுல்லு ஏற்பட்டது. முக்கேஸ் அம்பானி, அனில் அம்பானி ஆகியோர் தமது குடும்பத்தினருடனும் மேலும் அசோக் ஹ்ந்துஜா, சுனில் மிட்டல், ராஜன் மிட்டல், குமாரமங்கலம் பிர்லா, சசி ருய்யா, கௌதம் அடானி, விஎன் தூட் ஆகிய பெரும் பணக்காரர்களும் நரேந்திர மோடியின் பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர். மோடி ஆட்சிக்கு வந்தவுடன் இந்தியப் பெரு முதலாளிகளின் மொத்தச் சொத்து மதிப்பு பெருமளவில் உயர்ந்து விட்டது. ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் பங்குச் சந்தை விலை அதிகரிப்பு ஆகியவற்றால் இது நடந்தது. ஏழைகளின் சொத்து மதிப்பு ?

மோடியின் ஆட்சியில் பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்து தமது வாழ்வு மேம்படும் என்ற நம்பிக்கையில் வழமையாக பாரதிய ஜனதாக் கட்சிக்கு வாக்களிக்காத இஸ்லாமியர்கள், தலித்துக்கள் பெருமளவில் பாஜகவிற்கு வாக்களித்து இருந்தனர். மோடி பதவிக்கு வந்தால் இந்தியாவில் இலகுவாக முதலீடு செய்யலாம் என உலகெங்கும் வாழும் குஜராத்தியர்கள் மோடிக்கு பெரும் ஆதரவு வழங்கினார்கள்.

தலைமை அமைச்சர் மோடியின் மாதச் சம்பளம் 50,000 ரூபா. இத்துடன் மேலதிகமாக மாதம் 65,000 ரூபாக்கள் வழங்கப்படும். இன்னும் constituency allowance என மாதம் 45,000 ரூபாக்கள் வழங்கப்படும். அவரது மாதாந்த மொத்த வருமானம் 160,000 ரூபாக்கள்.

### ◆ மோடியின் அமைச்சரவையில் முக்கியமானவர்கள்:

- ராஜ்நாத் சிங் (உள்துறை)
- சுஸ்மா சுவராஜ் (வெளியுறவுத் துறை)
- அருண் ஜெட்லி (நிதி, பாதுகாப்பு)
- வெங்கையா நாயுடு (கிராம அபிவிருத்தி, பாராளமன்ற அலுவல்கள்)
- நிதின் கட்காரி (தரைப் போக்குவர்த்து, கப்பல் போக்குவரத்து)
- உமா பார்தி (நீர்வளம், கங்கை சுத்திகரிப்பு)
- மனேக்கா காந்தி (பெண்கள், சிறுவர் அபிவிருத்தி)
- ஆனந்த் குமார் (இரசாயனமும் உரமும், மேலதிகமாக பாராளமன்ற அலுவல்)
- ரவி சங்கர் பிரசாத் (தொலைத் தொடர்பு, சட்டம், நீதி)
- ஸ்மிரிடி இரானி (மனித வள மேம்பாடு)
- ஹர்ஸ் வர்தன (சுகாதாரம், குடும்பநலம்)

கூட்டணியில் உள்ள மற்றக் கட்சிகளில் இருந்து அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட முக்கியமானவர்கள்:

- ராம் விலாஸ் பஸ்வான் (லோக் ஜன சக்திக் கட்சி - பிஹார் மாநிலம்), ஹர்சிம்ரத் கௌர் பதல்(அகாலித் தளம் கட்சி- பஞ்சாம் மாநிலம்)
- ஆனந்த்கீற் (சிவசேனா-மும்பாயைத்தலை நகராகக் கொண்ட மஹராஸ்ட்ரா மாநிலம்)
- அசோக் கஜபதி ராஜு (தெலுங்கு தேசம் கட்சி - ஆந்திரா)

மோடியின் அமைச்சரவையில் ஒரே ஒரு முசுலிம் அமைச்சர் இடம்பெற்றுள்ளார். நஜ்மா ஹெப்துல்லா சிறுபானமை விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மோடியின் அமைச்சரவையின் சராசரி வயது 57. மோடி தனது அமைச்சரவையில் 75 வயதிற்கு மேற்பட்டவர்களை இணைக்கவில்லை. இதனால் எல்.கே.அத்வானி, முர்ளி மனோகர் ஜோஸி, சுப்பிரமணிய சுவாமி ஆகியோர் ஓரம் கட்டப்பட்டனர். சுப்பிரமணிய சுவாமி தான் தனக்கு உள்ள அதிகாரத்தை(?) பாவித்து நரேந்திர மோடியை ஒரு பார்ப்பனராக சாதி உயர்த்துவதாக தனது டுவிட்டரில் தெரிவித்திருந்தார். இந்து மதப்படி ஒருவரின் சாதியை அவரது பிறப்பு நிர்ணயிக்கும். யாரையாவது மேல் சாதிக்கு உயர்த்துவதாயின் 101 பார்ப்பனர்கள் யாகம் செய்து தங்கத்தால் செய்யப்பட்ட பசுவின் வயிற்றுக்குள் அவரைச் செலுத்தி பின்னர் அவர் மீண்டும் இப்பூமியில் அப்பசுவின் வயிற்றில் இருந்து பிறப்பது போல் செய்து அவர் சாதி உயர்த்தப்படுவார். சு. சுவாமி எப்போதும் கோமாளித்தனமாக ஏதாவது செய்வார். குடும்பத்தை அடிப்படையாக வைத்து வந்த அரசியல்வாதிகளுக்கு அமைச்சுப் பதவி கொடுக்கப்படவில்லை. பாவம் வருண் காந்தி (இந்திராகாந்தியின் பேரனும், சஞ்சய் காந்தியின் மகனும்). ஆர்.எஸ்.எஸ் உறுதியாகச் சொல்லிவிட்டது 75 வயதிற்குக் கூடிய அத்வானி அவைத் தலைவர் (சபாநாயகர்) பதவி கூட ஏற்கக் கூடாது என்று.

இந்திரா காந்தியின் இரண்டாவது மருமகள் மனேக்கா (இயற்பெயர் மேனஹா) காந்திக்கு சுற்றுச் சூழல் துறை கொடுக்கப்படவில்லை. இந்தியப் பெருமுதலாளிகளுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் பிரச்சனை கொடுக்காமல் இருக்க அவரிடம் அத்துறை வழங்கப்படவில்லை. தேர்தலின் போது மோடியின் வலது கரமாகச் செயற்பட்ட அமித் ஷாவிற்கு அமைச்சுப்பதவி கொடுக்கப்படவில்லை. அவர் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவராக்கப்படலாம். மோடி தான் கட்சியைக் கைப்பற்ற இப்படிச் செய்திருக்கலாம்.

மலையாளிகள் எவரும் அமைச்சரவையில் இல்லை. மேற்கு வங்கத்தில் இருந்தும் யாரும் இல்லை, இந்த மாநிலங்களில் பாஜக படு தோல்வியடைந்தது. தமிழ்நாடு கன்னியாகுமரியில் இருந்து தேர்தெடுக்கப்பட்ட பொன் இராதா கிருஷ்ணனுக்கு துணை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. திருச்சியில் பிறந்த நிர்மலா சீதாராமனுக்கு (M.Phil in International Studies) வர்த்தக இணை அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. நிர்மலா மக்களவையிலோ (லோக் சபா) மாநிலங்களவையிலோ (ராஜ்ய சபா) உறுப்பினர் அல்ல.

பா.ஜ.க எல்லாத் தொகுதிகளிலும் வெற்றி பெற்ற ராஜஸ்த்தான் மாநிலத்தில் இருந்து ஒரு அமைச்சர் கூட இல்லை என்பது பலரையும் ஆச்சரியப் படுத்தியுள்ளது. ஏழு பெண் அமைச்சர்கள் பதவி ஏற்றுள்ளனர்.

இராமாயணம் நாடகத் தொடரில் சீதையாக நடித்தவரும் ராகுல் காந்திக்கு எதிராக அமெதியில் போட்டியிட்டுத் தோற்றவருமான ஸ்மிரிடி இரானியும். இவருக்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த மனித வள மேம்பாட்டுத் துறை வழங்கப்பட்டுள்ளது. ஒரு பட்டதாரி கூட இல்லாத ஸ்மிரிடி இரானி எப்படி மனைத வள மேம்பாட்டுத்துறை அமைச்சராகலாம் எனக் காங்கிரசுக் கட்சியினர் கேள்வி எழுப்பினர். இமாச்சல் பிரதேசம், மேற்கு வங்கம், கேரளா, மெகாலயா, நாகலாந்து,...

*(தொடர்ச்சி 28ம் பக்கம்)*

**கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?**

**தனிநபரோ... வியாபாரமோ...**

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN

CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN

CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP

www.bbkca.com

Email: admin@bbkca.com

R3

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

# Say 'No' To Sri Lanka, And Dilmah Tea



By Trevor Grant

It was a scene that has been played out many times since the brutal end to the civil war in the Tamil homeland.

Last year the Sri Lankan defence secretary and accused war criminal, Gotabaya Rajapaksa, stood alongside one of Sri Lanka's richest men, Merrill Fernando, cutting a ribbon to open a new war memorial that purports to be about peace and reconciliation but, in reality, glorifies the murderers of at least 70,000 innocent civilians in 2009 and enhances the process of genocide and ethnic-cleansing in traditional Tamil lands.

**02.** காங்கிரஸ் அரசு இலங்கை விஷயத்தில் ஒரு appeasement மட்டுமே கடைபிடித்தது. இலங்கையில் இந்தியாவுக்கு சாதகமாக இருந்திருக்கக்கூடிய 'ராஜதந்திர உடைமையான' தமிழர்களை அது இழந்துவிட்டது. மோடி அரசு இலங்கையுடன் இணக்கமாகவும் நடக்கும் பிணக்கையும் உருவாக்கும். ஆனால் இனி அது தமிழர்களை தனது ராஜந்திர உடைமையாக கருத வாய்ப்பில்லை. ஏனென்றில் ஈழத்தமிழர்களின் சார்பில் அங்கே பெரிய சக்தி ஏதுமில்லை. அத்துடன் புலிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு கடந்த கால சமன்பாடுகளை மீளவும் முயலும் அளவுக்கு மோடி முட்டாள் இல்லை. நாம் இந்திரா காந்தி காலத்தில் இல்லை என்பதை உணர்ந்து கொண்டுதான் ஆகவேண்டும். பாகிஸ்தானிலிருந்து வங்கதேசம் உருவாக்க உதவியது போல இலங்கையிலிருந்து ஈழத்தை மோடி உருவாக்குவார் என எவராவது கருதினால் அவரைவிட கிறுக்கு வேறு யாரும் இருக்கமுடியாது.

**03.** ஒருவேளை இலங்கை அரசு தமிழர்களுக்கு அதிகார பகிர்வை மேற்கொள்ளுமானால், இந்திய மாநிலமொன்றின் உரிமைகளுக்கு அப்பால் எந்த ஒரு சுயாட்சி திட்டத்தையும் அதனால் முன்மொழியமுடியாது. காரணம். அதை இந்தியா ஏற்காது. தற்போது காஷ்மீருக்கு உள்ள தனித்தன்மையையே நீக்கவேண்டும் எனக்கூறுகிற மோடி அரசு, காங்கிரஸ் அரசு கூறிவந்த 13 ஆவது சட்டத்திருத்தம் என்கிற அளவைக்கூட ஏற்குமா என்பது சந்தேகமே. இலங்கையின் ஒற்றுமையைக் கட்டிக்காப்பதில் இந்திய அரசு முழு உத்தரவாதம் அளிக்கும். ஏனென்றால் அது ஏகத்துவ சித்தாந்த அரசு. சீனாவின் ஆதிக்கம், இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான தொழில்வாய்ப்பு, தேசிய இன அடையாள மறுப்பு ஆகிய அதே பழைய காரணிகளே மோடி அரசின் இலங்கைக் கொள்கையை வடிவமைக்கும்.

**04.** ஈழ ஆதரவு சக்திகளை மோடி அரசு ஒரு தம்பிடிக்குக்கூட மதிக்காது. ஆனால் எப்போதாவது அது நமது குரல்களுக்கு செவிசாய்ப்பதாகத் தோன்றினால், பின்புலத்தில் இலங்கை அரசுடனான 'பேரம்' இருக்கிறது என்று மட்டும் அதற்கு அர்த்தம், தமிழ்நாட்டு ஈழ ஆதரவுக் குரல் தமிழ்நாட்டில் பிரிவினை அரசியலுக்கு வித்திட்டுவிடக்கூடாது என்கிற கவலையும் மோடி அரசுக்கு நிச்சயமாக உருவாகும். இந்த விஷயத்தில் காங்கிரஸ் போல சற்று 'அலட்சியமாக' மோடி அரசு இருக்காது என்று எனக்குத் தோன்றுகிறது. தமிழகத்தில் தமிழ்த்தேசிய வளர்ச்சி குறித்து மோடி அரசு நிச்சயமாக கவலைப்படும், அதை முளையிலேயே கிள்ளி எறிய எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்றே தோனறுகிறது. சர்வதேச அரங்குகளிலோ இலங்கையுடனான உறவிலோ மன்மோகன் சிங் ஆடிய நாடகங்களைக்கூட மோடி ஆடமாட்டார். (காமன்வெல்த், ஜெனீவா விவகாரங்கள் போல). இலங்கையுடனான உறவில் அவர் தெளிவாக இருப்பார், சீறவேண்டுமெனில் சீறுவார், ஆனால் ஒருபோதும் இலங்கையை விட்டுக்கொடுக்கமாட்டார். ராஜபட்சே இந்த புதிய சமன்பாட்டுக்கு உடன்படாவிட்டால், நிச்சயமாக தூக்கியெறியப்படுவார். இந்தியாவுக்குத் தேவை இலங்கைதான், ராஜபட்சே அல்ல.

**05.** இலங்கை இனப்படுகொலை விவகாரத்தில் இந்தியாவின் பங்கு பற்றி இந்த உலகம் ஒருபோதும் பேசாது. எனவே இலங்கை மீதான சர்வதேசிய விசாரணை எல்லாம் இனி வெறும் கனவே. அமெரிக்காவோ மேற்குலகமோ இந்து வலதுசாரி எதேச்சாதிகார பிரதமர் என்று வர்ணிக்கப்படுகிற மோடியிடம்தான் இனி பேரம் பேசப்போகிறது. தெற்காசியாவில் இந்தியாவின் மேலாண்மையை அங்கீகரித்துவிடுவதுதான் நல்லது என்கிற நிலைப்பாட்டை மேற்குலகம் மீண்டும் மறுஉறுதிசெய்யும். அதன் நீட்சியாக, இலங்கையை இந்தியாவின் 'பொறுப்பில்' அவை விட்டுவிடும்.

**06.** ஆசியாவில் அமெரிக்காவை சமநிலைப் படுத்தும் காரணிகளாக உள்ள ரஷ்யாவுடனும் சீனாவுடனும் நெருக்கம் பேணுவது நல்லது என மோடி நினைத்தால் (அதில் நிறைய பலன்களும் இருக்கின்றன), இந்தியாவுக்கு புதிய ஆசிய நூற்றாண்டில் கூடுதல் செல்வாக்கு கிடைக்கும். அப்போது இந்தியாவின் தெற்காசிய மேலாதிக்கத்தை சீனாவும், தற்காலிகமாகவாவது அங்கீகரிக்கும். மத்திய ஆசியாவில் எப்படி சீன-ரஷ்ய சமன்பாடுகள் வேலை செய்கின்றனவோ, மேற்காசியாவில் எப்படி சீன-ஈரான் சமன்பாடுகள் வேலை செய்கின்றனவோ அதைப் போல சீன-இந்திய சமன்பாடுகள் தெற்காசியாவில் வேலை செய்ய வாய்ப்பிருக்கிறது. (கவனிக்க இது பல் துருவ உலகம் மட்டும்ல்ல, வல்லரசுகள் ஒருவருக்கொருவர் பகைவர்கள் அல்லர், போட்டியாளர்கள்). இப்படியொரு நிலையில் உலகின் எந்த சக்தியும் இந்தியாவின் தெற்காசிய நாட்டாமைக்கு எதிராக கொடி பிடிப்பது மிகவும் கடினமாகிவிடும். அப்போது ராஜபட்சே மிகை சீன சார்பை மறுபரிசீலனை செய்யநேரிடும். இலங்கை இந்தியாவுக்கு அடிபணியும் பட்சத்தில், அதற்கு பிரதியுபகாரமாக, அதனுடைய வரைபடத்தில் ஒரு கீறல் கூட விழாதபடி இந்தியா பார்த்துக்கொள்ளும்.

ஆனால் இந்தியாவின் 'பழைய பாணி' சீன எதிர்ப்பு ராஜதந்திரிகளின் கை மட்டுமே ஓங்குமானால், மேலே நான் குறிப்பிடும் நிலைமை எழாமல் போய்விட வாய்ப்புள்ளது.

ராஜபட்சேவைப் பொறுத்தவரை, அவரால் சீனாவை சரியாக சமாளிக்கமுடிந்துவிட்டால், இதைவிட பெரிய சந்தர்ப்பம் வேறொன்றுமில்லை. இந்தியாவுடனான சமன்பாடுகளை 'சரிசெய்துகொண்டால்' போதும், இலங்கையின் சர்வாதிகாரியாக அவரும் அவரது குடும்பத்தினரும் நெடுங்காலத்துக்கு தனது ஆட்சியைத் செலுத்துவர். அந்த விதத்தில் பார்த்தால் மோடி, சுஷ்மா, அஜித் ஆகிய மூவரும் ராஜபட்சேயின் எதிர் காலத்தை உறுதியாக பாதுகாப்பார்கள். இப்படிப்பட்ட நிலையைத்தான் ஈழ அரசியலும் ஈழ ஆதரவு அரசியலும் எதிர் கொள்ளப்போகின்றன.



✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# விடிய விடிய ராமர் கதை

பாகம் 155

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவத்திற்கு அண்டை அயலார் எல்லோரும் அழைக்கப்பட்டதால் கும்பலில் கோவிந்தா போட்டதுபோல இலங்கையதிபரும் சென்றுவந்திருக்கிறார். பிரதமர் மோடி, தான் சார்ந்த பாரதீய ஜனதா எதுவிதத்திலும் சம்பந்தப்படாது காங்கிரஸ் அரசினால் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு உரிய மதிப்பளித்து, அதன் முக்கிய அம்சமான 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். தனது நாட்டின் முந்தைய அரசு செய்த ஒப்பந்தத்திற்கு அந்த ஜனநாயக நாட்டின் பிறிதோர் கட்சியைச் சேர்ந்த அடுத்த பிரதமர் ஒருவர் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கொடுத்திருப்பது இலங்கைத் தலைவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய அரசியல் நாகரீகமும், பண்பாடும் பாடமுமாகவிருக்கிறது. ஆனால், இந்திய அரசோடு ஐ.தே.க அரசு செய்த ஒப்பந்தத்தைக் கிழித் தெறிந்துவிடவேண்டுமென்றுதற்போதைய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில பேரினவாதிகள எந்தவித ஜனநாயகப் பண்பாட்டையும் மதிக்காது கொக்கரிக்கிறார்கள். இது அவர்களது மிகத் தரக்குறைவான அரசியற் பண்பாட்டையே காட்டி நிற்கிறது.

பொதுவாக ஜனநாயகத்தைப் பின்பற்றும் நாடுகள் தமக்கிடையே செய்துகொள்ளும் ஒப்பந்தங்களை எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மதித்தே நடந்து கொள்ளுகின்றன. இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையே ஒப்பந்தந்தில் கைச்சாத்திட்டபோது இரு தரப்பிலும் ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யபட்ட அரசுகள் ஆட்சியிலிருந்தன. இலங்கையரசை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி ஜேஆர் தலைமை தாங்க, இந்திய நடுவண் அரசை ஆண்ட காங்கிரஸின் ஏகப் பிரதிநிதி ராஜீவ்காந்தி தலைமை தாங்கினார். இருவரும் தங்கள் தங்கள் நாடுகளைப் பிரதி நிதித்துவம் செய்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதோடு 13வது அரசியலமைப்புத்திருத்தச் சட்டமசோதாவும் இலங்கைப் பாராளுமன்றத்தில் ஜனநாயக முறைப்படி மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. சட்டம் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதியில் போராளிகளும் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு மதிப்பளித்து தங்கள் போராட்டத்தைக் கைவிட ஒப்புக்கொண்டதோடு தங்கள் கைவசமிருந்த ஆயுதங்களையும் கையளித்துவிடத் தயாரானார்கள். ஆனால் சிங்கள அரசியல் வாதிகளின் நேர்மையற்ற நடவடிக்கைகளால் எல்லாமே குழம்பிப்போனது.

ஒரு நாட்டின் தலைவரை நட்புறவுடன் அழைத்து, அவருக்குக் கொடுக்கப்பட்ட இராணுவ மரியாதை அணிவகுப்பின்போது துப்பாக்கிப் பிடியினால் பின்மண்டையில் அடித்து, உலக அரசியல் வரலாற்றிலேயே கீழ்த்தரமானவோர் உலகசாதனையை நிலைநாட்டிக்கொண்ட சிங்கள சிறீலங்காவின் பேரினவாதத் தலைவர்கள் இன்னும் தங்களது இழிகுணத்தை மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. நரேந்திர மோடியைக் கூப்பிட்டு அவரையும் இலங்கையரசு அவமதித்து அனுப்பாதென்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை. ஏனெனில் தனது நிலையில் விடாப்பிடியாக நிற்கும் இந்தியாவின் பிரதிநிதியாக அவரும் தற்போது 13வது திருத்தச்சட்டத்தையே வலியுறுத்துகிறார். யாரெல்லாம் தமிழருக்குச் சார்பானநிலைப்பாட்டை எடுக்கிறார்களோ அவர்களையெல்லாம் புலிகளின் ஆதரவாளர்களென்பதும், பயங்கரவாதத்திற்குத் துணைபோகின்றவர்களென்பதும், முடிந்தவரை அவர்களை அவமதித்து அனுப்புவதும் இலங்கையின் வழக்கமாகிவிட்டது.

தமிழ்நாட்டின் கருத்தைக் கேட்காது, நட்புறவை வளர்ப்பதற்காகக் கச்சதீவை இலங்கையிடம் இந்தியா கையளித்தது. தற்போது தான் கொடுத்த வாக்குறுதியை மீறக்கூடாது என்பதற்காக அந்தத் தீவின் உரிமையைத் திரும்பப் பெறாமல் இலங்கையிடமே விட்டு வைத்திருக்கின்றது. கச்சதீவை இரந்து கேட்டுப் பெற்றுக் கொண்ட பிற்பாடு அந்த்தத்தீவில் காலங்காலமாகத் தங்கள் வலைகளையுலர்த்தி மீன் பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படை செய்யும் அநியாயங்களைத் தான் கொடுத்த வாக்குறுதியின் பேரால் பொறுத்துக்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இந்தியா இருக்கிறது. ராஜீவ் ஜேஆர் ஒப்பந்தத்தின் போது பிரதமர் ராஜீவ் அழைக்கப்பட்டுத் தாக்கப்பட்டபோதும் கூட இந்தியா பொறுமையைக் கையாண்டு செய்த ஒப்பந்தத்தை எப்படியாவது நடைமுறைப் படுத்திவிட முயல்கிறது. ஆனால் இலங்கையோ இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மதித்து நடப்பதாயில்லை.

ஆக மொத்தத்தில் ஜனநாயக அரசியற் பண்பாடுகள், நாகரிகம் ஆகிய எதுவுமின்றி, இலங்கைத் தீவைத் தங்களது பேரினவாதப் பிடிக்குள் வைத்திருக்க வேண்டுமென்னும் பேராசையை மட்டுமே மையநோக்காக வைத்துக்கொண்டு இலங்கையின் சிங்கள இனவாதிகள் தமிழரை இலங்கையிலிருந்து தொலைத்தழித்து விடலாமெனப்பகற்கனவு காண்கிறார்கள். இலங்கைப் பேரினவாதிகளின் அற்பத்தனமான இத்தகைய புத்தியை எப்படி இந்தியா கையாளப் போகின்றது என்று தெரியவில்லை. ஆனால் 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை' என்பார்கள். இலங்கைத் தமிழர்களின் தாயக விடுதலைப் போராட்டம் வேறு பரிமாணங்களையெடுத்து தன் வழியில் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றது.

இலங்கைத் தீவில் நடந்த தமிழர் தாயகத்துக்கான தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுத முனையில் முற்றாக அடக்கியொடுக்கப்பட்ட பிற்பாடு, இனித் தமிழர்களுக்கு எழுச்சியில்லை, அவர்களை இலகுவாக ஓரங்கட்டிவிடலாமென்றே பேரினவாதிகள் நினைக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை இலங்கை இந்திய ஒப்பந்தமும் அதன் பயனாக உருவான 13வது அரசியலமைப்புத் திருத்தமும் தற்போது தேவையற்றவையாகவே தென்படுகின்றன. அதற்கும் மேலாக இன்னுமொரு படி முன்னேறி கச்சை தீவிலும் தங்களது முழுமையான ஆதிக்கத்தை நிலைநாட்டி பாக்கு நீரிணையில் தமிழகத் தமிழர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி விடவேண்டுமென்ற திட்டத்தைச் செயற்படுத்த முனைகிறார்கள்.

தற்போது தமிழ்நாடு கொதித்துக் கொந்தழித்துப் போயிருக்கிறது. அந்தக் கொதிப்பையும் கொந்தழிப்பையும் தற்போது நடந்து முடிந்த தேர்தலில் தமிழக மக்கள் தங்களது வாக்குப் பலத்தின் மூலம் காட்டியுமிருக்?றார்கள். இந்தியா எங்கும் வீசிய மோடி அலை தமிழகத்தில் வீசவில்லை. தமிழர் தேசியமும் அம்மா அலையும்தான் அங்கு முதன்மைப் படுத்தப்பட்டன. பிரதமரின் பதவிப் பிரமாண வைபவத்திற்கு இலங்கையதிபர் அழைக்கப்பட்டதைக் காரணங்காட்டி தனக்குக் கிடைத்த அழைப்பை நிராகரித்த தமிழகத்தின் தலைவி தனக்கும் தமிழ்த் தேசியத்திற்கும் கிடைத்த வெற்றிக் களிப்போடு பாரதப் பிரதமரைப் பிரத்தியேகமாகச் சென்று சந்தித்திருக்கிறார்.

இங்கே முக்கியமான விடயமாக இருப்பது தமிழகத்திற்குச் சிறீலங்கா மீது ஏற்பட்டுள்ள இலகுவில் ஆற்றிவிட முடியாத வெறுப்புணர்வு தான். சிறிலங்காவிடமுள்ள சகித்துக்கொள்ள முடியாத இனவாதத்தின் விளைபயனாய் அந்நாட்டிற்கொதிராக 22 மைல்களுக்கப்பால் வாழும் ஆறரைக் கோடித் தமிழர்களின் ஆத்திரமும் வெறுப்பும் சீழ் பிடித்துச் சிதைந்து புரையோடிப்போய்விட்ட புண்போல ஆற்றமுடியாத அளவுக்கு ஆழமாகி விட்டன. இந்த வெறுப்பு சரித்திரத்தில் பதிந்துவிட்டவோர் சம்பவம். இதனை மாற்றியமைப்பதற்குச் சமாதான வழிமுறைகளன்றி வேறு பரிகாரங்களெதுவும் இருக்க முடியாது.

## அலசுவாரம்

அலசுபவர் : **மட்டைக்கிளப்பான்**

அடித்து ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழினம் வேறு வழியின்றி அடங்கிப்போய் அமைதிப்பண்ணை முனகலாம். ஆனால் தமிழக உறவுகளுக்கு அந்தக் கட்டாயமில்லை. யாரெல்லாம் இலங்கையில் தமிழர்களுக்கெதிராக பேரினவாத வெறியைக் கக்குகிறார்களோ அவர்களெல்லாம் தமிழக உறவுகளைப் பொறுத்தவரை வெறுக்கப்படும் எதிரிகளே. இந்த நிலையை இலங்கையின் பேரினவாதச் சண்டியர்கள் எவ்வாறு தாக்குப் பிடிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. குறுகிய காலத்தில் இவர்கள் பெறும் வெற்றிகள் எதுவும் நீண்ட காலத்திற்கு நிலைக்கப் போவதில்லை. ஈழத் தமிழர்கள் தமது தாயகப் பிரதேசங்களிலிருந்து முற்றாகத் துடைத் தெறியப்பட்டாலன்றி பேரினவாதிகளின் வெற்றி தற்காலிகமானதே. அப்படித் துடைத்தெறிவதுவிடுவது பேரினவாதிகளால் முடியக்கூடிய காரியமாக இருக்கப் போவதில்லை. தற்போது பல பரிமாணங்களை எடுத்துவிட்ட ஈழத் தமிழர்களின் தாயக விடுதலைப் போராட்டம், தனித்தமிழ் ஈழத்திற்கானவோர் சர்வசன வாக்கொடுப்பை ஐநா தமிழர் மத்தியில் எடுக்க வேண்டுமென்னும் கோரிக்கை வரை வந்திருக்கிறது. தமிழக மக்களால் எடுக்கப் பட்டுவிட்ட அந்த முடிவு சரித்திரத்தில் பதியப்பட்டுவிட்டது.

இந்த அரசியல், தமிழர் தேசியவுணர்வுச் சூழ்நிலையைத் தக்கபடி பயன்படுத்திக் கொண்டு அடங்கிக் கிடக்கும் ஈழத்தமிழினம் மெது மெதுவாக விழித்தெழ வேண்டும். முற்றான முரண்பாடுகளைச் சிறீலங்காவுடன் வளர்த்தெடுக்கக் கூடிய அரசியற் காய்நகர்த்தல்களைத் தவிர்த்துக்கொண்டு நட்புறவை ஏற்படுத்த முயற்சிக்கும் அதேவேளையில், எம்மை அழித்தொழித்துவிட நினைக்கும் பேரினவெறியர்களின் மிரட்டல்களுக்கு அடிபணியாது அவர்களின் அடாவடித்தனமான பேச்சுக்களையும் நடவடிக்கைகளையும் தமிழகம், இந்தியா உட்பட உலக அரங்கமெங்கும் அறியப்படுத்த வேண்டும். குண்டுச் சண்டிக்குள் குதிரையோட்டிக் கொண்டு சண்டியர்களாய் இலங்கையின் இனவாதச் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டிருக்கும் இவர்கள் தமிழகத்தில் காலடியெடுத்து வைக்கவே முடியாதவாறு உரிய முறையில் நன்கு அறிமுகப்படுத்தி வைக்கப்படவேண்டும்.

**அடித்து ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழினம் வேறு வழியின்றி அடங்கிப்போய் அமைதிப் பண்ணை முனகலாம். ஆனால் தமிழக உறவுகளுக்கு அந்தக் கட்டாயமில்லை. யாரெல்லாம் இலங்கையில் தமிழர்களுக்கெதிராக பேரினவாத வெறியைக் கக்குகிறார்களோ அவர்களெல்லாம் தமிழக உறவுகளைப் பொறுத்தவரை வெறுக்கப்படும் எதிரிகளே.**

இவ்வளவு காலமும் 13வது அரசியற் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட மாகாணசபைகளின் நிர்வாக உரிமைகளைக் கூட வழங்காது இழுத்தடித்துக் கொண்டு பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு வாருங்கள் அங்கே பேசி இனப்பிரச்சனைக்கான தீர்வை முடிவு செய்யலாமென்று அரசாங்கம் கூறிக்கொண்டிருந்தது. காலத்தை மேலும் மேலும் கடத்தி ஏமாற்றுவதுதான் அந்த அழைப்பின் முழுநோக்கமாக இருந்தது. தற்போது இலங்கையதிபர் பாரதப்பிரதமரின் பதவியேற்புக்குச் சென்றுவந்த பிறகு 13வது திருத்தத்தை போலீஸ் அதிகாரமில்லாமல் அமுல்படுத்துகிறோமென்று அரசாங்கம் கூறுவதாகச் செய்திகள் அடிபடுகின்றன. அதே வேளை தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்துடன் மீண்டும் ஒரு காலநீடிப்பை அரசு எதிர்பார்க்கிறது. இதற்கிடையில் தமிழ்ப் பிரதேசங்களை ஓரளவுக்காவது கபளீகரம் செய்துவிடலாமென அரசிலுள்ள பேரின வெறியர்கள் திட்டமிட்டுச் செயற்படுவார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கோ தென்னாபிரிக்காவிடம் என்ன தீர்வை முன்வைப்பது என்று தெரியவில்லையாம். மக்களிடம் கேட்கிறார்கள். விடிய விடிய ராமர் கதை சொல்லிவிட்டு சீதைக்கு ராமர் என்ன முறையென்று தமிழ் மக்களிடம் கூட்டமைப்பினர் கேட்பது போல இருக்கிறது.

*- தொடருவம்*

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper


அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from concept to design


TASTE
it Today!
Quento
Fly high with a fruit Fizzzz.
BRAND Niru
Quento
Fly high with a fruit Fizzzz.
1.5 Ltre

# இராணுவ ஆட்சேர்ப்பு பொறியினுள் அகப்பட வேண்டாம்

- அனந்தி சசிதரன்

*“எமது மக்கள் மேல் திணிக்கப்படும் இராணுவ மேலாதிக்கத்தில் எமது இளைஞர் யுவதிகளையும் பங்கு கொள்ள வைக்கும் ஒரு பயங்கர சதியை சிறிலங்கா அரசாங்கம் நிறைவேற்ற முயற்சி செய்வதையிட்டு நாம் விழிப்பாக இருக்க வேண்டும். எம்மை நாமே பாதுகாக்க வேண்டும்” என சிறிலங்கா இராணுவத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்பாக வட மாகாணசபை உறுப்பினர் திருமதி. அனந்தி சசிதரன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:*

அண்மைக் காலங்களில் இராணுவத்தினர் படைக்கு ஆட்களைத் திரட்டும் பணியில் வடக்கில் பல்வேறு வழி முறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். படையினர் வீடு வீடாக சென்று பிரச்சாரங்களை மேற்கொண்டு விண்ணப் பப்படிவங்களை வழங்க இளைஞர்களையும் யுவதிகளையும் ஒருவிதமான அழுத்தத்தைக் கொடுப்பதன் மூலம் படையில் சேர்ப்பதற்கான முயற்சியில் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. இதன் காரணமாக அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

அரசாங்க அதிபர் பிரதேச செயலாளர்களுக்கு கட்டளைகளை வழங்கி அவர்கள் கிராம சேவையாளர்கள் மூலம் படைக்கு ஆட்களை திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது, மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இராணுவத்தினர் கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே மேற்படி பணியில் ஈடுபடுமாறு தான் பிரதேச செயலாளர்களுக்கு அறிவித்தல் வழங்கியதாக தெரிவித்திருந்தார். இப்படியான ஒரு நிலையில் இந்தக் கேள்விகள் எழுகின்றன. ஒன்று, பாதுகாப்பு அமைச்சின் முறைப்படியான வர்த்தமானி அறிவித்தல் இன்றி ஒரு பிராந்தியத் தளபதி தன்னிச்சையாக படைக்கு ஆட்சேர்க்க முடியுமா? அடுத்தது, ஒரு மாவட்ட அரசாங்க அதிபர் ஒரு இராணுவத் தளபதியின் கட்டளையை ஏற்றுச் செயற்பட முடியுமா?

இந்த இரு விடயங்களும் இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அப்பாலானவை என்பது மட்டுமன்றி மரபு வழியான நடைமுறைகளுக்கும் அடங்காதவை. எனினும் இவை ஏன் எப்படி நடைபெறுகின்றன? இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் பொது நிர்வாக அலகுகள் இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டனவா? இப்படி ஒரு அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா? அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் ஆணை பிறப்பிக்கப் பட்டதா? இப்படி எதுவும் இடம்பெறாத நிலையிலும் இங்கு இவை நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. இலங்கையில் ஒரேயொரு இராணுவம் தான் உண்டு. அதற்கென ஒரேயொரு தலைமைத் தளபதி தான் உண்டு. அவர் நேரடியாகவே பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படுபவர்.

இராணுவ ஆட்சேர்ப்பு என்பது பாதுகாப்பு அமைச்சின் கட்டளைகளுக்கு அமைய இராணுவம் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்களைக் கோரும். அந்த விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகத் தெரிவு நடாத்தப்பட்டு அதில் தெரிவு செய்யப்படுபவர்கள் படைக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இது வழமையான நடைமுறை! சட்டபூர்வமானதும் கூட! இப்போ ஒரு பிராந்திய தளபதி கட்டளையிட அரச அதிபர் பிரதேச செயலாளர்களிற்கூடாக படைக்கு ஆட்சேர்க்கும் பணியில் இறங்கியுள்ளார். இவ்வகையில் அரச அதிபர் என்பவர் ஜனாதிபதியின் மாவட்ட பிரதிநிதி. அவர்களிற்கு கட்டளையிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கும் பொது நிர்வாக அமைச்சுக்கும் மட்டுமே உண்டு. சில அவசர சந்தர்ப்பங்களில் மாவட்ட மட்டத்தில் பொலிசாரையோ, இராணுவத்தினரையோ அமைக்கும் அதிகாரம் அவரிற்கு உண்டு. ஆனால் வடக்கில் அவர் இராணுவத்தினரின் கட்டளைகளை நிறைவேற்றுமளவிற்கு நிலை தாழ்த்தப்பட்டு விட்டார். அதாவது இராணுவத்தினரினதும், ஜனாதிபதியினதும் பொது நிர்வாக அமைச்சினதும் அதிகாரங்களை தானே கையில் எடுத்துக் கொண்டு உள்ளார். இந்த ஆட்சேர்ப்பு விவகாரத்தில் பிரதேச செயலாளர்களோ, கிராம சேவையாளர்களோ தங்கள் மேலதிக பணியான அரச அதிபரின் கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. ஆனால் அரச கருமம் அப்படியல்ல. ஒரு பிராந்திய இராணுவ தளபதியின் கட்டளையை மறுக்க அவரிற்கு முழு அதிகாரம் உண்டு. அது மட்டுமல்ல தனது கடமைக்கு குறுக்கிடுவதாக பொது நிர்வாக அமைச்சுக்கோ, ஜனாதிபதிக்கோ முறைப்பாடு செய்யும் உரிமையும் அவரிற்குண்டு.

ஆனால் யாழ்மாவட்ட அரச அதிபரோ தன் பதவியின் அதிகாரம், அந்தஸ்து, கடமை எல்லாவற்றையும் மறந்து இராணுவத்தினருக்கு சேவை செய்யும் பாதையில் தானும் பிரதேச செயலாளர்களையும் கிராம சேவையாளர்களையும் வழிநடத்துகிறார். இது வடக்கில் ஒரு இராணுவ மேலாதிக்கம் கொண்ட ஒரு இலங்கை அரசியல் சட்டத்திற்கு அப்பால் இடம்பெற்று வருகின்றது என்பதைத் தெட்டத் தெளிவாக காட்டுகிறது. அந்த இராணுவ மேலாதிக்கத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாகவே படைக்கு தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் இணைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட படைவீரர்கள் இராணுவத்தை விட்டு தப்பி ஓடி விட்டனர். கவர்ச்சிகரமான சம்பளம், பல சலுகைகள், எல்லாம் இருந்த போதும் அவர்கள் தப்பி ஓடுகின்றனர். காரணம் கட்டுப்பாடு என்ற பெயரில் அவர்கள் மேல் நடாத்தப்படும் அதிகார மேலாதிக்கம் விடுமுறைகள் வழங்காமை. உறவுகளிடம் இருந்தும் சமூகத்திடமிருந்தும் பிரிந்து நீண்ட காலம் தனிமைப் படுத்தல் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை அதனை முறையற்ற விதத்தில் பூர்த்தி செய்ய முற்பட்டால் கிடைக்கும் மோசமான தண்டனை, அடிமைத் தனம் என்பன அவர்களை விரக்தி வக்கிரக மன நிலைக்குள் தள்ளுகின்றன. எனவே படையை விட்டு தப்பியோடும் நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. அப்படி தப்பி ஓடுபவர்கள் வெளியே வந்து இயல்பு வாழ்வு வாழ முடியாது. தலைமறைவான வாழ்க்கை வாழ்கின்றனர். வேலையற்ற நிலைமை வாட்டுகின்றன. இறுதியில் பாதாள உலகக் குழுக்களில் இணைகின்றனர். பின்பு கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் எனப் பாரிய குற்றங்களை மேற்கொண்டு நிரந்தரக் குற்றவாளிகளாக தமது எதிர்காலத்தையே இழந்து விடுகின்றனர். இந்த நிலைமை உங்களுக்கும் ஏற்பட வேண்டுமா?

ஏற்கனவே கிளிநொச்சியில் படையில் இணைத்த யுவதிகள் மனநிலை பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள். அனுராதபுர மகிந்த முகாமில் பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டமை வீடியோ நாடாக்கள் மூலம் வெளிவந்தன. இராணுவத்தினர் பாலியல் கொடுமைகளில் எப்படிப்பட்டவர்கள் எனபதை நீங்கள் நன்கு அறிந்துள்ளீர்கள். இப்படியான நிலைக்குள் அகப்பட்டு தப்ப முடியாமல் தவிக்கும்நிலை உங்களுக்கும் வேண்டுமா?

உங்களை வாட்டும் வறுமை, வேலையற்ற பிரச்சனை, படையினரின் பிரச்சாரம் என்பன உங்களை படையில் இணையும் படி தூண்டலாம். ஆனால் அதற்காக நாம் எங்கள் எதிர்காலத்தை இழந்து விடலாமா? நாம் விமோசனம் என எண்ணுவது அடிப்படையில் ஒரு விலங்கு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழர்களின் வெற்றி




மே 22ம் திகதி நடைபெற்ற லண்டன் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் போட்டியிட்ட நாற்பது தமிழர்களில் பத்துப்பேர் வெற்றிபெற்றுள்ளனர்.

**கிங்ஸரன், குறொய்டன்**

கிங்ஸ்ரன் உள்ளூராட்சிச்சபைக்கு லிபரல் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. மயில்வாகனம் யோகநாதன், திரு. வைத்தீஸ்வரன் தயாளன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதே உள்ளூராட்சிச் சபைக்கு கொன்சவேர்ட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட இளைஞரான திரு. கஜன் வேலுப்பிள்ளை அவர்கள் தெரிவாகியுள்ளார். இவர்களில் திரு. யோகநாதன் முன்னர் கிங்ஸ்ரன் மேயராக இருந்தவர் மற்றையவர்களான திரு வேலுப்பிள்ளை, திரு. தயாளன் ஆகியோர் இம்முறை முதற்தடவையாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

குறொய்டன் உள்ளூராட்சிச்சபைக்கு தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு. மைக்கல் செல்வநாயகம் மீளத் தெரிவாகியுள்ளார்.

**ஹரோ, பிறென்ற்**

கடந்த தேர்தலில் நான்கு தமிழர்கள் தெரிவுசெய்யப்பட்ட ஹரோ உள்ளூராட்சிச் சபைக்கு இம்முறை இரண்டு தமிழர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. சுரேஸ் கிருஸ்ணா மற்றும் அவரது துணைவியாரான திருமதி சசிகலா கிருஸ்ணா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், தொழிற்கட்சிக்கு போட்டியாக தயா இடைக்காடர் தலைமையில் உருவாக்கப்படட் சுயாதீன தொழில் குழு சார்பில் போட்டியிட்ட முன்னாள் உறுப்பினர்கள் தயா இடைக்காடர், மனோ தர்மராஜா உட்பட அத்தனைபேரும் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

பிறென்ற் உள்ளூராட்சி சபையில் தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. கனகசபாபதி நகிதரன் தெரிவாகியுள்ளார்.

**சதக்**

தென்கிழக்கு லண்டன் சதக் உள்ளூராட்சிசபைக்கான தேர்தலில் லிபரல் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட செல்வி. எலைஷா மான் அவர்கள் மீளத் தெரிவாகியுள்ளார்.

**ரெட்பிரிட்ஜ், நியுஹம்**

கிழக்கு லண்டன் ரெட்பிரிட்ஜ் உள்ளூராட்சிச் சபைக்கு திரு. தவத்துரை ஜெயரஞ்சனும் , நியுஹம் உள்ளூராட்சிச்சபைக்கு திரு. போல் சத்தியநேசனும் தெரிவாகியுள்ளனர். இவ்விருவரும் தொழிற்கட்சியின் சார்பில் போட்டியிட்டனர்.

**ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கான தேர்தல்**

இம்முறை ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் யோகலிங்கம் இனவாதக் கட்சியான நஷனல் லிபரல் கட்சியின் பட்டியலில் போட்டியிட்டபோதிலும் இக்கட்சி 6,736 வாக்குகளை மாத்திரம் பெற்று படுதோல்வியடைந்துள்ளது. கட்ந்த தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட இனப்படுகொலைக்கு எதிரான தமிழரமைப்பின் பணிப்பாளர்களில் ஒருவரான செல்வி. ஜனனி ஜனநாயகம் 50,000 வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# Hdfc's India Homes Fair

*7th Annual property event in London with over 36 leading developers showcasing prime properties from all across India*

For NRIs and PIOs wanting to own a home in India there is an opportunity to inquire about properties across India as India's leading mortgage lender HDFC Ltd hosts the India Homes Fair - a property event exclusively for those interested in knowing about the latest projects by over 36 renowned and well-reputed developers in India.

In its 7th consecutive successful year in London, over 50,000 properties will be on display at HDFC's India Homes Fair from Bengaluru, Chennai, Gujarat, Goa, Hyderabad, Kerala, Mumbai, National Capital Region, Pune, Punjab, Kolkata to name a few. With varying options like flats, villas and plots, customers can avail of exclusive offers and value-added benefits during the property fair.

Taking place on the 14th and 15th June 2014, the free two-day property event will be held at Hilton London Metropole Hotel, 225 Edgware Road, London W2 1JU. Opened for visitors between 10am to 7pm, visitors will also be able to attend free seminars on Residential Trends in India, Emerging Destinations, Budget Housing and Taxation in India, to be presented by the HDFC Realty's CEO, Mr. Vikram Goel.

To be part of London's biggest Indian homes fair and avail of its special offers and expert, simply pre register for your free entry at the HDFC's India Fair Homes on www.hdfc.com/ihflondon2014.

# 83இல் எரிக்கப்பட்ட காந்தீயம்

ஜூன் முதலாம் திகதி என்றதும் நினைவுக்கு வருவது காந்தீயம் புனர்வாழ்வு இயக்கம் தான். 1978ஆம் ஆண்டு முதல் 83 ஜூன் முதலாம் திகதி வரை தமிழர்களை மீளக்குடியமர்த்தி புனர்வாழ்வு அளிப்பதை முக்கிய நோக்கமாகக்கொண்டு இயங்கிய ஒரு நலன்புரி நிலையம், அதனோடு கிளிநொச்சி மாவட்ட செயலாளராகவும், பின்னர் மத்திய குழுவினுடைய செயலாளராகவும், இயங்கிய அனுபவம் எனக்கும் உள்ளது. என்னுடைய வாழ்க்கைத் துணைவியாக வந்து வாய்த்தவர் கூட காந்தீய காலத்தில் பொறுப்பாசிரியையாக இருந்த கமலாவதி அவர்கள் தான். அந்த வகையில் என்னோடு பின்னிப் பிணைந்த அந்த இயக்கத்தைப் பற்றிய நினைவுகள் இன்னும் நீறுபூத்த நெருப்பாக நெஞ்சில் இருக்கத் தான் செய்கின்றது. காந்தீயம் எரித்து அழிக்கப்பட்ட நாள் ஜூன் 1, அரசசார்பற்ற நிறுவனங்கள் தமிழ்ப் பகுதிகளில், அதிகம் இயங்காத காலம் அது. சர்வோதயம் என்ற நிறுவனம் இயங்கிய போதிலும், அது ஆரியரத்னா என்பவருடைய தலைமையில் சிங்கள பிரதேசங்களில் தான் தன் சுய திட்டங்களில் கூடிய கவனம் செலுத்தி வந்தது. இந்நிலையில் 1977 இனக்கலவரத்தை அடுத்து வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடம்பெயர்ந்தவர்களின் நலனைக் கவனிக்க திரு.கே.சி.நித்தியானந்தா அவர்களுடைய தலைமையில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

1978இல் அகதிகள் முகாம்கள் மூடப்பட வேண்டும் என்பதிலும் இடம்பெயர்ந்தவர்கள் மீள பழைய இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதிலும், அப்போதைய ஜே.ஆர். அரசு முனைப்பு காட்டியது. குறிப்பாக மலையக மக்கள் தங்கள் பிரதேசங்களுக்கு மீள வேண்டும் என்பதில் அப்போதைய அமைச்சர் சௌ.தொண்டைமான் அதிக அக்கறை காட்டினார். இதனால், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் தன்னுடைய பணிகளை இடைநிறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. அன்றைய நிலையில் அந்த இயக்கம் தன்னுடைய பணிகளை புதிதாக உதயமான காந்தீயத்தின் பொறுப்பில் கையளித்தது. அந்த வேளையில் மீளத் திரும்ப விரும்பாதவர்களின் தேவைகளைக் கவனிக்க காந்தீயம் உருவானது. டொலர் பண்ணை, கென்ற் பண்ணை என்பன காந்தீய இயக்கத்தால் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் மூலம் பொறுப் பேற்கப்பட்ட முக்கியமான முதல் இரு பண்ணைகளுமாகும்.

இலங்கையில் நடைமுறையில் இருந்த அற நிறுவன சட்ட நெறிமுறைகளுக்கமைய பதிவு செய்யப்பட்ட இயக்கமாக காந்தீயம் இயங்க ஆரம்பித்தது. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என எட்டுத் தமிழ் மாவட்டங்களிலும், தனித்தனி மாவட்டக் கிளைகள், மாவட்டக் கிளைகளை உருவாக்குகின்ற கிராமியக் கிளைகள், மாவட்ட நிர்வாகிகளை உள்ளடக்கிய வவுனியாவைத் தலைமையமாகக் கொண்ட மத்திய குழு என அதனுடைய கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டிருந்தது.

நகரதிட்டமிடல், நிர்மாணத்துறை நிபுணர் எஸ்.ஏ. டேவிட் ஐயா, டாக்டர் சோ. ராஜசுந்தரம், சமூக சேவையாளர் நல்லதம்பி என்போர் முறையே தலைவர், செயலாளர், பொருளாளராக தொடர்ந்து பணியாற்றி வந்தார்கள். கிராமியக்கிளைகள் கைத்தொழில் அமைப்பு, சிறுவர் பாடசாலை, விவசாயப் பண்ணைகள் என்பவற்றைக் கொண்டு இயங்கின. எட்டு மாவட்டங்களிலும் 634 கிராமிய நலத் திட்டக் குழுக்கள் இயங்கின. குறிப்பாக சிங்கள பிரதேசங்களின் எல்லைகளில் காடுகளை அழித்து குடியேற்றத் திட்டங்களை உருவாக்கும் பணியில் காந்தீயம் முனைப்புக் காட்டியது. மலையகத்தில் இருந்து மக்களை இங்கே வருவிப்பதற்கான பிரசாரங்களை நேரடியாக மலையகத்திற்குச் சென்று மேற்கொண்டது. அவர்களை பயனாளிகளாக்கி அவர்களுக்கான உதவிகளை செயற்படுத்த நொவிக், கேயார், ஒக்ஸ்பாம், பிரைட்போத வேர்ல்ட், கிறிஸ்தியன், எய்து ஆகிய நலன்புரி நிறுவனங்களுக்கு உதவுகின்ற முதலீட்டு இயங்கங்களை உள்வாங்கிக் கொண்டு அவர்களுடைய உதவியோடு மிகச் சிறப்பாக காந்தீயம் இயங்க ஆரம்பித்தது. அரசாங்கத்தின் கழுகுக் கண்கள் காந்தீயத்தின் மீது வேவு பார்க்க ஆரம்பித்தது. அதனை அழிப்பதற்கு தருணம் பார்த்திருந்தது.

1983 ஏப்ரல் 7ஆம் நாள் காந்தீய தலைமைப் பணிமனையில் வைத்து அதன் அமைப்புச் செயலாளர் டாக்டர் ராஜசுந்தரம் கைதாக்கப்பட்டார், அதேநாள் எஸ்.ஏ.டேவிட் ஐயா கொழும்பில் கைதானார். அன்றைய ஆயுத இயக்கங்களாக தொழிற்பட ஆரம்பித்திருந்த விடுதலை இயக்கங்களான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும், புளொட் என்கின்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தையும் தலைமை தாங்கி நடாத்திக் கொண்டிருந்த தலைவர்கள் பிரபாகரன், உமாமகேஸ்வரன் ஆகியோர் இருவரையும் அழைத்து வவுனியா நகருக்கு அருகாமையில் மன்னார் வீதியில் இயங்கிய மருத்துவர் திருமதி சாந்தி ராஜசுந்தரத்துக்குச் சொந்தமான சாந்தி கிளினிக்கில் அவர்களை ஒற்றுமைப்படுத்தும் கூட்டத்தை நடாத்தினார்கள் என்ற குற்றச்சாட்டு இந்த இருவர் மீதும் சுமத்தப்பட்டு இவர்கள் கைதாக்கப்பட்டனர்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

வணக்கத்துக்குரிய பிதா ஜெயதிலகராஜா உட்பட இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் நலன் விரும்பிகளாக தொழிற்பட்ட இன்னும் சிலரும் இவர்களோடு கைதாகியிருந்தார்கள். கிளிநொச்சி மாவட்ட காந்தீய அமைப்பில் பணியாற்றி வந்த நான் டாக்டர் ராஜசுந்தரம் கைதானதைத் தொடர்ந்து வவுனியா மத்திய கிளையில் பணியாற்ற அழைக்கப்பட்டேன். ஏப்ரல் 15ஆம் நாள் மத்திய குழுவின் பிரதிநிதியாக திருகோணமலைக் கிளையின் கூட்டத்தை நடாத்திக் கொண்டிருந்தபோது சோசல் சென்ரர் என்கின்ற அந்த மண்டபத்தை சுற்றி வளைத்த பொலிஸாரால் கூட்டத்திலிருந்த 18 பேரும் கைது செய்யப்பட்டோம். மூன்று நாட்கள் அநுராதபுர சிறையில் அடைக்கப்பட்டு நான்கு பெண்கள் உட்பட ஏனைய பதினாலு இளைஞர்களுமாக அனைவரும் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய சட்டத்தின் பின் நீதிமன்றம் மூலம் விடுவிக்கப்பட்டோம். வவுனியாவில் பொலிஸ் அத்தியட்சகராக இருந்த ஹேரத் என்பவரும் பொலிஸ் சாஜனாக பணியாற்றிய ஏக்கநாயக்க என்பவரும் காந்தீயத்தை அழிப்பதற்கான குறிக்கோளைக் கொண்டவர்களாக இயங்கினார்கள்.

1983ஆம் ஆண்டு ஜூன் முதலாம் நாள் காலை 10 மணிக்கு காந்தீய பணிமனைக் கட்டடத்தின் கீழே இருந்த சந்தையில் கொள்முதலில் ஈடுபட்டிருந்த கடற்படை சிப்பாய்கள் இருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். காந்தீயத்தை அழிக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த வவுனியா பொலிஸார் காந்தீய தலைமைச் செயலகக் கிளையில் பணியாற்றிய என்னையும், இன்னொரு சாரதியையும் கைது செய்தார்கள். கடுமையான தேடுதல்களையும் நடாத்தினார்கள். பெண்கள் உட்பட ஏனைய பணியாளர்களையும் வெளி யேறிவிட்டதால் தப்பித்துக் கொண்டார். அதேநாள் இரவு தலைமையகம் கோவில் புதுக்குளத்தில் இயங்கி வந்த சிறுவர் இல்லம் உட்பட எல்லாமே எரியூட்டப்பட்டன.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# கோர்த்து விடும் செய்திகள்

### யாருமே இல்லாத விக்கி ஐயாவின் கடையில்!!!!

வட மாகாண முதல்வர் விக்கி ஐயாவின் பணிமனைக்கு செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்கள் வரக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளதாம். ஆளுனர் பணிமனையின் சுத்திகரிப்புத் தொழிலாளிக்குக் கூட எதை எப்படிச் சுத்தம் செய்வது என்ற அதிகாரம் இருக்கிறது. மாகாண சபையின் செயற்பாடுகளை எல்லாம் சிங்கள ஆளுநர் மாகாண சபை உறுப்பினர்களுக்குத் தெரியாமல் செய்கிறார். கல்வி அமைச்சருக்குத் தெரியாமல் ஆசிரியர்களை அழைத்து மாநாடு நடத்துகிறார். இப்படி இருக்கையில் மாகாணசபையின் பணிமனையில் என்ன செய்தி இருக்கிறதோ தெரியவில்லை. யாருமே இல்லாத கடையில யாருக்கு?...?..?

### முத்து மணி மாலையும் சுஸ்மா ஆன்ரியும்

மோடி மிரட்டினார். பயந்தார் ராஜபக்ச என்று ஒன்றன் பின்னர் ஒன்றாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மோடியின் அமைச்சரவையில் சுஸ்மா சுவராஜ்ஜும் இலங்கையில் வெறியாட்டம் ஆடிய அமைதிப் படையில் பணி புரிந்தவரும் இணைக்கப்பட்டனர். தன்னைப் பாகிஸ்தானிய உளவாளி என்று சொல்லிக் கொன்டு சீக்கியர்களின் பொற்கோவிலுக்குள் புகுந்து அங்கு போராளிகளுடன் இருந்து கொண்டு வெளியில் இருந்து தாக்குதல் நடாத்திய இந்தியப் படையினருக்கு தகவல் வழங்கிய கில்லாடி அஜித் குமார் டெவால் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். எல்லாம் ஈழத் தமிழர்களுக்கு பேரிடியாக அமைந்தன. சுஸ்மா ஆன்ரி வெளியுறவுத் துறை அமைச்சராகப் பதவி ஏற்றதில் இருந்து எனக்கு சின்னக் கவுண்டர் படத்தில் விஜயகாந்த் சுகன்யா நடித்த முத்து மணி மாலை என்னைத் தொட்டுத் தொட்டு என்ற பாடல்தான் அடிக்கடி நினைவில் வருகிறது. பி.கு பம்பரம் நினைவிற்கு வரவில்லை.

### பொய்யிலே பிறந்து

மோடியின் பொய்ப்பரப்புரைக் குழு பாகிஸ்தான் தலைமை அமைச்சரை மோடி மிரட்டியதாக ஒரு புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டது இப்போது அம்பலமாகியுள்ளது. கஷ்மீருக்கு 370 கொடுக்க மறுக்கும் கும்பல் ஈழத் தமிழர்களுக்கு 13 தருமாம். பாகிஸ்தான் தலைமை அமைச்சர் நவாஸ் மோடியின் தாய்க்கு ஒரு சேலையைப் பரிசாகக் கொடுத்துள்ளார். இந்தச் செய்தியை கேட்டவுடன் கொழும்பில் ஒருவர் தான் ஒரு முத்துமாலையைக் கொண்டு போயிருந்திருக்க வேண்டும் என்று தலையில் அடித்துக் கொன்டாராம்.

### நுளம்பை ஒழிப்பது போல் சாதியை ஒழிக்க வேண்டும்

ஐக்கிய நாடுகள் சபையின் துணை அமைப்புக்கள் மலேரியா போன்ற தொற்று நோய்களை ஒழிக்கச் செயற்படுவது போல இந்தியாவில் சாதியை ஒழித்துக் கட்ட தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது தமது பெண்ணை கற்பழித்து விட்டாள் என காவற்துறையிடம் முறையிடச் செல்லும் பெற்றோர்கள் தொடந்தும் துப்பாக்கி முனையில் விரட்டப்படும் உலக மகா கேவலம் தொடர்ந்து நடக்கும். நான் மாந்தோப்பில் மலம் கழிக்கச் சென்றேன். அவர் மாமரத்தில் தொங்க விட்டான்!!!!!!!!

- *ஊருளவாளி*




பக்க வடிவமைப்பாளர்கள் தேவை
லண்டனிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்றில் பக்க வடிவமைப்பாளராக (Layout Designer) பணிபுரிய அனுபவமுள்ளோர் தேவை
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
Tel : 020 7043 4310



தமிழ் மற்றும் ஆங்கிலம் பேசத் தெரிந்த அலுவலகத்தை நிர்வாகிக்கக் கூடிய உத்தியோகத்தர் தேவை
Call Us on 0207 043 4310
Interested candidates Email your CV to info@orupaper.com

# எங்கடை பள்ளிக்கூடத்துக்கு வந்த முதல் கொம்பியூட்டர்



கானா பிரபா
*(மடத்துவாசல் பிள்ளையாரடியில்)*

ஒரு சுபயோக சுப தினத்தில் எங்கள் பாடசாலைக்கு ஒரு கொம்பியூட்டர் வந்த செய்தியை, காலை வேளைக் கூட்டுப் பிரார்த்தனை முடிந்த கையோடு அறிவிக்கிறார் பாடசாலை அதிபர்.

எங்களுக்கெல்லாம் வலு சந்தோசம் இருக்காதா பின்னை. விக்ரம் படத்திலை தான் கம்பியூட்டர் எண்டால் என்னவென்ற ஒரு அடிப்படை அறிவு வந்தது. சுஜாதா அந்த நேரம் குமுதத்தில் தொடராக எழுதேக்கை எல்லாம் சதுரம் சதுரமான எழுத்துகளோட வரும்போதே அதைப் பார்த்து கொப்பியில் அச்சடித்தது போல எழுதிப் பார்க்கிறது வழக்கம்.

'லை'யன்னா, 'ள'னா எல்லாம் சதுரம் சதுரமா சின்னச் சின்ன முக்கோணமா எழுதி இப்பிடித் தான்ரா கொம்பியூட்டர் மனுசர் சொல்லச் சொல்ல எழுதுமாம், மனுசர் என்ன கேட்டாலும் டக்கு டக்கு எண்டு சொல்லும் 'கொம்பியூட்டர் மூளை' என்று கூட்டாளிமாருக்குப் பீலா விட்டிருந்த நேரம், சொன்ன சாமானே எங்கட படலைக்குள் வந்தால் எப்படி இருக்கும் எங்களுக்கு. கொம்பியூட்டருக்கு என்று ஒரு தனி அறை ஒழுங்கு செய்து கொடுக்கப் பட்டிருந்தது.

அதுவரை இன்னொரு வகுப்பறையாக இருந்த அந்த அறையில் தனி ஒரு கொம்பியூட்டர் மட்டும் தான் இனிமேல் இருக்கும். 'சரி அடுத்ததென்ன கொம்பியூட்டர் பழக எல்லாருக்கும் வசதி செய்து கொடுப்பினம், முதல் வேலையா அந்தச் சதுரம் சதுரமா எப்பிடித் தமிழ் எழுதுறது எண்டு கண்டு பிடிக்க வேணும்' என்று மனசுக்குள் ஓராயிரம் கற்பனைக் குதிரைகளை அவிழ்த்து விட்டோம். ஆனால் அடுத்த நாள் அதிபரிடமிருந்து இன்னொரு அறிக்கை மரண அடியாக வந்து விழுந்தது.

'பிள்ளையள் நீங்கள் விருப்பப்பட்டா கொம்பியூட்டர் படிக்கலாம், ஆனால் கணிதம், ஆங்கிலம் ரெண்டுக்கும் எண்பது மார்க்ஸ்சிற்கு மேலை எடுத்திருக்கோணும்' ஓராயிரம் கற்பனைக் குதிரையும் வாயால் ஊதிப் பெருப்பித்த பலூன் பொசுக் கொண்டு காத்து இறங்கின மாதிரி இருந்தது. எனக்கோ, சக கூட்டாளி மாருக்கோ கணிதம் ஆங்கிலம் ரெண்டும் ஜென்ம விரோதிகள், சைவசமயம், தமிழ் ரெண்டிலும் தொண்ணூறுக்கு மார்க்ஸ் இற்கு மேலை எடுத்தவை என்று ஒரு அறிக்கை வந்தா எவ்வளவு நல்லா இருக்கும் என்று மனதுக்குள் புழுங்கினோம். ஆனாலும் ஏற்கனவே கணித பாட நேரத்தில் கொப்பிக்குள் களவாக ராணி காமிக்ஸ் படிக்கிற எங்களுக்கு இன்னொரு சவாலையும் ஏற்றுக் கொள்கிற பக்குவம் இல்லாததால் பரவாயில்லை என்று எங்களையே மனச் சமாதானம் செய்து கொண்டோம். கொம்பியூட்டர் சிலவேளை கணக்குப் போட்டு நிறுவச் சொல்லிக் கேட்குமோ என்ற மனப்பிராந்தி தான் காரணம்.

டீ வகுப்புக் காரங்கள் தான் நிறையப் பேர் படிப்பாங்கள் எல்லாரும் கணக்கு, இங்கிலீஷில் சுழியன்கள், பரவாயில்லை கொம்பியூட்டர் படிக்கேலாட்டியும் அதை ஒருக்கால் பார்த்தாலே போதும் என்ற நிலைக்குக் கீழிறங்கி வந்தது தீர்வுத் திட்டம். ஆனால் அதுவும் அவ்வளவு சாத்தியமில்லைப் போல.

**'பிள்ளையள் நீங்கள் விருப்பப்பட்டா கொம்பியூட்டர் படிக்கலாம் ஆனால் கணிதம், ஆங்கிலம் ரெண்டுக்கும் எண்பது மார்க்ஸ்சிற்கு மேலை எடுத்திருக்கோணும்' என்ற அதிபரின் அறிவிப்பு பேரிடியாக வந்திறங்கியது.**

கொம்பியூட்டர் அறை எப்போதும் இறுக்கமாகப் பூட்டப் பட்டிருந்தது. அறை வாசலில் ஒரு பெரிய கால் துடைப்பு மெத்தை போடப் பட்டு அதுக்குப் பின்னால் இரண்டாம் கட்டக் கால் துடைக்கும் துணியும் போடப்பட்டு இருந்தது. கொம்பியூட்டர் அறைக்குள்ளை போறவை கண்டிப்பாக சப்பாத்து, செருப்பை அறைக்கு அரை அடி தூரத்தில் கழற்றி வைக்க வேணும், தூசு, அழுக்கு ஒண்டும் கொம்பியூட்டருக்குள்ளை போகக் கூடாது என்ற கட்டளையாம்.

அதை விட, கொம்பியூட்டர் படிக்கிறவையைத் தவிர யாரும் உள் நுழைய முடியாது என்ற ஒரு தடுப்புக்காவலும் போடப்பட்டிருந்தது. மோகனதாஸ் மாஸ்டர் தான் பொறுப்பாகக் கவனிப்பார் என்று அவருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டது. 'வாரத்தில் ரெண்டு நாள், ஒவ்வொரு மணிநேரம் தான் கொம்பியூட்டர் கிளாஸ் நடக்குமாம் இதுவரை கொம்பியூட்டரை எப்பிடி திறக்கிறது, மூடுறது எண்டு காட்டித் தந்திருக்கினம்' கிளாசுக்குப் போற டீ வகுப்புக்காறப் பெடியன் சொன்னான்.

ஒரு நாள் கொம்பியூட்டர் வகுப்பு நடக்கிற நேரம் அந்தப் பக்கமாய்ப் போய் எட்டிப் பார்ப்போம் என்று கூட்டாளி ஒருத்தனோட எங்கட வகுப்பறையில் இருந்து வெளிக்கிட்டாச்சு. வழி தெருவில மகேந்திரன் மாஸ்டரைக் காணக் கூடாது, கண்டால் 'எங்கையடா வகுப்பு நேரத்திலை திரியிறீங்கள்' என்று சொல்லிக் கண் மண் பாராமல் கராத்தே பழகி விடுவார். ஒரு வழியாக கொம்பியூட்டர் அறைப்பக்கம் வந்தாச்சு. ஆனால் உள்ளே வகுப்பு நடந்தாலும் அந்த அறை பூஸா தடுப்பு முகாம் போல பலத்த காவலோடு பூட்டப்பட்டிருந்தது. வெளியில ஒரு பொலிஸ்காறனைப் போடாதது தான் குறை கண்டியளோ.

கதவு நீக்கலுக்குள்ளால (ஓட்டை) எட்டிப் பார்த்தால் சின்ன வெள்ளைப் பெட்டியைச் சுத்திப் பெடியள் நிக்கிறாங்கள். அதைத் தவிர எதுவும் தெரியவில்லை. இதுக்கு மேலையும் இந்த இடத்தில் மினக்கெட்டால் மகேந்திரன் மாஸ்டர், கராத்தே என்று பயம் தொற்றிக் கொள்ள அந்த இடத்தில் இருந்து விலகிப் போயாச்சு.

சில காலத்திலேயே கொஞ்சம் கொஞ்சமாக ஊர் முழுக்க 'கொம்பியூட்டர் புதிய கற்கை நெறிகள் ஆரம்பம்' எண்டு புது நோட்டீஸ்கள், கொம்பியூட்டர் இப்ப வெளி உலகையும் சந்திக்க வந்துட்டுது தனியார் கல்வி நிறுவனங்கள் வழியாக. ஆனாலும் ஒன்றிரண்டு தான் அப்போது.

முன்னை நாளிலை ஏ.எல் (பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வு) எடுத்துப் போட்டு ரைப்பிங் கிளாஸ் போறம் என்று லெவலாகச் சொன்ன பெடி பெட்டையள் காலம் போய், 'கொம்பியூட்டர் கிளாசுக்குப் போறன்' என்று பெருமையடித்துக் கொள்ளும் காலமாகிவிட்டது. டைப்ரைட்டர் எல்லாம் மியூசித்தில் சேர்க்க வேண்டிய வஸ்து ஆகிவிட்டன.

ஆனால் அந்தக் கொடுப்பினை இல்லாமலேயே நான் அவுஸ்திரேலியா வந்து பல்கலைக்கழகப் படிப்புக்குப் போக முன்னர் ஆறு மாதம் கொம்பியூட்டர் பழகலாம் என்று மெல்பர்னில் உள்ள ஒரு கல்வி நிறுவனத்தில் படித்தேன்.

அப்போதெல்லாம் ப்ளொப்பி டிஸ்க் கருப்பான பெரிய கொப்பி சைசில் இருக்கும். அதை வாங்கி வச்சிருக்கிறதே ஒரு பெருமை தான். அப்போது பேர்த் நகரத்துக்கு வந்து சேர்ந்த கூட்டாளி உமாகரனும் போனில் பேசும் போது 'மச்சான் பிரபு ! நான் எதையும் தாண்டிப் போடுவன் ஆனால் இந்தக் கொம்பியூட்டரைத் திறந்தால் தான் வயித்தைக் கலக்குது' என்று அநியாயத்துக்குக் கிலி கொண்டு பேச நான் ஆறுதல் கொடுத்தது இப்ப நினைவுக்கு வருகுது.

1996 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஒரு கொம்பியூட்டரை வாங்க முடிவெடுத்து என் சேமிப்புக் காசு எல்லாத்தையும் நிரப்பி இரண்டாயிரத்துச் சொச்சம் டொலருக்கு ஒரு கொம்பியூட்டர் வாங்கியாச்சு, அந்தக் காசு இப்ப ஐயாயிரம் டொலர் பெறும்.

என்னோடு மெல்பர்னில் அறைத்தோழனாக இருந்த கோயம்புத்தூர் பெடியன் சதீஷ், 'முதல் வேலையா அந்தக் கொம்பியூட்டர் பெட்டியை சுவாமி அறைக்குக் கொண்டு போய் அங்கை வச்சுப் பிரிங்க, அப்புறமா சாமி படத்துக்கு வேண்டி, கம்பியூட்டருக்கு ஊது வத்தி காட்டிடுங்க, திருநீற்றையும் அது மேல தடவிடுங்க பிரபா' என்று திடீர் புரோகிதராக சமய விளக்கம் சொல்ல அதன் படியே நடந்தது எல்லாம்.

கொம்பியூட்டர் பாவிக்காத நேரம் அதைச் சுற்றி வந்த பாலித்தீன் பையினால் மூடி, போதாக் குறைக்கு இன்னொரு துண்டையும் போர்த்தி விடுவோம். அந்த நேரம் கொம்பியூட்டர் வாங்க வசதிப்படாத நண்பர்களுக்கும் எங்கள் வீட்டுக் கொம்பியூட்டர் தான் கதி. சாமம் சாமமாக முழிச்சு இருந்து பல்கலைக்கழக அசைன்மெண்ட் செய்த கூட்டாளிமாரும் உண்டு.

மெல்ல மெல்ல இணையமும் பிடிபட ஆரம்பித்தது, அப்போது மிகச் சொற்ப தமிழ்த் தளங்கள் தான். ஈழம் செய்திச் சேவை என்று லண்டனில் இயங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகத்தில் இருந்து தினமும் ஸ்கான் செய்து போட்ட தமிழ்ச்செய்திகளைப் படிப்பதே அலாதிப் பிரியம், அப்போது அது இலுப்பைப்பூ அல்லவோ.

**ஏ.எல் எடுத்துப் போட்டு ரைப்பிங் கிளாஸ் போறம் என்று லெவலாகச் சொன்ன பெடி பெட்டையள் எல்லாம் 'கொம்பியூட்டர் கிளாசுக்குப் போறன்' என்று பெருமையடித்துக் கொள்ளும் காலமாகிவிட்டது.**

அவுஸ்திரேலியா வந்து பல வருடங்கள் கழித்து ஊருக்குப் போகிறேன். ஊர் முழுக்க இன்ரநெற் கஃபே தான், ஸ்கைப்பில் பேச, கொம்பியூட்டர் கேம் விளையாட, கொம்பியூட்டர் மூலம் வெளிநாட்டு அழைப்புக்களை ஏற்படுத்த எல்லாம் வசதி உண்டு என்று கொட்டை கொட்டையான எழுத்துகளுடன் திடீர் கடைகள் வந்து குமிந்து விட்டன. ஆனாலும் செருப்பைக் கழற்றிவிட்டு கடைக்கு உள்ளே நுழையவும் என்ற அறிவிப்பு மட்டும் இன்னும் நீக்கப்படவில்லை.

ஒருமுறை யாழ்ப்பாணம் லேடீஸ் கொலிஜ் இற்கு முன்னால இருந்த இன்ரநெற் கடையில் இப்படியானதொரு அறிவிப்பைப் பார்த்து, அவுசில் இருந்து வாங்கிப் போன புதுக் காலணியை வெளியே கிடத்தி விட்டு அரை மணி நேரம் ஈமெயில் பார்த்து விட்டு வந்தால், அந்தக் காலணிகள் மாயம். அந்தக் கொடும் வெயிலில் வெறுங்காலோடு சைக்கிள் மிதித்து யாழ்ப்பாணம் நியு மார்க்கெட் வந்து பாட்டாக் கடையில் செருப்பு வாங்கிப் போட்டுக் கொண்டு இணுவிலுக்குப் போனேன்.

இன்றைக்கு எங்கள் கிராமத்தில் கொம்பியூட்டர் இல்லாத வீடே கிடையாது. டிவிக்குப் பதிலாகப் டிவிடி படம் போட்டுப் பார்க்க வசதி, நாடகமும் யுடியுப்இலை பார்க்கலாம் எல்லோ' என்று சொல்லும் தாய்க் குலங்கள் வரை இந்தக் கொம்பியூட்டரின் பரிணாமம் பரந்து விரிந்திருக்கிறது.

ஏதேனும் கஷ்டமான காரியத்துக்கு மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தாலும் எண்பது வயது கந்தையா அண்ணை 'உந்தக் கொம்பியூட்டரிட்டக் கேட்டுப் பாரன்' என்று ஆலோசனை சொல்லுறார்.

ஆனாலும் எனக்கு இன்று வரை புரிபடாத விடயம் 'ஏன் கொம்பியூட்டர் திறந்து மூட கணிதமும் ஆங்கிலமும் படிக்க வேணும்' என்டது தான்...

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா



# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 34 வயது, 5'8" born and broughtup in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4959

2. 35 வயது, 5'6" Permanent residence in france working in a restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4958

3. 54 வயது, 5'4" British citizen widower self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4944

4. 38 வயது, 5'10" British citizen widower working in a restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4940

5. 27 வயது, 5'6" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4939

6. 31 வயது, 5'6" Canadian citizen divorced working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4938

7. 34 வயது, 5'11" graduate work permit visa working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4936

8. 38 வயது, 5'6" Belgium asylum seeker divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4935

9. 34 வயது, 5'6" Canadian citizen working in a bank தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4933

10. 29 வயது, 5'5" born and broughtup in uk working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4578

11. 50 வயது, 5'8" British citizen widowed engineer living in uk with 2 daughter தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4662

12. 40 வயது, 5'6" British citizen divorced accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4549

13. 46 வயது, 5'11" Divorced PR in Australia, Working as a school teacher தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4904

14. 31 வயது, 5'9" Manager in Super market, Temporary visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4916

15. 41 வயது, 5'8" PR in France, working in restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4914

16. 25 வயது, 5'16" Residing in srilanka, Self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4917

17. 30 வயது, 5'6" PR, Graduate, Working as a support Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4927

18. 41 வயது, 5'11" Canadian citizen, Divorced, working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4928

19. 29 வயது, 5'9" Canadian citizen, Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4929

20. 30 வயது, 5'6" Doctor, Residing in Srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4932

21. 36 வயது, 5'5" British citizen, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4899

22. 36 வயது, 5'7" Residing in Srilanka, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4898

23. 32 வயது, 5'9" Asylum seeker in France, Working in Restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4890

24. 26 வயது, 5'11" Working as a Manager in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4889

25. 32 வயது, 5'4" French citizen, working in supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4887

26. 28 வயது, 5'8" Asylum seeker, Graduate, Working in Offlicence தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4883

27. 25 வயது, 5'7" British citizen, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4878

28. 42 வயது, 5'8" British citizen, Graduate, Working in IT field தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4522

29. 45 வயது, 5'2" Divorced, Residing in Srilanka, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4876

30. 24 வயது, 5'5" Netherland citizen, Residing in London தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4874

31. 32 வயது, 5'9" PR, doing own business in London தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4872

32. 55 வயது, 5'4" Divorced, British Citizen, doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4870

33. 37 வயது, 5'6" British Citizen, Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4868

34. 35 வயது, 5'10" Residing in Srilanka, working as a contractor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4864

35. 42 வயது, 5'8" British Citizen, Working in Investment banking as an accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4558

36. 30 வயது, 5'6" Work permit, working in a Restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4857

37. 33 வயது, 5'6" British citizen, ACMA qualified Accountant, working as a Finance Manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4854

38. 43 வயது, 5'7" Residing in Dubai, Working in IKEA as a store keeper Manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4853

39. 25 வயது, 5'5" Residing in Srilanka, working தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4851

40. 33 வயது, 5'4" British citizen, Working in Super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4847

41. 46 வயது, 5'8" German citizen, Residing in UK, Working in Super market, Separated தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4845

42. 28 வயது, 5'11" Residing in uk, working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4841

43. 26 வயது, 5'7" Student visa, Working in Petrol station தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4831

44. 23 வயது, 5'1" Asylum Seeker, Working in super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4823

45. 40 வயது, 5'6" British citizen, Graduate, Divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4816

46. 35 வயது, 5'7" Residing in India, Graduate, working in a Private company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4814

47. 32 வயது, 5'6" Travel Document, working as a customer service in Airport தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4808

48. 32 வயது, 5'4" Work permit, Working as a Financial controller தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3998

49. 27 வயது, 5'8" British citizen, Working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4811

50. 30 வயது, 5'7" PSW visa, working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4804

## மணமகன் தேவை

1. 32 வயது, 5'0" Permanent residence in uk divorced accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4961

2. 41 வயது, 5'5" British citizen divorced working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4960

3. 34 வயது, 5'4" British citizen working in a retail industry தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4957

4. 30 வயது, 5'8" Canadian citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4941

5. 33 வயது, 5'3" temporary visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189

6. 51 வயது, 5'4" Permanent residence in uk working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 656

7. 48 வயது, 5'3" Divorced, British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4903

8. 32 வயது, 5'6" Graduate, Residing in Italy, Work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4907

9. 31 வயது, 5'2" Graduate, Residing in Srilanka, Working in Government field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4909

10. 30 வயது, 5'4" Graduate, Canadian citizen, Working in college தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4910

11. 39 வயது, 5'4" Canadian citizen, Head Teacher in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4915

12. 35 வயது, 5'4" Graduate, Canadian citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4921

13. 30 வயது, 5'4" Graduate, Residing in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4924

14. 29 வயது, 5'3" Graduate, Residing in India, Manager in Indian Travel's company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4930

15. 23 வயது, 5'4" Graduate, Residing in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4902

16. 41 வயது, 5'1" British Citizen, Divorced, Working in school தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4900

17. 32 வயது, 5'3" Graduate, Residing in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4892

18. 24 வயது, 5'3" PR, Graduate, Residing in France தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4886

19. 25 வயது, 5'1" Residing in Srilanka, Working as a Finance Executive தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4885

20. 29 வயது, 5'3" Graduate, Working as Data analyst, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4884

21. 26 வயது, 5'8" Graduate, Student visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4881

22. 27 வயது, 5'6" Graduate, Residing in India தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4869

23. 28 வயது, 4'10" Divorced, Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4867

24. 34 வயது, 5'0" Residing in Srilanka, Working in Software field in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4866

25. 33 வயது, 5'4" Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4856

26. 27 வயது, 5'4" Residing in Colombo, Working as a project Manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4848

27. 31 வயது, 5'1" Residing in Canada, Canadian, Working in Fiancial Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4843

28. 35 வயது, 5'0" Divorced, Residing in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4838

29. 40 வயது, 5'6" PR, Working தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4837

30. 33 வயது, 5'5" Residing in Dubai, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4829

31. 22 வயது, 5'3" Residing in Srilanka, Teacher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4822

32. 38 வயது, 5'1" PR in Germany, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4818

33. 27 வயது, 5'3" Residing in Srilanka, Working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4799

34. 25 வயது, 5'3" Residing in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4796

35. 41 வயது, 5'5" Residing in France, as an Asylum Seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4795

36. 27 வயது, 5'4" srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4414

37. 18 வயது, 5'4" Residing in Srilanka, Working தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4794

38. 29 வயது, 4'10" Residing in Srilanka, Graduate, Working in Government job தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4832

39. 30 வயது, 5'4" British Citizen, Divorced, working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4793

40. 43 வயது, 5'3" British Citizen, Graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4731

41. 48 வயது, 5'3" Residing in Colombo, Working in Government job தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4721

42. 33 வயது, 5'5" Residing in Srilanka, Working தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4718

43. 36 வயது, 5'5" Residing in Srilanka, Divorced, Working in a Private company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4591

44. 28 வயது, 5'4" PR, Working as a Doctor in London தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4545

45. 35 வயது, 5'3" British citizen, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4248

46. 26 வயது, 5'3" Danish citizen, Residing in uk, working in NHS தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

47. 24 வயது, 5'5" British citizen, working in medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

48. 33 வயது, 5'6" Residing in Srilanka, Graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4828

49. 44 வயது, 5'4" Residing in Srilanka, Working in a Government hospital தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4572

50. 34 வயது, 5'4" Residing in Srilanka, Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4827

51. 26 வயது, 5'1" student visa in uk, Graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4820

52. 24 வயது, 5'3" Student visa in uk, Graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4819

53. 40 வயது, 5'4" British citizen working as an accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4806

54. 34 வயது, 5'4" Permanent residence, divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4798

55. 28 வயது, 5'2" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4789

56. 22 வயது, 5'3" British citizen working as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4785

57. 45 வயது, 5'5" in srilanka working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4772

58. 40 வயது, 5'5" Graduate, Working as an Accounting executive in Colombo தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4809

59. 48 வயது, 5'2" German citizen divorced working as a teacher with the child தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4770

60. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4766

61. 40 வயது, 5'10" German citizen Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4756

62. 31 வயது, 5'6" British citizen accountant working in NHS Hospital தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4584

63. 29 வயது, 5'2" British citizen accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4754

இணையத்தில் மேலதிக விபரங்கள்
**www.orumanam.com**

# இளமையில் கல்

கண் உடையர் என்பவர் கற்றோர், முகத் திரண்டு புண் உடையார் கல்லாதவர். இது வள்ளுவரின் வாக்கு. எனவே, கல்லாதவரை உலகம் எப்படி நோக்குமென்பதை நாசுக்காக உணர்த்தியுள்ளார் வள்ளுவப் பெருமான். கற்கவேண்டியகல்வியைஎந்தவயதிலும்கற்கக் கூடிய நவீன வசதிகள் தாராளமாகக் கிடைத் தாலும் இளமையில் கற்பது தான் சிறந்ததென ஔவையார் கூறி வைத்துள்ளார்.

அதற்குரிய காரணங்கள் ஏராளமாக இருப் பினும், ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்பு கிறோம். மூளையின் வளர்ச்சி தாயின் கருவி லேயே ஆரம்பித்தாலும், அதன் ஞாபகசக்தி மூன்று வயதிலேயே முளைவிடத் தொடங்கிய உண்மையை, திருஞானசம்பந்தர் பாடியமுதல் பாடலான தோடுடைய செவியன் என ஆரம் பிக்கும் தேவாரம் நிரூபிக்கின்றது.

உலகில் வாழும் மனிதர்களுக்கிடையே, இனம் மாறுபடலாம், மொழி வேறுபடலாம், மதம் வேறாகலாம், கல்வி எனும் கருந் தனம் எல்லோருக்கும் அவசியமானதே. ஆகவே தான், குழந்தைகள் ஒவ்வொரு வீடுகளிலும் கல்விக்கு முதலுரிமை வழங்கப்படுகிறது. ஐந்து வயது பிராயத்தை அடைய முன்னரே குழந்தை களைக் கல்விக் கூடங்களில் சேர்ப்பிக்கவும், அவர்களைப் பாடசாலைக்கு கூட்டிச் செல்ல வும், திரும்பவும் அழைத்து வரவும் ஒவ்வொரு வீட்டிலும் கடமைகள் ஆரம்பமாகின்றன. ஏனெனில், இளமையில் கல் என ஔவையார் கூறிய அருள் வாக்கு செயல்பட ஆரம்பித்துவிட்டது.

குடும்பங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தாலும், கல்வியை இளமையில் கற்ப தால், அவ்வறுமையினின்றும் குடும்பங்கள் மீள்வதற்கு கல்வி நிச்சயம் கைகொடுக்கு மென்பது ஔவையாரின் நம்பிக்கையாகும்.

ஏனெனில் கல்வியில் மேம்பட்ட அனேகரின் சரித்திரங்களை ஆராய்ந்தால் அவர்கள் கல் வியை இளமையில் கைவிடவில்லையென்பது புலனாகும்.

கல்வியை கற்பதற்கு அவசியமான ஞாபக சக்தி வயது முதிர முதிர இயற்கையாகவே தேய்ந்து விடுவது அனுபவரீதியாக கண்ட உண்மை. இளமைப் பருவத்தில் உருவாகும் ஞாபகசக்தி, கல்வியைக் கற்பதற்கு உறுது ணையாகிறது. எமது இளமைப் பருவத்தில் கற்றுக் கொண்ட பல அறிவான நூல்கள் வயது முதிர்ந்த காலத்திலும் ஞாபகத்தில் வருவது இளமையில் கற்றதனால் ஆனபயன்.

ஆகவே, கல்வி கற்பதற்கு உகந்த காலம் இளமைப்பருவம். இதனைத் தவறவிடாமல், எத்தனை இடர்கள் வந்தாலும், இளமையில் கற்கும் பணியை ஒவ்வொரு பெற்றோரும் தவ றாது தம் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டு மென்ற ஆவலுடன் தான் ஔவையார் இளமை யில் கல் என அறிவுரை கூறுகிறார்.

# சின்ன மீனும் பெரிய மீனும்

இந்தியக் கண்டத்தில் தேர்தலும் நடந்தாச்சு. அதி சக்தி வாய்ந்த பிரதமராக நரேந்திரமோடி அவர்கள் பதவியிலும் அமர்ந்தாச்சு. கேள்விப்படாத தலைகளும் மந்திரிப் பதவிகளைப் பிடிச்சாச்சு. இந்தியாவின் பெரியதொரு மாநிலமான தமிழ் நாடு டெல்லியில் இடம்பெற்ற மாபெரும் பதவி யேற்பு வைபவத்தை முற்றுமுழுதாக புறக் கணித்துள்ளதையும் அறிந்தாச்சு.

காரணம் ஈழத்தமிழர்களை கொன்று குவித்த இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதியை இவ்வைபவத்திற்கு அழைக்கப்பட்டதே.

இலங்கை ஜனாதிபதியை சார்க் நாடுகளின் அங்கத்தவராகவே ஒழிய வேறு தனிப்பட்ட விருப்பு எதுவுமில்லையென டெல்லி மேலிடம் அறுதியாகக் கூறிவிட்டது. 3000க்கும் மேற்பட்ட விருந்தினர்களுக்கு மத்தியில் அலங்காரமாக மிக அக்கறையுடன் எந்தவித அசம்பாவிதங் களுக்கும் இடம்கொடுக்காமல் கச்சிதமாக நடந் தேறிய பதவியேற்பு வைபவம் மிக ஒழுங்காக நடந்தேறியதை நேரலை தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின.

எல்லாம் நன்றாகவே நடந்தன. விருந்தினர் கள் மத்தியில் வீற்றிருந்த இலங்கை ஜனாதிபதி யின் வீறாப்பு, தமிழ் மக்களின் மனங்களைப் புண்படுத்தினாலும் இந்தியாவின் பெரியதொரு மாநிலமான தமிழ்நாட்டின் எதிர்ப்புகளையும் புறந்தள்ளி சிறியதொரு நாடான இலங்கைக்கு மதிப்புக் கொடுத்து படையெடுக்க எண்ணிய சோனிய அரசு. சோழியன் குடும்பி சும்மா ஆடாது என சொல்லத் தோன்றுகிறது.

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பை தமிழ்நாடு எதிர்த்தாலும் சரி, தமிழக முதல மைச்சர் விழாவில் பங்குபற்றாததும் சரி, தமி ழகப்பிரதிநிதிகள் டெல்லிக்கு செல்லாததும் சரி வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதியின் அழைப்பை நிராகரித்ததும் சரி. இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் சின்ன மீனான இலங்கை ஜனா திபதியை அழைத்து எந்தப் பெரிய மீனைப் பிடிக் கப் போகிறதோ, பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். நம்புங்கள் எல்லாம் நல்லதே நடக்கும்.

## தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

# அடிக்கடி கோபமா குளுக்கோஸ் அளவைக் கவனியுங்கள்

எதற்கெடுத்தாலும் எதிர்ப்பேச்சு. காதடைக் கக் கூடிய சத்தம் பேச்சிலும் செயலிலும் வர லாம். சந்தோஷமாக இருக்க வேண்டிய சந்தர்ப் பங்களில் கீரியும் பாம்பும் போல சண்டை இவையெல்லாம் சர்வ சாதாரணமாகக் காணக் கூடிய குடும்பக் காட்சிகள். ஏன் இப்படி யெல்லாம் நடக்கிறது என்ற ஆராய்ச்சியை ஆரம்பித்தார்கள். 1960இல் தொடங்கிய ஆராய்ச்சி, 2010இல் ஒகியோ மாநில பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் புத்லால் ஈடுபட்டார். இவருடைய ஆராய்ச்சியில் திருமண மாகிய 107 தம்பதியினர் ஈடுபடுத்தப்பட்டனர். 21 நாட்கள் வரை இவர்களுடைய உடல் நலம், உளநலம், இரத்தோட்டம், உக்கம், உணவு வகை, துர்ப்பழக்கங்கள், குடி வகை, உடற் பயிற்சி ஆகிய செயற்பாடுகள் அனைத்தும் காலையிலும், மாலையிலும் தவறாது பரி சோதிக்கப்பட்டன.

உடலின் எரிபொருளாகக் கருதப்படும் குளுக் கோஸ் மட்டம் இரத்தோட்டத்தில் கூடியும், குறைந்தும் நாளாந்தம் உட்கொள்ளும் உணவு வகைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படு கிறது. மனிதரின் சுய கட்டுப்பாட்டை நிர்ண யிக்கும் மூளை, அதற்கு ஊட்டப்படும் குளுக் கோஸ் சக்தியை நம்பியே செயற்படுகிறது. குளுக்கோஸ் மட்டம் மூளைக்கு போதியளவு கிடையாது போகும் சந்தர்ப்பங்களில் மனிதர் சுய கட்டுப்பாட்டை இழந்து கோபமடைவதாக ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளார்கள்.

கோபத்தில் ஆரம்பிக்கும் உணர்ச்சிப் பிர வாகம், வலுச் சண்மைகளை ஆரம்பித்தலும், பழி வாங்கும் எண்ணங்களை தூண்டுவதிலும், மற்றவர்கள் மனதை நோகச் செய்யும் செயற் பாடுகளை உருவாக்குவதிலும் தூண்டப்படு கிறது. குறிப்பாக 2ஆம் தர நீரிழிவினால் பாதிக்கப்பட்டவர்களில் இந்த விதமான உணர்ச்சிகள் அதிகமாகக் காணப்படுவதா கவும், ஆராய்ச்சிகள் மூலமாகக் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

மனிதருள் உண்டாகும் கோபதாபங்கள் எதுவும் பிறப்புடன் வந்த குணங்கள் அல்ல. நாளாந்தம் உட்கொள்ளும் உணவில், குடிபானங் களில் கட்டுப்பாட்டை இழந்த காரணத்தினால் தான், இத்தகைய வேறுபட்ட உணர்ச்சிகள் உருவாகுவதை ஆராய்ச்சியாளர் புஷ்மன் கூறு கிறார். இத்தகைய குறைபாடுகளை அவதா னித்தவர்கள் கண்டிப்பாக குளுக்கோஸ் மட் டத்தை பரிசோதிக்கும்படி அறிவுறுத்துகிறார். மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென மனதார விரும்புவர்கள் கொஞ்சம் இனிய பானத்தை அருந்தும்படி கூறுகிறார்கள். அதனால் தான் என்னவோ படுக்கைக்குச் செல்லும் முன்னர் பால் அருந்தும் பழக்கம் வந்ததோ ?

# மோடியின் அமைச்சரவையும்...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

திரிபுரா, சிக்கிம் ஆகியமாநிலங்களுடன் ஆறு ஒன்றியப் பிரதேசங்களில் (Union Territories) இருந்து எவரும் அமைச்சர வையில் இடம்பெறவில்லை என காங்கிரசுக் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். காங்கிரசின் அமைச் சரவையில் இடம்பெற்றிருந்த பிரணாப் முஹர்ஜீ, ப.சிதம்பரம், நட்வர் சிங், அர்ஜுன் சிங், சரத்பவார் ஆகியோரின் அனுபவம் கல்வியு டன் ஒப்பிடுகையில் புதிய அமைச்சரவை ஒரு தூசு என்கின்றனர் காங்கிரசுக் கட்சியினர்.

இனி நடக்கவிருக்கும் அனைத்து சட்டசபைத் தேர்தல்களிலும் மோடியின் பாஜக கட்சியினர் வெற்றி பெறவேண்டும். அப்போதுதான் ராஜ்ய சபா எனப்படும் மாநிலங்களவையில் மோடிக் குத் தேவையான பெரும்பான்மை உறுப்பினர் களைப் பெற முடியும் அத்துடன் அடுத்த குடியர சுத் தலைவராக மோடிக்கு வேண்டியவரை வெற்றி பெறச் செய்ய முடியும். முதலில் வர இருப்பது மும்பாயைத் தலைநகராகக் கொண்ட மஹாராஸ்ட்ரா மாநிலத்தில் சட்ட சபைத் தேர்தல் நடக்க விருக்கின்றது. இந்தியப் பொரு ளாதாரத்திற்கு இது முக்கியமான தேர்தலாகும். அங்கு பொதுத் தேர்தலில் மொத்தமுள்ள 48 தொகுதிகளில் 43இல் பாஜக கூட்டணி வெற்றி பெற்றது. இந்த அடைப்படையில் மாநில சட்ட சபைக்கான 288 தொகுதிகளில் 231 தொகுதி களில் பாஜக கூட்டணி வெற்றி பெற வாய்ப்பு உள்ளது. இதனால் பல கட்சியினரும் அதன் தோழமைக் கட்சியான சிவசேனா அமைப்பைச் சேர்ந்தவர்களும் தேர்தலில் போட்டியிட அதிக ஆர்வமாக இருக்கின்றனர். இது அங்கு இருதரப் பினர்களுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்தலாம்.

2004-ம் ஆண்டுவரை பாஜக ஆட்சியில் இருக்கும் போது இந்தியாவின் பணவிக்கம் 3.76 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. இதை கடந்த பத்து ஆண்டுகளில் காங்கிரசு ஆட்சி 10.92 விழுக்காடாக உயர்த்திவிட்டது. இதை மீண்டும் குறைத்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவில் 7விழுக்காட்டிற்கு மேல் அதிகரிக்க வேண்டும். அல்லது வேலையில்லாப் பிரச் சனை இளையோரை விரக்தியடையச் செய்யும். நடந்த தேர்தலில் வாக்காளர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் 35 வயதிற்குக் குறைந்த இளை யோர்கள். காங்கிரசின் ஆட்சியில் விரக்திய டைந்த இவர்கள் மோடியின் ஆட்சியிலும் விரக்தியடைந்தால் நாட்டில் பெரும் எழுச்சி நடக்க வாய்ப்புண்டு.

உலகிலேயே மிக நீண்ட கழிப்பிடமான இந்திய தொடருந்துப் பாதையையும் உலகி லேயே மிக நீண்ட குப்பைத் தொட்டியான கங்கை நதியையும் எப்படி புதிய அமைச்சரவை எப்படிச் சமாளிக்கப் போகிறது?

சுஸ்மா சுவராஜ் வெளியுறவுத் துறை அமைச் சராக இடம் பெற்றது ஈழத் தமிழர்களுக்கு உகந் தது அல்ல. பதவி ஏற்பு வைபத்தில் மஹிந்த ராஜ பக்ச கலந்து கொண்டது ஒரு நல்ல ஆரம்ப மும் அல்ல.

இந்திய வங்கிகளின் கடன் அறவிடும் விழுக் காடு குறைந்து கொண்டே போகின்றது. சென்ற ஆண்டு 3.8 விழுக்காடாக இருந்த அறவிட முடியாக்கடன் இந்த ஆண்டு 4.4விழுக்காடாக உயர்ந்துவிட்டது. இது புதிய அமைச்சரவைக்கு பெரும் சவாலாக அமையும். இந்தியா கடன் நெருக்கடியை நோக்கி நகராமல் பார்க்க வேண்டிய பொறுப்பு பெரும் பொறுப்பு. வரி ஏய்ப்பு, கறுப்புப் பணம் பெரும் பூதாகாரப் பிர்ச்சனை. இந்தியாவில் உறுதியான நிலை ஏற்பட அதன் பொருளாதாரம் குறைந்தது எட்டு விழுக்காடாவது வளர வேண்டும். இப்போது அதன் வளர்ச்சி ஐந்திலும் குறைவு.

◆ **புதிய அரசு செய்ய வேண்டியவை:**

- சிவப்பு நாடாக்களை அறுத்தெறிதல்
- சட்டங்களை இலகுவாக்குதல்
- உள்கட்டுமான அபிவிருத்தி (Infrastructure development)
- நதிநீர்ப்பங்கீடு
- வெளிநாட்டு முதலீடுகளைக் கவருதல்
- உலகச் சந்தையில் இந்தியாவின் போட்டி யிடு திறனை மேம்படுத்தல்
- உள்ளூர் கைத்தொழில் உற்பத்தியை அபிவிருத்தி செய்தல்
- விவசாயிகள் தற்கொலைகளை நிறுத்துதல்
- கிராமங்களுக்கு வங்கித் துறையை விரிவாக் குதல்.

◆ **மோடியின் ஆட்சி எதிர் கொள்ளும் சவால்கள்**

1. இந்தியாவில் குஜராத்தியர்களுக்கு எதி ரான இனவாதம் இனித் தூண்டப்படலாம். கேரளத்து ஊடகங்கள் அதை ஆரம்பித்து விட்டன.
2. இந்தியாவின் வரலாற்றில் பார்ப்பனர் அல் லாதவர் தலைமை அமைச்சரானால் அவர் இரண்டு ஆண்டுகள் கூட நீடித்ததில்லை.
3. அயல் நாடுகளுடனான உறவு
4. காங்கிரசு ஆதரவாளர்களைக் கொண்ட நிர்வாக சேவை
5. சிவ சேனா மும்பாய் நகரில் செய்யக் கூடிய கலவரங்கள்
6. பார்பர் மகுதியும் இந்துத்துவவாதிகளும்.
7. மாற்றுக் கட்சிகளின் கைகளில் உள்ள மாநில அரசுகள்
8. காங்கிரசுக் கட்சியில் இருந்து வந்த குடிய ரசுத் தலைவர்
9. பாஜகவிலும் பார்க்க அதிக காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட மாநிலங் களவை.
10. மனவலிமை இழந்த இந்தியப் படையினர்.
11. முன் அனுபவம் அதிகம் இல்லாத பல அமைச்சர்கள்

# 83இல் எரிக்கப்பட்ட...

(25ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்த உழவு இயந்திரம் உட்பட சகல சொத்துக்களும் எரித்து நாசமாக்கப்பட்டன. காந்தியத்தின் பொறுப்பில் இயங்கிய அனைத்து ஏனைய பண்ணைகளும் நேரடியாகச் சென்று அலுவலகங்கள் சூறையாடப்பட்டன. இவ்வா றான அழிப்பு நடவடிக்கையில் பொலிஸாரும், இராணுவத்தினரும் விரும்பி ஈடுபட்டிருந்தார் கள்.

இதேவேளையில், காந்தீய மாவட்டப் பணி மனைகளும் கூட சோதனைக்கும், சேதத்துக் கும் உள்ளாக்கப்பட்டன. இன்னும் பலர் விசார ணைக்குட்பட்டிருந்தார்கள். ஆயிரக்கணக் கான குடும்பங்களைக் குடியேற்றி அவர்களை புனரமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கிராமிய எழுச்சித் திட்டங்களை வழிநடத்தி சுய தன்னிறைவை குடும்பங்களுக்கிடையில் ஏற்ப டுத்த திட்டமிட்ட முறையில் இயங்கிய காந்தீ யம் அன்றுடன் அழித்து ஒழிக்கப்பட்டது. அரசி னுடைய முனைப்பு வெற்றியடைந்தது. கைதான நான் ஜுன் 20 இல் விடுவிக்கப்பட்டேன். ஜுலை 24 நாளில் அமைப்புச் செயலாளர் டாக்டர் ராஜ சுந்தரம் உட்பட வெலிக்கடை தமிழர் கைதிகள் 54 பேர் காடையர்களால் கொல்லப்பட்ட கொடு ரம் நிகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து மட்டக் களப்பு சிறை உடைப்பிலே எஸ்.ஏ.டேவிட் ஐயா உட்பட சில காந்தீய பிரமுகர்களும், இளைஞர் களும் தப்பித்துக் கொண்டார்கள்.

இந்த கொடூரங்களைத் தொடர்ந்து காந்தீயம் மௌனிக்க ஆரம்பித்தது, ஆயினும், வெலிக் கடை படுகொலைகளும், ஏனைய கொடூரங் களும் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்திய எழுச்சி, ஆவேசங்கள் விடுதலை இயக்கங்கள் தீவிரமடைய காரணமாயின. இந்த அழிப்புக ளுக்கான உயிர் வதைகளுக்கான விதையை அரசாங்கம் தொடர்ந்து கொடுக்க வேண்டிய தேவைகளை அண்மைக்கால சம்பவங்கள் அனைவரும் பார்த்தோம். இவ்வாறான காந்தீ யத்தினுடைய நினைவுகள் நெஞ்சில் நிறைந்த வைகளாக ஆயிரக்கணக்கான ஏழைகள் மத்தி யில் இன்னும் இருக்கத் தான் செய்யும்.

# மலையாளிகளின் துரோகங்கள் - சினிமா - 02







## சாம்ராஜ்

*(கடந்த வாரத் தொடர்ச்சி)*

பெரும்பாலும் ஸ்டண்ட் மாஸ்டர்கள் தமிழர்கள்தான். பாத்திரங்களாக மட்டுமல்ல சண்டைக் காட்சிகளிலும் தமிழர்களே அடிவாங்குகிறார்கள். இளையராஜா மாத்திரம் இப்போது அங்கே வலம் வருகிறார். இளையராஜாவின் புகழ்மிக்க காலத்தில் அவர்கள் அழைக்கவில்லை. அவர் தமிழில் 'சோர்ந்திருக்கும்' காலத்தில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பழசிராஜா படத்தில் அவரது இசை கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டது. அந்த மண்ணின் மணம் இளையராஜாவுக்குத் தெரியாது என்றார்கள். பழசிராஜா படத்திற்கான மாநில அரசு விருதுப் பட்டியலில் இளையராஜாவின் பெயர் கிடையாது.

அப்படியே தோசையை திருப்பிப் போட்டோமென்றால் தமிழ் சினிமாவில் இதுவரை எவ்வளவு மலையாள இயக்குநர்கள். ராமூ கரியாட் தொடங்கி சேது மாதவன், ஐ.வி.சசி, பிரதாப் போத்தன், பரதன், பாசில், வினயன், கமல், ரஃபி மெக்கார்டின், சித்திக், பிரியதர்ஷன், லோகிதாஸ், ஷாஜி கைலாஷ், ராஜிவ் மேனன் என.. இந்த மலையாள இயக்குநர்களின் தமிழ் படங்கள் மிகவும் ஆய்வுக்குரியவை. பிரதான பாத்திரங்களைத் தவிர மற்ற பாத்திரங்களை முடிந்தவரை மலையாள நடிகர்களைக் கொண்டே நிரப்புவார்கள். உதாரணம் பாசில், பிரியதர்ஷன் படங்கள். பாசிலின் பூவிழி வாசலிலே படத்தில் சத்ய ராஜைத் தவிர ஏறக்குறைய எல்லோரும் மலையாள நடிகர்களே. ரகுவரன், கார்த்திகா, பாபு ஆண்டனி (உங்களுக்கு ஞாபகம் வரவில்லை எனில் விண்ணைத் தாண்டி வருவாயா ஜெஸியின் தந்தை), மணியம் பிள்ளை ராஜு, குழந்தை பாத்திரம் சுஜிதா (அது வாவா. வாவா. என்று மழலை மொழியில் அல்ல மலையாள மொழியிலேயே பேசும்). அந்த படத்தின் flash back ல் தோன்றி மறையும் கதாபாத்திரங்களில் வருவது கூட மலையாளிகளே. இதற்கு மேல் சொல்வதற்கு துணை நடிகர்கள் மாத்திரமே.

பூவே பூச்சூடவா வில் 'எஸ்.வி.சேகர்' தவிர எல்லோரும் மலையாளிகளே. பாசிலின் பெரும்பான்மையான படங்களில் நாயகனோ நாயகியோ மலையாளிகளாக இருப்பர். பிரியதர்ஷனின் லேசா லேசாவில் ஷாம், விவேக், ராதா ரவி, மயில்சாமி தவிர எல்லோரும் மலையாளிகளே. அவரும் முடிந்தவரை மலையாள நடிகர்களையே பயன்படுத்துவார். முடியவில்லை எனில் தமிழில் இருக்கும் பிறமொழிக் காரர்களைப் பயன்படுத்துவது. பிரியதர்ஷனின் 'தமிழ் படமான' காஞ்சிவரத்தில் பிரதான பாத்திரங்கள் பிரகாஷ் ராஜும், ஸ்ரேயா ரெட்டியும் தான். ராஜீவ்மேனனின் படங்கள் ஆபத்தானவை. மின்சாரக் கனவில் அரவிந்தசாமி, நாசரைத் தவிர பிறமொழிக் காரர்களும், மலையாளிகளுமே. கஜோல், கிரீஷ் கர்னாட், பிரபுதேவா, எஸ்.பி.பாலசுப்பிரமணியன், பிரகாஷ் ராஜ்.. இது ஏ.வி.எம். பொன்விழா தயாரிப்பு என்பது மற்றுமொரு அபத்தம்.

அடுத்த படத்தில் ராஜீவ் மேனனுக்கு இன்னும் கூடிப் போய் முழுக்க முழுக்க தமிழர் அல்லாதவர்களை வைத்து எடுக்கப்பட்ட திரைப்படம் 'கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன்'. இதை மிஞ்சி இன்னும் ஒரு திரைப்படம் வரவில்லை. ஐஸ்வர்யா ராய், தபு, மம்முட்டி (இவர் இந்திய ராணுவத்தின் 'அமைதிப் படை'யில் இலங்கை சென்று காலை இழந்தவர்.) அஜித், அப்பாஸ், ரகுவரன், அனிதா ரத்னம், ஸ்ரீவித்யா என. இந்தப் படத்தின் தயாரிப்பாளர் ம.தி.மு.க வின் கலைப்புலி எஸ்.தாணு. ராஜீவ் மேனனால் இந்திய அமைதிப் படையில் காலை இழந்தவரை நாயகனாக்கித் தமிழ் படம் எடுக்க முடிகிறது. சரி. 'ராஜீவ்' 'மேனன்' என்று பெயர் கொண்டவர் வேறு எப்படி படம் எடுப்பார்?

ஏறக்குறைய மற்ற மலையாள இயக்குநர்களும் இதே முறையை பின்பற்றுகின்றனர். முடிந்தவரை மலையாள நடிகர்கள், நடிகைகள் அல்லது தமிழில் இருக்கும் பிற மொழிக் காரர்கள், வேறு வழியே இல்லையெனில் தமிழ் நடிகர்கள்.

நாராயணகுருவின் வாழ்க்கை வரலாறு யுவ புருஷன் என்ற பெயரில் மலையாளத்தில் திரைப் படமாக்கப்பட்டது. மம்முட்டி ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்க தலைவாசல் விஜய் நராயண குருவாக நடித்தார். முக ஒற்றுமைக்காக அவருக்கு அந்த வாய்ப்பு கிட்டியது என்று சொல்லப் பட்டது. சொல்லாதது இனப்பற்று காரணமாக கிட்டியது என்பதே. எத்தனை தூரத்தில் இருந்தாலும் தம்மவர்களை அடையாளம் கண்டு அழைத்துப் போவார்கள் மலையாளிகள்.

அஜீத்தின் படங்களை கவனித்துப் பாருங்கள். திரைப்படத்தில் அவர் ஏதேனும் ஒரு அறையைத் திறந்தால் அங்கே ஒரு மலையாள நடிகர் இருப்பார். இன்றைக்கு நடித்துக் கொண்டிருக்கும் மலையாளத்தை தாய்மொழியாகக் கொண்ட நாயகர்களில் அஜீத் ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலையில் இருப்பவர். எனவே சகட்டுமேனிக்கு அவர் படத்தில் மலையாள நடிகர் நடிகைகள். தீரமிக்க அண்ணன் அவருக்கு தீனாவில் தேவைப்பட்ட பொழுது சோதரர் சுரேஷ் கோபியே அவருக்கு உதவினார்.

இதற்கு நடுவேதான் கௌதம்மேனனும் மலையாளிகளுக்காக தன் பங்கிற்கு கிடார் இசைத்துக் கொண்டிருக்கிறார். என்ன இருந்தாலும் அவர் ஸ்கூல் ஆப் ராஜீவ்மேனன் அல்லவா. இவரின் முக்கிய பங்களிப்பு மலையாள கதாபாத்திரங்களை உருவாக்கி, அவர்களை சென்னையில் உலவ விட்டு தமிழ் படம் எடுப்பது. வாரணம் ஆயிரத்தில் சகல பாத்திரங்களும் மலையாளிகளே. விண்ணைத் தாண்டி வருவாயாவில் மலையாள ஜெசியை துரத்தித் துரத்திக் காதலித்து தோற்றுப் போகிறார் தமிழ் கார்த்திக். அவர் கௌதமாக இருந்த பொழுது மின்னலேயும், காக்க காக்கவும் தந்தவர் கௌதம் வாசுதேவ மேனனாகிய பின் 'தான் முன் வைக்கும் மலையாள அடையாளங்கள்' என்கிறார் தன் பாத்திரங்களைப் போலவே ஆங்கிலத்தில். சரி கேரளத்துக்குத் திரும்புவோம். சேரனின் ஆட்டோகிராப் கோட்டயத்தில் வெளியான போது அதில் சேரன் மலையாளிகளை அடிக்கும் காட்சி நீக்கப் பட்டது. பாலாவின நான் கடவுள் படத்தில் மலையாளிகளை அடிக்கும் காட்சியில் பெரும் கூச்சல் கோட்டயம் திரையரங்கத்தில்.

'பாண்டி' என்றே மலையாள சமூகமும், சினிமாவும் தமிழர்களை எப்போதும் விளிக்கிறது. ஏறக்குறைய 16,17 ம் நூற்றாண்டு வரை பாண்டியர்களுக்கும் சேரர்களுக்கும் யுத்தம் நடந்திருக்கிறது. சேர மன்னர்களோடு சமீப நூற்றாண்டு வரை போரிட்ட தமிழ் மன்னர்கள் பாண்டியர்கள் மட்டுமே. அந்த வரலாற்றுக் காழ்ப்புணர்வின் அடிப்படையில் பாண்டியன் என்ற சொல்லின் 'அன்' நீக்கி பாண்டி என்று இகழ்ச்சியோடு விளிக்கிறார்கள்.

இந்தப் பாண்டிகளின் தலைநகரில் தான் மலையாள் நடிக. நடிகைகள், இயக்குநர்கள் பெரும்பான்மையினர் வசிக்கின்றனர். மோகன் லால் நடிகர் பாலாஜியின் வீட்டு மருமகன். மம்முட்டி இங்கு வந்து பல வருடம் ஆகிறது. ஜெயராமின் தாக்கப்பட்ட வீடு பல வருடமாக இங்கேதான் இருக்கிறது. ஏ.வி.எம்,லும், பிரசாத்திலும் அவர்களின் சூட்டிங் நடக்கிறது. தமிழ்நாடு மலையாள சமாஜம் லட்சக் கணக்கான உறுப்பினர்களோடு கோலகலமாய் ஓணம் கொண்டாடுகிறது. தமிழர்களோடு தான் 'வாழ்கின்றனர்'. ஒரு தமிழர்தான் அவர் வீட்டுக்கு தண்ணீர் கேன் சப்ளை செய்கிறார். ஒரு தமிழ் பெண்தான் வேலைக்காரியாக இருப்பார். அன்றாடம் தமிழர்களோடு புழங்குபவர்கள் தான் விடாது சொல்கிறார்கள் தமிழர்கள் திருடர்கள், கோழைகள், ஏமாற்றுக் காரர்கள் என்று.

தமிழர்களை இழிவுபடுத்தும் இந்தப் படங்கள் சென்னையிலும், கோவையிலும் வெளியாகின்றன. காம்ப்ளக்ஸ் திரையரங்குகளில் நம் தமிழ் சமூகம் வேறு படம் பார்த்துவிட்டு வெளியில் வர ? பாவம் இந்தப் பாண்டிகள் என்று ஏளனப் புன்னகையோடு கடந்து போகிறார்கள் பக்கத்துத் திரையரங்கத்திலிருந்து வெளிவரும் மலையாளிகள். கேரளத்தில் இது போன்ற ஒன்றை கற்பனை கூட செய்ய முடியாது. திரையரங்கம் சூறையாடப்படும். ஒரு காட்சி அல்ல ஒரு ரீல் கூட ஓடாது.

தமிழ் படங்களில் மலையாளிகளை கேவலப் படுத்தவில்லையா என்று கேட்கலாம். தமிழ் சினிமாவில் நாயர் டீக்கடை என்பது கற்பனை நகைச்சுவை கடைதானே. உங்கள் மனதைத் தொட்டு சொல்லுங்கள். எந்த டீக்கடை நாயர் நம்மை பார்த்து சிரித்திருக்கிறார். மூன்றாம் தாரத்து பிள்ளைகளைப் போலத்தானே நம்மை நடத்துகிறார்கள். வெறுப்பை முகப் பரப்பெங்கும் தேக்கி வைத்திருக்கும் மாந்தர்களே கல்லாப் பெட்டியில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களின் விருந்தோம்பல் மனித நாகரீகத்துக்கு உட்பட்டதல்ல.

நல்ல மலையாளப் பாத்திரங்கள் தமிழில் உண்டு. கே.பாக்யராஜின் அந்த ஏழு நாட்கள் படத்தின் கதாநாயகன் மாதவன் பாலக்காட்டு மாதவன்தானே. இன்றைக்கும் பேசப்படும் பாத்திரம்தானே அது. மணிவண்ணன் பல படங்களில் நல்ல மலையாளியாக வலம் வருகிறார். 'அலைபாயுதே'யில் அழகம்பெருமாள் பாத்திரம், 'தினந்தோறும்' ல் கொச்சின் ஹனிபா பாத்திரம் இவையெல்லாம் தமிழ் சினிமா உருவாக்கிய, மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்ட பாத்திரங்கள் தானே. இது போல் ஒன்றை காட்ட முடியுமா மலையாள சினிமா.

தமிழ் சினிமா நாணப்பட வேண்டிய இடமொன்று உண்டு. அது மலையாளப் பெண் பாத்திரம் உருவாகும் இடம். ஏறக்குறைய முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னால் அவர்கள் கைவிட்ட ஜாக்கெட் பாவாடையோடுதான் இன்றைக்கும் அவர்கள் 'சின்னக்கலைவாணர்' விவேக்கு டீக் கொண்டு வருகிறார்கள். தமிழ் சினிமா உருவாக்கும் சித்திரத்திலிருந்து நம்மவர்கள் கேரளத்தில் 'அஞ்சரைக்குள்ள வண்டி'யும், 'சொப்பன சுந்தரிகளும்' 'அடிமாடு'களுூம் நிகழ்ந்து கொண்டிருப்பதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். மலையாள சினிமா என்றாலே பிட் படம் என்று கருதும் பெரும்பான்மை இங்குண்டு. அந்தப் பாவத்தில் பாதிதான் நமக்கு பங்கு. (மலையாளிகளே அது போன்ற படங்களை தயாரிக்கவும் செய்தார்கள்.

நடிகர் கொச்சின் ஹனிபாவே சில்க் ஸ்மிதாவை வைத்து பல படங்களைத் தயாரித்தவர்). கேரளப் பெண்கள் தமிழ் பெண்களை விட தைரியமாக பேசக் கூடியவர்கள். வாதிடக் கூடியவர்கள். அதனடிப்படையிலும் தமிழ் சினிமாவின் செல்வாக்கிலும் தமிழர்கள் மலையாளப் பெண்களைப் பற்றி உருவாக்கிக் கொண்ட கேவலமான மனச்சித்திரம் அது.

*- அடுத்த பேப்பரில் தொடரும்*

Door To Door
2 x Tea Carton for £ 19.50
GLEN CARRIERS
Most Trusted and Reliable Name in the Trade Since 1985
GlenCarriers
Laksiri Seva
(Glen Carriers Forwarding Limited)
• இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் கப்பல் அல்லது விமான மார்க்கமாகவும் பொதிகள் குறைந்த விலையில், பாதுகாப்பாகவும், நம்பிக்கையாகவும் அனுப்பப்பட்டு, உரிய நேரத்தில் கையளிக்கப்படும்.
• 30 வருட கால அனுபவமும் திறனும் மிக்க உலகளாவிய சேவைக்கு பெயர் பெற்றது எங்கள் நிறுவனம்
இலங்கையில் எப்பாகத்திலும் நேரடி விநியோகம் செய்யப்படும்
Collection from £ 10 within London
Collection from your door point in any part of UK or Europe
Colombo Warehouse | Laksiri Seva Pvt Ltd. 66, New Nuge Road, Peliyagoda, Colombo Telephone: + 94 1129 177 29-31
Eastern Province Warehouse | Laksiri Seva Pvt Ltd. 26, Hmyl Lane, Main Street, Addappallam, Ninthavur. 0672 0510 50-51
Tel : 020 8743 7353 || 14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ
Web : www.glencarriers.com
Email : info@glencarriers.com

# சினிமா




தமிழ் சினிமாவில் கடந்த சில காலங்களாக பெண் இயக்குனர்கள் எடுத்த படங்கள் வணிகரீதியாக சோபிக் கவில்லை என்பது அறிந்த விஷயம் தான். 'ரொமாண்டிக் காமடி' எனும் கதை வட்டத்திற்குள் மட்டுமே பெரும் பாலும் சுற்றி வருவார்கள். வெப்பம், மாலினி 22 பாளையங் கோட்டை உள்ளிட்ட மாறுபட்ட படங்கள் வந்தாலும் மக்களிடம் பெயரை பெறத்தவறின. தற்போது பூவரசம் பீப்பீ எனும் படைப்புடன் களம் இறங்கி இருக்கிறார் மற்று மொரு பெண் இயக்குனர் ஹலிதா ஷமீம். புஷ்கர் காயத்ரி, மிஷ்கின் மற்றும் சமுத்திரகனி ஆகியோரிடம் பணிபுரிந்த அனுபவங்கள் கொண்டு ஜாலியாகவும் சமூக பொறுப்புடனும் தன் முதல் படம் செய்திருக்கும் ஹலிமாவிடமிருந்து இனியும் சில நல்ல படங்களை எதிர்பார்க்கலாம்.

சிறுவர்களுக்காக பெரியவர்கள் நடித்து வந்த மாயா ஜாலப் படங்கள் ஒரு காலம். சிறுவர்களுக்காக சிறுவர்கள் நடித்து வந்த சிறுவர் படங்கள் ஒரு காலம். பெரியவர் களுக்காக சிறுவர்கள் நடித்து வெளிவரும் கோலி சோடா போன்ற படங்களின் வரிசையில், கோலி சோடாவில் தூக்கலாக தெரிந்த சிறுவர் ஹீரோயிசத்தை எதார்த்தமாக காட்டி நம் மனதில் நச்சென இடம் பிடிக்கிறது இந்த பூவரசம் பீப்பீ.

குறைவாகப் படித்தாலும், சேட்டை செய்வதில் நிறைவாக இருக்கும் 6ம் வகுப்பு பள்ளி மாணவர்கள் மூன்று பேர் தேர்வு எழுதிவிட்டு விடுமுறையை கழிக்கி றார்கள். எப்போதும் ஒன்றாகவே ஊரை சுற்றும் இந்த மூன்று மாணவர்களும் ஆற்றில் குளிக்கும் போது, ஒரு பெண் பலவந்தம் படுத்தப்படுவதை தொலைவில் இருந்து பார்க்கிறார்கள். அதை என்னவென்று அறியா சிறுவர் களுக்கு மறுநாள் தான் தெரிகிறது அந்த பெண் கொலை செய்யப்பட விஷயம்.

மழை காரணமாக ஆற்று வெள்ளத்தில் மூழ்கி இறந்து விட்டால் என்று அந்த ஊர் மக்கள் நினைக்க, பொலிசும் அதையே நம்பி கேசை முடிக்கிறது. ஆனால், அந்த பெண் கொலை செய்யப்பட்டதை அறிந்த அந்த சிறுவர்கள், தொலைவில் இருந்து அந்த சம்பவத்தைப் பார்த்ததால், கொலையாளிகளின் முகம் தெரியாமல் போகிறது.

எப்படியாவது அந்த கொலையாளிகளைக் கண்டு பிடித்து, உண்மையை தெரியப்படுத்த வேண்டும் என்று களத்தில் இறங்கும் இந்த மூன்று மாணவர்கள் எப்படி அந்த கொலையாளிகளை அறிந்துக் கொள்கிறார்கள், அவர்கள் தான் கொலையாளிகள் என்பதை ஊருக்கு எப்படி தெரியப்படுத்தி, அவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்கிறார்கள் என்பதை தான் ரொம்ப சத்தமாக சொல்லியிருக்கிறார்கள்.

பள்ளியில் பாட்டு, மாணவர்களின் சேட்டை என்று, ஆரம்பத்தில் நம்மை தலை சொறிய வைத்தாலும், அந்த கொலை சம்பவத்திற்குப் பிறகு, மாணவர்கள் துப்பு துலக்கும் விதமும், அதற்காக அவர்கள் போடும் திட்டங் களும் கதைக்குள் நம்மை இழுக்கிறது.

படிப்பு மட்டுமே முக்கியம் அல்ல, அதையும் தாண்டி மாணவர்களிடம் நிறைய இருக்கிறது என்பதையும், அதை நாம் வளர்த்துவிடவில்லை என்றாலும் பரவா யில்லை, அதை அழித்துவிடாமல் இருந்தாலே போதும், என்ற கருத்தை, காமெடியாகவும் அதே சமயம் திகில் அனுபவத்தையும் கலந்து சொல்லியிருக்கிறார் புதுமுக பெண் இயக்குனர் ஹலிதா சமீம்.

கதையின் நாயகர்களாக நடித்துள்ள சிறுவர்கள் பிரவீன் கிஷோர், வசந்த், குரவகாளை ஆகிய மூன்று பேரும் நடிப்பில் பெரியவர்களாக தெரிகிறார்கள். எந்தவித பயமும் இன்றி, ரொம்ப சாதரணமாக காட்சிகளைப் புரிந்து நடித்தி ருக்கும் இவர்களுடயை நடிப்பு காட்சிகளை சிதைக் காமல் பாதுகாக்கிறது.

வில்லன்களாக நடித்துள்ள காளை, சாய் ஹரி, சுந்தர், கார்த்திக் ஆகியோரும் தங்களின் பணியை சிறப்பாக செய்திருக்கிறார்கள். இரண்டாம் நாயகனாக மனோஜ் பரம்ஹம்சாவின் கேமரா ஜாலத்தை சொல் லலாம். பசுமை போர்த்திய நிலப்பரப்பை அற்புதமான கோணங்களில் சிறைப்படுத்தி நம் கண் முன் சிறகடிக்க வைத்திருக்கிறார் மனிதர். 'நரை முடி வந்து நாளு மாசம் கூட ஆகல அதுக்குள்ள தத்துவம் பேசறியா?', 'தேவாங்கை கூட குள்ள மனுஷன்னு சொல்லி காசு பறிப்பான்', 'நீயா நானா கோபி தமிழ் மாமாடா' என ஆங்காங்கே ஹலிதாவின் வசனங்கள் அருமை.

அருள்தேவின் இசையில் பாடல்கள் நன்று. குறிப்பாக பின்னணி இசை மேலும் சிறப்பு.

தேவையற்ற பரபரப்பை கூட்டாமல் போதுமான படபடப் புடன் இடைவேளை வரை சீட்டின் நுனிக்கு நம்மை கொண்டு செல்கிறது இந்த கில்லி பயல்களின் சாகசங்கள். ஆனால் அதற்குப்பிறகு எப்.எம். ரேடியோ சீன்கள் அதிகம் ஆக்ரமிப்பதால் விறுவிறுப்பு குன்ற துவங்குகிறது. மற்ற தமிழ் படங்களைப்போலவே பள்ளிக்கால காதலை காட்டி இருப்பது திருஷ்டி.

பலமுறை இந்த சிறுவர்கள் வில்லன்களை பதற வைத்தாலும் முட்டாள்களாக அவர்கள் சித்தரிக்கப்பட்டு இருப்பது ஏன்? தேவையே இல்லாமல் எதற்கு பூவரசம் பீப்பீயை வாசித்து தங்களை வில்லன்களிடம் அடையாளப் படுத்திக்கொள்ள வேண்டும் இப்படி கேள்விகள் வலுவாக நிற்கத்தான் செய்கின்றன.

மற்றபடி சுவாரஸ்யமான களம் மற்றும் சரியான சிறுவர் களை தேர்ந்தேடுத்து இப்படி ஒரு படைப்பை தந்திருக்கும் இயக்குனர் ஒளிப்பதிவாளர்/தயாரிப்பாளர் மனோஜ் பரமஹம்சா ஆகியோரை நிச்சயம் பாராட்டலாம்.

பெரிய பட்ஜெட்டில் பொம்மையை ரசிப்பதற்கு பதில் இதை நிச்சயம் ஒருமுறை பார்த்து மகிழலாம்

*- அகிலன் (வண்ணக்கனவுகள் வலைப்பதிவு)*

## சினித்துளி

### கோச்சடையான் இரண்டாம் பாகம்!



கோச்சடையான் படம் கடந்த மாதம் 23ந் தேதி உலகம் முழுவதும் வெளியானது. நடித்து முடித்த கையோடு ரஜினி தற்போது 'லிங்கா' படத்தில் பிசியாக நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு விறு விறுப்பாக நடக்கும் நிலையில், லிங்காவை தீபாவளிக்கு ரிலீஸ் செய்ய திட்ட மிட்டுள்ளனர். 'லிங்கா' வெளியானதும் கோச்சடையான் படத்தின் 2 ம் பாகத்துக்கான படவேலைகள் துவங் குகிறது. படத்தை கோச்சடையான் முதல் பாகத்தைத் தயாரித்த தயாரிப்பாளர்களே தயாரிக்கின்றனர்

இரண்டாம் பாகம் நிஜமும், அனிமேஷனும் கலந்த படமாக இருக்கும் என தெரி கிறது. ரஜினி நிஜமான ரஜினியாகவும், அனிமேஷன் ரஜினியாகவும் வருகிறார்.

### மலையாளப்பக்கம் ஒதுங்கிய கமல்!



'தமிழில் தயாராகும் இரண்டு மலையாள படங்கள் ரீமேக்கில் கமல் நடிக்கவிருக்கிறார். திரிஷ்யம் படத்தின் ரீமேக்கில் கமல் நடிப்பது ஏற்கனவே இறுதி முடிவாகி யுள்ளது. மோகன்லால் மீனா ஜோடியாக நடித்து கேரளா வில் வெளியாகி வசூலைக் குவித்த இப்படம் இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் ரிமேக் ஆகிறது. அதன் தமிழ் பதிப்பில் கமல் நடிக்கிறார் இதை தொடர்ந்து மோகன்லால் நடித்த பெருச்சாளி படத்தை யும் தமிழாக்க கமல் முடிவெடுத்திருக்கிறார்

உத்தம வில்லன் படத்தில் கமல் தற்போது நடிக்கிறார். இந்த படம் முடிந் ததும் இரண்டு மலையாள ரீமேக் படங்களிலும் நடிக்கிவிருக்கிறார்.

### இணைந்த வெங்கட்பிரபு-சூர்யா!



தம்பியை வைத்து பிரியாணி கொடுத்தவர் தற்போது அண்ணனை வைத்து அடுத்த படத்துக்கு ரெடியாகி விட்டார். கடந்த தமிழ் புத்தாண்டு அன்று வெங்கட் பிரபு இயக்க போகும் சூர்யா படத்திற்கு பூஜை போடப் பட்டது. முதன் முதலாக இப்படத்தில் வெங்கட் பிரபுவுடன் கவிஞர் மதன் கார்க்கியும் இணைந்து வசனம் எழுத உள்ளார். இதை அவர் டுவிட்டர் வலைத்தளத்தில் தெரி வித்துள்ளார். ஏனைய தொழில்நுட்பக்கலைஞர்கள் நடிகர் கள், நடிகைகள் இனிமேல் தெரிவு செய்யர்ாடுவார்கள்

### ஒரே கதை இரண்டு படம்!



சமீபத்தில் வெளியாகி வெற்றியடைந்த யாமிருக்க பயமே படமும், விரைவில் வெளிவரவிருக்கும் 'அரண்மனை' படமும் ஒரே கதை. இந்நிலையில், ரவி கே சந்திரன் இயக் கத்தில் ஜீவா நடித்து வரும் 'யான்' படத்தின் கதையும், ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் 'கத்தி' படத்தின் கதையும் ஒரே கதை என்று கிசுகிசுக் கின்றனர் திரையுலகினர். இத்தனைக்கும் 'யான்' படத்தின் கதையே ஏற்கனவே வெளியான 'மரியான்' கதையை ஒத்திருக்கிறது என்ற சொல்லப்படுகிறது.

'யான்' படத்தின் கதைப்படி வெளிநாட்டுக்கு செல்லும் ஜீவாவை தீவிர வாதிகள் கடத்திச் சென்று பிணயக்கைதியாக அடைத்து வைக்கின்றனர். அவர் களிடமிருந்து ஜீவா எப்படி தப்பிக்கிறார் என்பது தான் 'யான்' படத்தின் கதை. 'கத்தி' படத்தின் கதையில் சுமார் 90 பேரை தீவிரவாதிகள் கடத்திச் செல்வதும் அவர்களை விஜய் மீட்பதுதான் 'கத்தி' படத்தின் கதையாம்.






# MercuryTalk

**EXCELLENCE IS MORE THAN A GOAL. IT'S A PROMISE**

**All in one Package for Residential Customers**

All for Just **£ 39.95** (inc VAT)

- Home Phone Line
- Unlimited Call
- Unlimited high speed broadband



- Up to 24 Mb download speed
- Attractive rates
- No call set up charge
- Simple and straight forward billing
- No hidden charges
- 24 hour UK based technical support
- IP Telephony services at affordable rates

NEVER BEATEN ON PRICE GUARANTEED

*One Company*
*One bill*
*One Great Savings*

Unlimited calls to UK local, national fixed lines & 0845, 0870 numbers only. Minimum contract term apply. Terms & Conditions Apply. Visit our website for full terms & conditions.

020 8550 6677 | sales@mercurytalk.net

www.mercurytalk.net

# CSH Homecare

Independent living **with care and respect**

## Vacancies Available




Surrey பகுதியில் முழுநேர பகுதிநேர வேலைக்கு ஆட்கள் தேவை. UKயில் வேலை செய்யும் உரிமம் இருத்தல் வேண்டும். அத்துடன் சொந்த வாகனமும் இருத்தல் அவசியமாகும்

**சிறப்பு சலுகைகள்**

- ✓ மணித்தியால விகிதத்தில் சிறந்த ஊதியம் வழங்கப்படும்
- ✓ பராமரிக்கச் செல்லும் நேரங்களில் போக்குவரத்துக்குரிய செலவீனங்கள் வழங்கப்படும்
- ✓ உங்கள் வசதிக்கேற்ப நேரங்களைத் தேர்ந்தெடுக்கும் வசதி உண்டு
- ✓ இலவச சீருடை வழங்கப்படும்
- ✓ 5 நாட்கள் முழுதும் சேவைக்குரிய பயிற்சிகள் வழங்கப்படும்

We are looking for caring & compassionate people to work full time or part time in the Surrey area. You must be eligible to work in the UK and have access to your own transport.

**Benefits include:**

- ✓ Competitive hourly rate
- ✓ Paid mileage between client visits
- ✓ Free uniform
- ✓ Flexible working hours
- ✓ Fully comprehensive 5-day training

The role includes supporting people with everyday tasks such as personal care, practical support around the home and social activities.

OUR RESPECT PLEDGE

**At CSH Homecare we put people first.**

Please note this role is subject to satisfactory interviews, reference, DBS checks and completion of training.

For more information or to apply,

Visit **www.csh-homecare.co.uk**, Call **01372376327**, Mail **info@cshhomecare.co.uk**

or write to **CSH Homecare, Stocks House, 9 North Street, Leatherhead, Surrey KT22 7AX**